யுனெஸ்கோ

கூரியர்

மே 1984 – தனிப்பிரதி ரூ. 2/-

தமிழரின் வாழும் பண்பாடு

அமைதிக்காகச் செயல் திட்டம்

எல்லா நாடுகளிலுமுள்ள மக்கள் உலகப் போர் வருமென அஞ்சி வாழுதல் அறிவீனமும் பொறுக்க இயலாததுமாகும். அத்தகைய போர் திட்டமிட்டபடியோ தற்செயலாகவோ நிகழுமெனில், அது அணுக் கருவிப் போராகவே இருக்கும்.

அது வருங்காலத்தில் நிகழும் என்பதை மட்டுமல்ல, அதன் இன்றைய தோற்றத்தையே எண்ணும்போது நாம் நடுங்குகிறோம். இன்று மிகுதியாக வளர்ந்து வரும் ஆபத்தான வாக்குவாதமும் அச்சுறுத்தும் கருத்துகளும், பல நாடுகளில் கொந்தளிக்கும் வன்முறையும், இன்றைய உலகைப்போல் பத்து மடங்கு உலகை அழிக்கவல்ல போர்க் கருவிகள் இருப்பினும், இன்னும் மிகுதியாக கருவிகளைக் குவிக்க வேண்டுமெனக் கூறப்படும் வெறிப் பேச்சுகளும் நம் அன்றாட வாழ்வைக் குலைத்து, உலக பொருளாதாரத்தையும், மனித இனத்தின் நம்பிக்கையையும் சிதைத்து வருகின்றன.

இத்தகைய போரை எதிர் நோக்குவதைவிட அனைவரும் தற்கொலை செய்து விடுமோமென ஒரு நகர மக்கள் வாக்களித்ததாக நாம் வாசிக்கும்போது, நாமும் நம் மக்களும் எவ்வாறு அமைதியான, செழிப்பான வாழ்க்கைக்கு வழி வகுக்க முடியும்? அழிவு நாளுக்கு இன்னும் சில மணித்துளிகளே உள்ளன என்று உலகின் தலைசிறந்த அறிவியலார் கூறும்போது, நாம் எவ்வாறு வழக்கமான, பயனுள்ள வாழ்க்கை வாழ முடியும்! அப்போரில் பிழைப்போருக்கு இரக்கம் காட்டாமல், அணுக்கருவிப் போரின் அழிவின் பிறகு உலக மக்களுள் 50 சதவீதம் பேரே பிழைப்பார்கள் என்பதை நாம் கேட்கும்போது, அதனால் நாம் எத்தகைய ஆறுதல் பெற முடியும்?

உலக அமைதிப் பொறுப்பை உலக மக்களே ஏற்கவேண்டுமெனும் உறுதிப்பாட்டுடன், கிரீஸ் நாட்டுப் பிரதிநிதி எனும் முறையில், கடந்த அக்டோபரில் பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டில், இளவேனிற் காலத்தின் முதல் நாளாகிய மார்ச் 22இல் சரியாக நண்பகல் வேளை உலகில் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய எல்லாப் பகுதிகளிலும் ஒரு மணித்துளி நேரம் எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று முன்மொழிந்தேன். அம் மணித்துளி நேரத்தில் எல்லாப் போக்குவரத்தும் முற்றிலும் நின்றுவிடவேண்டும்; ஆலைத் தொழிலாளர் கருவிகளைக் கீழே வைத்துவிடவேண்டும்; வகுப்பறைகளில் ஆசிரியரும் மாணவரும், நீதி மன்றங்களில் நீதிபதிகளும் எழுந்து நிற்கவேண்டும்; உலகில் நாடாளுமன்றங்களில் அமர்வு நிறுத்தப்படவேண்டும்: அனைவரும் அமைதிபெற உறுதியுடன் விழைகின்றனர் எனும் உலகளாவிய உறுதிமொழியில், குடியிருப்புகளிலும் பயிற்சிக் களங்களிலும் இருக்கும் படைவீரர் பங்கு பெறவேண்டும்.

இப்பரிந்துரையைப் பொது மாநாட்டுத் தீர்மானமாக நிறைவேற்றியது எனக்குப் பெரும் ஊக்கத்தை அளித்தது. இத்தீர்மானத்தைப் பற்றிய செய்தியைப் பரப்பி, உலக முழுவதும் அதில் பங்கு பெறுமாறு தம் சாதனங்களைப் பயன்படுத்தவேண்டுமென யுனெஸ்கோவையும் அதன் உறுப்பு நாடுகளையும் வேண்டுகிறேன். அதற்குரிய காலம் குறுகியது என்பதை உணர்கிறேன். மற்றொரு ஆழ்ந்த பொருளிலும் காலம் குறுகியதாகவே இருக்கின்றது.

மெலினா மெர்க்கூரி
கிரேக்கக் குடியரசின்
பண்பாட்டு, அறிவியல் அமைச்சர்

பொது மாநாடு ......

1984, மார்ச் 22ஆம் நாள் சரியாக நண்பகல் ஒரு மணித்துளியை ஒதுக்கிவைக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. ஆடவ, மகளிர் சிறுவர் அனைவரும், எவ்வேலை செய்வோராக இருப்பினும், தம் செயல்களை நிறுத்தி அமைதி, பன்னாட்டு ஒப்புரவு, அனைத்துலக கூட்டுறவு ஆகியவற்றை விரும்புவதாக ஒரே மனதாகக் காட்டவேண்டும்.

(1983 நவம்பர் 23இல் 29ஆம் நிறைவுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)

'யுனெஸ்கோ கூரியர்' வாசகர் பேரவை
தமிழ்நாடு மாநில அமைப்புக் கூட்டம்

'யுனெஸ்கோ கூரியர்' வாசகர் பேரவையின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கூட்டம் 8-4-'84 அன்று சென்னை மத்திய நூலகக் கருத்தரங்குக் கூடத்தில் திரு இரா. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் வாசகர்கள் அக் கூட்டத்தில் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். உலகளாவிய முறையில் உலகின் 27 மொழிகளில் வெளி வந்து கொண்டிருக்கும் 'கூரியர்' இதழின் பல்வேறு சிறப்பம்சங்களையும் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றல் மிகு அருங் கருவியாக இதழ் அமைந்து வருவதையும் அவ்விதழ் தமிழ் மக்களிடையே விரைந்து பரவ வேண்டியதன் அவசியத்தையும் பற்றி பலரும் பேசினர்.

கூரியர் வாசகர் பேரவையின் மாநில அமைப்பின் தலைவராக பேராசிரியர் வள்ளுவன் கிளாரன்சும், திரு இரா. நடராசன் (மொழிபெயர்ப்பாளர், தமிழ்நாடு அரசு சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையம்) துணைத் தலைவராகவும், திரு இரா. இராமசாமி செயலாளராகவும் திரு நா. சொ. சோமசுந்தரம் துணைச்செயலாளராகவும் திரு கி. அயோத்திராமன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் திரு நடன. காசிநாதன் (இயக்குநர் (பொறுப்பு) தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத் துறை) திரு தெசிணி, (ஆசிரியர் 'கவிதை' திங்களிதழ்) திரு. வி. எஸ். சம்பத் குமார், திரு. மீரான் பண்ணையார் ஆகியோர்களடங்கிய செயற் குழுவும் அமைக்கப்பட்டது. 'கூரியர்' தமிழ்ப்பதிப்பின் நிர்வாக ஆசிரியர் திரு. மணவை முஸ்தபா வாசகர் பேரவையின் காப்பாளராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அடுத்து வெளிவரவிருக்கும் 'தமிழரின் வாழும் பண்பாடு' (The living culture of the Tamils) சிறப்பிதழை (கூரியர் வாசகர் பேரவை சார்பில் வெளியிட முயற்சி மேற் கொள்வதென்றும் அப்போது 'தமிழ்ப் பண்பாடு பற்றிய 26 உலக மொழி இதழ்களைக் கொண்ட கண் காட்சியை நடத்துவதென்றும், ஜூலையில் 'அறிவியல் தமிழ் வளர்ச்சியில் கூரியர் இதழின் பங்கு' என்ற தலைப்பில் கருத்தரங்கை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கூரியர் இதழ் நிர்வாக ஆசிரியர் திரு மணவை முஸ்தபா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

''உலகிலேயே மிகப் பல மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கும் 'கூரியர்' லட்சக்கணக்கான வாசர்களைக் கொண்டுள்ளது. வாசகர்கள் எதையெல்லாம் விரும்புகிறார்களோ அதையெல்லாம் கொடுக்கும் வியாபார நோக்கம் சிறிதும் இல்லாது, உலகின் இன்றையச் சூழ்நிலையில் வாசகர் எதையெல்லாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதையெல்லாம் அறிவுப் பூர்வமாக, உலக அறிஞர்கள். ஆராய்ச்சி வல்லுநர்களின் உறுதுணையுடன் எழுதப்படும் ஆய்வுக் கட்டுரைகள் செயல் திறனும் ஆக்கச் சிந்தனையுமிக்க யுனெஸ்கோ தலைமையக ஆசிரியர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளையும், அரிய படங்களையும் கொண்டு வெளிவருகிறது. உலகெங்கும் உள்ள மக்கள் ஒருவரையொருவர் புரித்து கொண்டு நெருக்கமடையச் செய்வதில் கூரியர் பங்குபணி மகத்தானது ஆகும். இதன்மூலம் உலக மக்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளவும் பரஸ்பரம் குறை நிறைகளை உணர்நது தெளியவும் அதன் மூலம் ஒன்றுபட்டு முன்னேறவுமான அரிய வாய்ப்பையும், புரிந்துணர்வையும் உலக மக்களிடையே கூரியர் இதழ் ஊட்டி வருகிறது என்பதை பல்வேறு சான்றுகளுடன் விளக்கினார்.

''உலக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பல்வேறுமொழி, கலாச்சார, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கிடையே ஒருங்கிணைவான ஒத்துழைப்பையும் அதன் பயனாக ஆக்கபூர்வமான முன்னேற்றத்தையும் உலக மக்களுக்கிடையே உருவாக்க யுனெஸ்கோ தூதுவனாக (Massenger) கூரியர் அமைந்துள்ளதனால் அதன் வாசகர்கள் ஒவ்வொருவருமே அதன் தூதுவர்களாக அமைந்து, யுனெஸ்கோவின் உன்னத இலட்சியங்களை மக்களிடையே பரப்பும் சமாதான, சகவாழ்வுத் தொண்டர்களாகப் பணியாற்றும் பெரும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

கூரியர் இதழ்களை மனந்திறந்து வெளிப்படையாக விமர்சிப்பதன் மூலம் அரிய ஆலோசனைகளையும் கூரியர் வாசகர் பேரவை வழங்க முடியும். இக்கருத்துக்கள் உரிய முறையில் கூரியர் தலைமையாசிரியர் அவர்கட்கு அனுப்பப்படும்.

உலகெங்கும் கூரியர் வாசகர் பேரவைகள் உருவாக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் இத்தகைய வாசகர் பேரவைகள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்பேரவைகள் அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டு உரிய செயல் திட்டங்களோடு செயல்படலாம். நாடெங்கும் சிதருண்டு கிடக்கும் கூரியர் வாசகர்களின் ஆர்வமும் ஆக்கச் சிந்தனையும் செயல் வடிவம் பெற வேண்டும். பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கருத்தரங்குகளையும் கூரியர் விமர்சனக் கூட்டங்களையும் நடத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

''கூரியர்'' வாசகர் பேரவைச் செய திரு. இராமசாமி இறுதியில் நன்றி கூறினர்

யுனெஸ்கோ கூரியர்
வாசகர் பேரவை

அமைக்க விரும்புவோர்
கீழ்க்கண்ட முகவரியோடு
தொடர்பு கொள்க.

'யுனெஸ்கோ கூரியர்'
18, கிழக்கு ஸ்பர் டாங்க் சாலை
சென்னை-600 031

உலகில் தமிழர்

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 3.5 கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 75,00,000. அயல் நாடுகளில் சுமார் ஒருகோடி தமிழர்கள் வாழ்கின்றனர். தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு — குறிப்பாக இலங்கைக்கு—சென்று குடியேறிய தமிழர்கள், பாண்டிய சோழ அரசர்கள் வல்லமையுடன் திகழ்ந்த காலத்தில் இங்கிருந்து சென்றார்கள். இந்தத் தமிழர்கள், அயல் நாடுகளில் வாழ்ந்த மக்களுடன் தொடர்புகொண்டபோது, முதலில் தங்கள் பண்பாட்டுக் கூறுகளை இழந்தார்கள்; பின்னர் தங்கள் மொழியையும், இறுதியில் தங்கள் சமயவழக்காறுகளை இழந்தனர்.''

—தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம்நடத்திய 'தமிழ்ப் பண்பாட்டு அறிமுக' வகுப்பு நிறைவு விழாவில் துணை வேந்தர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்.

தமிழ்ப் பண்பாடு

''அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள், அந்த நாடுகளையே தங்கள் சொந்தநாடுகளாகக் கருத வேண்டும்; அந்நாடுகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும். தமிழர்கள் தங்கள் பண்பாட்டையும், கலைகளையும், நாகரிகத்தையும் அந்த நாட்டுக்கு வழங்கி, அந்த நாட்டின் தலை சிறந்தனவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். இலங்கையில் குறைந்தது ஆயிரம் சிங்களவர்களுக்காவது தமிழ்ப் பண்பாட்டைக் கற்பித்திருந்தால், அங்கு இத்தனை அட்டூழியங்களை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் தனித்து வாழலாகாது; மற்றவர்களையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. இவை இரண்டுமே ஆபத்தானவை. பாவேந்தர் பாரதிதாசனின் நோக்கு, தமிழ், தமிழ்நாடு எனத் தொடங்கி, 'உலகத் தமிழ்ச் சகோதரத்துவம்' என விரிவடைந்தது. ''கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்'' என்றார் அவர். தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேர் அன்பு. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதுதான் தமிழர் கோட்பாடு. ''பெயக்கண்டும் நஞ்சுடமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்பதுதான் தமிழர் வாழ்க்கைத் தத்துவம். தமிழ்ப் பண்பாட்டின் இந்தச் செய்தியை உலக நாடுகளில் எல்லாம் பரப்புதல் வேண்டும்.''

—தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் நடத்திய 'தமிழ்ப் பண்பாட்டு அறிமுக' வகுப்பில் குன்றக்குடி அடிகளார் நிறைவுரை.

இந்தியாவில் யுனெஸ்கோவின் பணி

இந்திய தேசிய ஆணையம்

யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகள் பெரும்பாலானவற்றில் இருப்பது போன்று இந்தியாவிலும் யுனெஸ்கோவுடன் ஒத்துழைப்பதற்கென இந்திய தேசிய ஆணையம் இயங்கி வருகின்றது. அரசுச் சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணையம், யுனெஸ்கோவின் நோக்கங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு இந்திய அரசுக்கு உதவி புரிந்துவருகிறது.

செய்தித் தொடர்பு

மக்களாட்சி முறை மேம்பாட்டிற்கான ஒரு சாதனமாகச் செய்தித்தொடர்பு சாதனங்களை உருவாக்குவதற்கு யுனெஸ்கோ உதவிபுரிந்து வருகிறது. பொதுமக்கள் செய்தித் தொடர்புக்கான மேம்பட்ட வழி முறைகள், உத்திகள் வாயிலாகச் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி செய்வதே முக்கிய நோக்கம். தொலைக்காட்சி இணைவனம், தொலைக்காட்சிப் பயிற்சி, செயற்கைக்கோள் போதனைத் தொலைக்காட்சி ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்காக யுனெஸ்கோ, ஃபோர்டு அறநிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் இந்தியத் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிலையம் நிறுவப் பெற்றுள்ளது. இந்திய மக்கள் செய்தித் தொடர்பு நிலையம், தேசியப் புத்தக நிறுவனம், டெல்லிப் பொது நூலகம் ஆகியவற்றுக்கும் யுனெஸ்கே உதவியளித்து வருகிறது.

செய்திக் கடிதம்

இந்த ஆணையம் காலாண்டுக்கு ஒரு முறை "செய்தித் கடிதம்" ஒன்றையும் வெளியிடுகிறது. இதில் இந்தியாவில் யுனெஸ்கேவின் நடவடிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. இச்செய்திக் கடிதம் மிகுதியாக விற்பனையாகிறது. இதனை வெளியிடுவதற்கென யுனெஸ்கோ பங்குப்பணித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 3000 டாலர் வழங்குகிறது. 1984 மார்ச் முதல் இச்செய்திக் கடிதத்தின் இந்திப் பதிப்பையும் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடையாள சீட்டுத் திட்டம்

கல்வி, அறிவியல், பண்பாடு, செய்தித் தொடர்பு ஆகிய துறைகளில் பணியாற்றும் நிறுவனங்களும், தனியார்களும், அயல் நாட்டுச் செலாவணி மற்றும் இறக்குமதிக், கட்டுப்பாட்டு விதிமுறைகளின்றி, இந்திய ரூபாய் நாணயத்தைச் செலுத்தி கல்வி நூல்கள், அறிவியல் சாதனங்கள், கல்வித் திரைப்படங்கள் போன்றவற்றை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதற்கு உதவுவதற்காக வகுக்கப்பட்ட யுனெஸ்கோ பன்னாட்டு அடையாளச் சீட்டுத் திட்டத்தையும் இந்திய தேசிய ஆணையம் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1983-84இல் ஏறத்தாழ ரூ 4 லட்சம் பெறுமானமுள்ள யுனெஸ்கோ அடையாளச் சீட்டுக்களை இந்த ஆணையம் வழங்கியுள்ளது.

பங்குப்பணித் திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ், தேசிய, துணை மண்டல, மண்டல, பன்னாட்டு நிலைகளில் உறுப்பு நாடுகளின் நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்கு தலைமை இயக்குநருக்கு யுனெஸ்கோ அதிகாரமளிக்கிறது. யுனெஸ்கோவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக யுனெஸ்கோவின் பொதுப் பேரவை குறித்துரைத்துள்ள துறைகளில் உறுப்பு நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு யுனெஸ்கோவின் உதவியைப் பெறுவதற்கு இத்திட்டம் வழி வகுக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்காக 1981—83 இல் இந்தியா 25 திட்டங்களைத் தலைமை இயக்குநருக்கு அளித்தது. இவற்றுள் 20 திட்டங்களுக்கு தலைமை இயக்குநர் ஒப்புதலளித்திருக்கிறார். 1984—85-க்கான ஈராண்டுக் காலத்திற்கு, 1984இன் முதல் ஆறு மாதங்களுக்கு 5 திட்டங்களையும், மீதமுள்ள காலத்திற்கு 15 திட்டங்களையும் இந்தியா அளித்திருக்கிறது.

மனித குலத்தின் தொட்டில்

திராவிடர் வாழ்வியல் உண்மைகளுக்கும், நீக்ரோ—ஆஃப்ரிக்கர் வாழ்வியல் உண்மைகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. புவியியலைப் பொறுத்தவரையில். செனகல், மாலி, நைஜர், சாடு, சூடான், எத்தியோப்பியா, சோமாலியா போன்ற ஆஃப்ரிக்க நாடுகள் அமைந்துள்ள அதே அட்சக் கோட்டிலேயே தென்னிந்தியாவும் அமைந்துள்ளது. இந்தியப் பெருங்கடல்தான் தென்னிந்தியாவை ஆஃப்ரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலிருந்து பிரிக்கிறது. இந்தியத் துணைக்கண்டம் ஒரு காலத்தில் கிழக்கு ஆஃப்ரிக்காவுடன் இணைந்திருந்ததாகப் புவியியலறிஞர்கள் கூறுகின்றார்கள். இதற்குக் கடல் உயிரியல் எச்சங்கள் சிறந்த சான்றாக அமையும்.

கிழக்கு ஆஃப்ரிக்காவிலிருந்து தென்னிந்தியா வரையிலுமுள்ள ஆழ்கடலில் ஆய்வுகள் நடத்தினால் பண்டையக் கற்கருவிகளும், மனித எலும்புக்கூட்டுப் புதை படிவங்களும் காணக் கிடைக்கும். தமிழ்கூறும் நல்லுலகின் ஒரு பகுதியாக இருந்த குமரிக்கண்டம் என்னும் பெரும் பரப்பை கடல் கொண்டு விட்டதாகப் பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. கடல் கொண்ட இந்த நிலப்பரப்பு இந்தியாவையும் ஆஃப்ரிக்காவையும் இணைத்த நிலப்பகுதியாக இருக்கலாம். வரலாற்றுக்கு முந்திய காலத்திய புதிய கற்காலப் புரட்சியின்போது, அதாவது, இன்றைய மனித இனத்தின் ஆதி மூதாதை புதிய உத்திகள் மூலம் வரலாற்று நாகரிகங்களுக்கு வித்திட்டபோது இந்த நிலப்பகுதி கடலில் அமிழ்ந்திருக்க வேண்டும். இதனைத்தான் சிலப்பதிகாரம் போன்ற சங்கம் மருவிய நூல்கள்,

"வடிவேலெறிந்த வான்பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலை
யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

எனக் கூறிப்போந்தன.

மனித இனத்துக்கும் குரங்கினத்துக்குமிடையே உயிரின வளர்ச்சி இணைப்பாக இருந்ததாகக் கருதப்படும் குரங்கு மனித இனம், கிழக்கு ஆஃப்ரிக்காவிலும், தென்னிந்தியாவிலும் ஒரே சமயத்தில் தோன்றியதாகக் கருத இடமுள்ளது. தலைசிறந்த தொல்வரலாற்றறிஞரும, தொல்பொருளியலறிஞருமாகிய பியர் டைல்ஹார்டு டி சார்டின் என்பார், "*மனிதனின் தோற்றம்*" என்ற தமது நூலில், "இந்தியா முதல் மலேசியா வரைப் பரவியிருந்த, ஆனால் அடிப்படையில் ஆஃப்ரிக்கக் கண்டத்தில் அமைந்திருந்த வெப்ப மண்டலத்திலும், வெப்ப மண்டலம் அணவிய பகுதியிலும் மனிதன்—குரங்கு உள்ளிட்ட உச்சவுயர்வுப் பால்குடி உயிரினத் தொகுதியின் உருமலர்ச்சி படிப்படியாகத் தோன்றியது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"கிழக்கு ஆஃப்ரிக்கா மனித குலத்தின் தொட்டில்" என்னும் கொள்கையை காமில் ஆரம்பூர்கு, ஹென்றி பிரியுல், லூயி லீக்கே, வான் ரியட்லோவ், மார்சிலின் பூலே, சார்டின் போன்ற உலகப் புகழ்பெற்ற தொல்வரலாற்றறிஞர்களும், தொல் பொருளியலறிஞர்களும் ஆதரிக்கிறார்கள். கிழக்கு ஆஃப்ரிக்காவும், இந்தியத் துணைக்கண்டமும் இணைந்திருந்தன என்பதை மெய்ப்பித்து விடுவோமாயின், இந்தக் கொள்கையினை மாற்றி, 'கிழக்கு ஆஃப்ரிக்காவிலிருந்து தென்னிந்தியா வரையிலான பகுதியை மனிதகுலத்தின் தொட்டில்' எனக் கருத வேண்டியிருக்கும். இக்கருத்து, இஸ்லாமியக் கொள்கைக்கு நெருக்கமானதாகும். இஸ்லாமிய நம்பிக்கையின்படி, மனித குலத்தின் தந்தை ஆதாம், இந்தியாவில் தோன்றியவர்; தாய் ஏவாள், தென் அரேபியாவில் தோன்றியவள்; இவர்கள் இருவரும் ஹரபாத்தில் சந்தித்தார்கள். "அத்தன்" என்னும் தமிழ்ச்சொல் தந்தையைக் குறிப்பதும், கன்னடத்தில் "அவா" என்னும் சொல் தாயைக் குறிப்பதும் கவனிக்கத்தக்கது. தமிழில் "தவ்வை" என்பதும், கோட்டி மொழியில் "அவ்" என்பதும், கொடுகு மொழியில் 'அவே' என்பதும் தாயைக் குறிக்கும் சொற்களாக வழங்கக் காண்கின்றோம்.

டாக்டர் செங்கோர்,
[செனகல் முன்னாள் குடியரசுத் தலைவர்]

யுனெஸ்கோ கூரியர்

உலகைக் காட்டும் பலகணி
மே—1984

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினால் இருபத்தியேழு மொழிகளில் வெளியிடப்படுகிறது.

தமிழ்	ஹிந்தி	கொரியன்
ஆங்கிலம்	ஹீப்ரு	சுவாஹிலி
ஃபிரெஞ்சு	பெர்சியன்	கிரோடே-செர்ப்
ஸ்பானிஷ்	டச்சு	மாசிடோனியன்
ரஷ்யன்	போர்த்துகீஸ்	செர்போ-கிராட்
ஜெர்மன்	துர்க்கிஸ்	ஸ்லோவேன்
அராபிக்	உருது	சீனம்
ஜப்பானிஸ்	கட்டலான்	பல்கேரியன்
இத்தாலியன்	மலேசியன்	கிரீக்

விற்பனை, விநியோக அலுவலகம்:
18, கிழக்கு ஸ்பர்டங்க் சாலை, சென்னை-600 081
ஆண்டுச் சந்தா ரூ. 21

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளாஸ் தெ போந்தநோ,
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் : **எதுவார்து கிளிசான்**

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர் :

மீ. முகம்மது முஸ்தபா (மணவை முஸ்தபா)

May 1984. No. 190

ISSN 30304-3177

பக்கம்

4 **தமிழரின் வாழும் பண்பாடு**
-எஸ். ராமகிருஷ்ணன்

9 **அன்றாட வாழ்க்கைக் காட்சிகள்**
-சுந்தர ராமசாமி

12 **சோறும் சடங்கும்**
தமிழரின் சமையல் கலை
-திலகா பாஸ்கரன்

14 **கடவுளரின் வாயில்**
1. **கல்லிலே மறையுரை**
2. **வெண்கலச் சிலைகள்**
ஆர். நாகசாமி

25 **சிவ நடராசர் பற்றிய சிந்தனைகள்**
-ஒகுய்ஸ்த் ரோதன்

26 **பரத நாட்டியம் : புத்துயிர் பெற்ற பண்டையக் கலை**

28 **கிராமக் கடவுளரும் வீரரும்**
குயவர் கலை

32 **இயற்கைக் காட்சியில் கவிதை**
சங்க உலகம்
-ப்ரான்சுவா குரோ

34 **தமிழில் புதிய படைப்புகள்**
—எஸ். ராமகிருஷ்ணன்

36 **தமிழ்ப் பெண்கள்**
-சி. எஸ். லட்சுமி

38 **முப்பெரும் அறிவியலார்**

ஆசிரியர் மடல்

'யுனெஸ்கோ கூரியரி'ன் இவ்விதழ் பல்வேறு கட்டுரைகள், படங்கள் வாயிலாகத் தமிழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு பற்றிய சில இயல்புகளை விளக்குகிறது. இவர்களுள் மிகப்பெரும்பாலோர் இந்தியத் தீபகற்பத்தின் தென்கிழக்குக் கோடியிலுள்ள தமிழ்நாட்டில் வாழ்கின்றனர்.

இது அரிய பண்பாடாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் மொழி இன்றைய மொழிகளுள் மிகத் தொன்மையானதாக இருப்பது மட்டும் இதற்குக் காரணமன்று. "2,500 ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படை அமைப்பு மாறாமல் நிலைத்துள்ள ஒரே பண்டைய மொழியாக இது இருக்கலாம்" என்று சொல்லப்படுகிறது. ஆட்சிமொழியாக இருக்கும் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் சமதர்மக் குடியரசு, கிழக்கு, தெற்கு ஆஃப்ரிக்காவின் பகுதிகள், கயானா, இந்தியப் பெருங்கடல் தீவுகள், தென் பசிபிக், கரிபியப் பகுதிகள் ஆகியவற்றில் வாழும் ஏறக்குறைய 40 இலட்சம் மக்கள் தமிழ் பேசுகின்றனர்.

பெரும்பாலும் தமிழ் எழுத்தாளர்களும் அறிஞர்களும் வழங்கிய கட்டுரைகளடங்கிய இவ்விதழ், பண்டையமரபுகளுக்கும் இன்றைய வாழ்க்கைக்கும், நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும், உள்நாட்டுப் படைப்பு வகைகளுக்கும் வெளிநாட்டு விளைவுகளுக்கும் இடையே பயனுள்ள உறவை வளர்க்க விழையும் வளரும் சமூகத்தின் நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் காட்டுகிறது.

காட்சித் தன்மை நிறைந்த ஒரு கட்டுரையில் எஸ். ராமகிருஷ்ணன் தமிழ்நாட்டின் சமூக, பண்பாட்டு வாழ்க்கையின் இன்றைய போக்குகள் பற்றி வரைகிறார். தமிழ் இலக்கியத்தின் இன்றைய இயக்கங்கள், மகளிரின் மாறிவரும் நிலை ஆகியவை பற்றிய கட்டுரைகள் இக்கால நிலையின் பிற இயல்புகளை விளக்குகின்றன. கவிஞரும் நெடுங்கதை ஆசிரியருமான சுந்தர ராமசாமி தம் கட்டுரையில் அன்றாட வாழ்க்கையின் சுவைபற்றி வரைகிறார்.

தமிழ்ப் பண்பாட்டின் கடந்தகாலப் பெருமைபற்றி எழுதும் ஃப்ரான்சுவா குரோ மதுரைமாநகரில் மூன்று சங்கங்களில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மிகத்தொன்மையான தமிழ்ச்சங்க இலக்கியத்தின் உயர்தனி நுட்பங்கள் பற்றி ஆய்கிறார். உயர் கோபுரங்களும் எழில் சிற்பங்களும் அமைந்த பெரிய இந்து மத ஆலயங்களும், இந்துக் கடவுளர்களின் வெண்கலச் சிலைகளும் தமிழர் உலகப் பண்பாட்டிற்கு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க கொடைகளாகும். இச்சாதனைகளை மட்டும் ஆய்வதோடல்லாமல், தமிழ்க் கலையின் அரும் படைப்பான ஆடலரசான சிவ நடராசரின் வெண்கலச் சிலையைக் கலைக் கண்ணோடு பார்த்து உரக்கச் சிந்திக்கும் ஃபிரெஞ்சு சிற்பி ஒகுய்ஸ்த் ரோதன் எழுதிய, பலரறியாத பகுதியையும் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

இறுதியாக, கடந்த காலமும் நிகழ் காலமும் ஒன்று சேரும் மூன்று துறைகள் பற்றி விளக்குகிறோம். (1) கிராமக் கடவுளர், வீரர் வழிபாடு இவர்களின் வண்ணச் சிலைகள் தமிழ் நாட்டின் கிராமங்களை அலங்கரிக்கின்றன. (2) சுவையுணவுக் கலை மரபுகள், (3) பரத நாட்டியமெனும் பண்டைய நடனம் பல நூற்றாண்டுகளாகப் பெருங்கோயில்களில் நடை பெற்றுவந்த இந்நாட்டியம் இன்று அரங்கிலேறி, தமிழ்நாட்டிலும் பிற நாடுகளிலும் மக்களைக் கவர்ந்துவருகின்றது.

பண்பாடுகளுக்கிடையே தொடர்பை வளர்த்து, உலகப் பண்பாடுகளின் சாதனைகளைப் பலரறியச் செய்யும் பணியை 'யுனெஸ்கோ கூரிய'ரின் இவ்விதழ் செய்துள்ளது.

அட்டை: **சென்னையிலுள்ள கபாலீசுவரர் ஆலயப் பகுதியின் விரிவான தோற்றம்**
நிழற்படம் ஷான்-பாப்திஸ்த் ஃபாய்வ்ர், பாரிஸ்



நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

'தமிழ்ப் பண்பாடு' என்றவுடன் பெருமிதமும் புனிதமும் கொண்டு எடுப்பாக விளங்கும் கோயில் கோபுரம் மனத்திரையில் தோன்றுகிறது; அல்லது கவர்ச்சியும நேர்த்தியும் மிக்க அணிமணிகளால் அலங்கரித்துக் கொண்ட அழகுமிகு நாட்டிய நங்கை காட்சி தருகிறாள்; இலக்கிய ரசனை உடையவர் முன்பாக திருவள்ளுவர் எழுத்தாணியும் பனை ஓலையுமாக இருக்கும் கோலத்தில் புலனாகிறார்; உணவுச் சுவையில் அக்கறை உடையவர்களுக்கு இட்லியும், சாம்பாரும் மனக்கண்முன் தோன்றும்.

ஒரு சராசரி மனிதனின் வாழ்வு, சிறப்பாக இந்நாளில், தமிழ்ப் பண்பாட்டோடு விளங்குவதைப் புரிந்துகொள்ள முயலும் போது, அதனைப் தனிமைப்படுத்தி வரையறுக்க முடியாத அம்சங்கள் எதிர்ப்படுகின்றன; எனினும், தன் நிறை குறைகளை இயல்பாக உணர்ந்த சமுதாயத்தில், அந்த அம்சங்கள் ஆழ வேரூன்றியிருக்கின்றன.

பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டுக்கு அப்பாலும் பரவிப் படர்ந்தது தமிழினம். அந்தச் செல்வாக்கின் பல அடையாளங்கள் இன்றும் தென்படுகின்றன. எனவே, தமிழர் சமுதாயம் என்பது தமிழ் நாட்டிற்கு அப்பால் வாழும் மக்களையும் குறிக்கும். தமிழகத்திலேயே குறிப்பிடத்தக்க அயலார் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளது. தமிழினம். அந்த செல்வாக்குகளின் சேர்க்கையால் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களுக்கிடையே தூய தமிழ்ப் பண்பாட்டைப்பற்றிப் பேசுவது கடினமாகிறது. இந்நாளைய உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைகள், பண்புகள், நாகரிகப் பாணிகள் ஆகியவை, ஏனைய பண்பாடுகளுடன் வினைப்பட்ட நீண்ட வரலாற்றின் விளை பயன்களாகும்.

நாம் அறிந்த இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றில் முதல் முதலாகத் திட்டமான எல்லைகளுடன் கூடிய தமிழகம் மலர்ந்துள்ளது. அதன் விளைவாக, தமிழர்களிடையே இதற்குமுன் கண்டிராத ஒற்றுமையைக் காண்கிறோம். சிறப்பாக நாடு விடுதலை பெற்ற பின்பு மொழிவழி மாநிலங்கள் தோன்றிய பிறகு தனது மொழிக்கும் பண்பாட்டுக்கும் உரிய நாட்டை அடைந்துள்ளது தமிழினம். கல்வியின் எல்லாமட்டங்களிலும் தமிழ் பாட மொழியாக உயர்ந்த பிறகு தற்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு மொழியை வளப்படுத்த முயன்று வருகிறோம். ஏறத்தாழ முந்நூறு ஆண்டு காலம் ஆங்கிலத்தின் தாக்கத்தால் அடங்கி ஒடுங்கிக் கிடந்த தமிழ் முழு முனைப்பான ஆற்றல் பெறச் செய்யும் முயற்சி இது.

அணிமையில் தஞ்சாவூரில் அமைத்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகமானது தமிழ்ச் சமுதாயத்தின் விருப்பங்களுக்கு வடிவு கொடுக்கும் முயற்சியேயாகும். நவீன சூழலில் பல்வேறு துறைகளில் பயன்படுவதற் கேற்றதாக தமிழுக்கு உரம் தருவதும், கடந்த காலத்தைப் பற்றிய முறையான ஆராய்ச்சியின் மூலம் பாரம்பரியத்துக்கும் நவீன வாழ்க்கைக்கும் இடையிலுள்ள உறவினை நிலை நிறுத்துவதும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கமாகும்.

எஸ். ராமகிருஷ்ணன் தகுதி பெற்ற பொருளியலார்; சமூக இயலார்; விற்பனைத் துறையில் தம் தொழிலைத் தொடங்கினார். சில ஆண்டுகளுக்கு முன் புதிய உயர்தர தமிழ் இலக்கியத்தைப் பரப்புவதற்காக ஒரு பதிப்பகத்தை நிறுவினார். இவர் 'கசடதபற' இலக்கிய இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்.

தமிழரின் வாழும் பண்பாடு

எஸ். ராமகிருஷ்ணன்

தமிழகத்தில் உணர்ச்சிப்போக்கில் உண்டாகியிருக்கும் ஒற்றுமைக்குத் துணையாக அமைவது திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கை. ஓரிடத்திலேயே அடைந்து கிடக்காது எளிதாக இடம் பெயர்ந்து இயங்கும் தன்மையை பொருளாதாரத் திட்டத்தின் முனைப்பான பயனாகக் கணித்தால் அது மிகையாகாது. பெரும்பாலும் ஒவ்வொரு கிராமத்தையும் சாலை மூலமோ இருப்புப் பாதை மூலமோ இணைக்கும் சாதனையில் வெற்றி கண்டுள்ள சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. இந்தப் போக்குவரத்து வசதியால் சராசரித் தமிழர்களின் தனி வாழ்வும் பொருளாதார சமுதாய வாழ்வும் மாற்றம் கண்டுள்ளன. வாழ்க்கை முறைகளின் வட்டார வேறுபாடுகளைக் குறைப்பதில் போக்குவரத்து வசதியின் பங்கு பெரிது.

எளிதில் இயங்கும் தன்மையுடைய மக்கள் விரைம் அறிந்தவர்களாக விளங்வதில் வியப்பில்லை. எழுத்தறிவு உடையவர்கள் விகிதம் அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்று தமிழகம். தமிழகத்தின் இன்றையத் தலைநகரான சென்னையில் வெள்ளையர் ஆட்சி காலத்திலேயே (1857) பல்கலைக்கழகம் அமைந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில்அமைந்த மூதல் மூன்று பல்கலைக்கழகங்களில் இதுவும் ஒன்று. கல்வி வசதிகள் விரைவாகப் பெருகி வருவது அண்மைக் காலச் சிறப்பு. 1979-க்கும் 1981-க்கும் இடையே மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் தொகை 45.1 சதவிகிதமும், மாணவிகளின் எண்ணிக்கை 66.5 சதவிகிதமும் உயர்ந்துள்ளது. வழிவழியாக வந்த பொதுக் கல்வியில் ஒடுங்காது, பன்முகப் பட்டதாகவும் புதிய புதிய பயிற்சிகளை இடைவிடாது தோற்றுவிப்பதாகவும் இந்நாளைய கல்வித் திட்டம் சிறந்துள்ளது. பொதுக்கல்வி வழங்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. அதே சமயம் தொழில்நுட்பத் துறைகளுக்கான தனிப் பல்கலைக்கழகங்களும் தோன்றியுள்ளன. இப்போது தமிழ்நாட்டில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் ஒரு தேசியத் தொழில்நுட்பக் கழகமும் உள. தொழிற்கல்விக் கல்லூரிகளில் பெண்கள் மேன்மேலும் அதிக அளவில் சேர்ந்து பயின்று வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் பரவலாகப் பெருகியிருப்பது படிக்கும் பழக்கம் ஆகும். செல்வாக்கு மிகுந்த எட்டு வார இதழ்கள், 17.3 இலட்சம் படிகள் விற்பனையாகின்றன. ஏறத்தாழ 85 இலட்சம் மக்கள் அவற்றைப் படிக்கிறார்கள். நகர வாசகர்களை மட்டும் நோக்கினால், 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 42% பேர் நாளிதழ்களையும் 46% பேர் வார இதழ்களையும் படிக்கிறார்கள். மிகவும் அதிகமாகப் படிக்கப் பெறும் இந்திய வார இதழ்களில் இரண்டாவதாக ஏற்றம் பெற்றிருப்பதும் ஒரு தமிழ் வார இதழேயாகும்.

உயிர் நாடியான பிரச்னைகளில் பொது மக்களின் கருத்தை உருவாக்குவதில் இந்த இதழ்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. ஆனால் பொழுதுபோக்

தமிழக வரலாற்றில் மைல் கற்கள்



நிழற்படம் © வீவான் யுனிவெர்ஸ் எண் 338, நாமூர், பெல்ஜியம்

தென்கிழக்கு இந்தியாவிலுள்ள (4.8 கோடி மக்கள் தொகையுள்ள) தமிழ் நாட்டில் *தமிழ் மொழி* ஆட்சி மொழியாகும். இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, கிழக்கு, தெற்கு ஆஃப்ரிக்கா, இந்தியப் பெருங்கடலிலும், தென் பசிபிக், கரிபியக் கடல்களிலும் உள்ள தீவுகள் ஆகியவற்றிலெல்லாம் வாழும் 40 இலட்சம் மக்களும் தமிழ் பேசுகின்றனர். கிறிஸ்தவ ஊழியின் தொடக்க நூற்றாண்டுகளில் சிறந்த தமிழ் இலக்கியம் படைக்கப்பெற்றது. தமிழ் மொழி *திராவிட* மொழியிலிருந்து பிறந்ததாகும். உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களுள் ஒன்றை நிறுவியவர்கள் *திராவிடர்*கள். கி.மு 1000 இல் *ஆரியர்* வடக்கிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்தின் மேல் படையெடுப்பதற்கு முன்னே திராவிட நாகரிகம் இந்தியாவில் நிலைபெற்றிருந்தது. *சமஸ்கிருத* மொழி பேசிய ஆரியர் திராவிடர்களைத் தென்னிந்தியாவுக்குத் தள்ளினர். இன்று வட, மேற்கு இந்தியாவின் மொழிகளுள் (இந்தி உட்பட) 8 மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை. ஆனால் சமஸ்கிருதத்தை ஆலய வழிபாட்டில் இந்து பிராமண குருக்களும், அறிஞர்களுமே பயன்படுத்துகின்றனர். தென்னிந்தியாவில் 4 திராவிட மொழிகள் பேசப்படுகின்றன. தமிழ் இவற்றுள் மிகத் தொன்மையானது.

தமிழ் நாட்டின் வரலாறு சேர, சோழ, பாண்டிய அரசுகளுடன் தொடங்குகிறது. இவை கி மு. 3 ஆம் நூற்றாண்டின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வம்ச அரசர் சிலரைப்பற்றி *சங்க இலக்கியம்* குறிப்பிடுகின்றது (32ஆம் பக்கக் கட்டுரை காண்க). கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 2ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் சங்க காலம் எனப்படும். கி.பி. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் *பல்லவர்கள்* காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமது ஆட்சியை நிறுவினர். தொடர்ச்சியாக 500 ஆண்டுகள் நிலவிய பல்லவர் ஆட்சி தமிழகத்தில் நிலையான விளைவை ஏற்படுத்தியது. அக்காலத்தில் தமிழ் நாட்டின் வட பகுதியைப் *பல்லவரும்*, தென் பகுதியைப் பாண்டியரும் ஆண்டனர்.

9 ஆம் நூற்றாண்டின் மத்தியில் சோழர் தம் பேரரசை நிறுவினர். *சோழ காலம்* தமிழகத்தின பொற்காலமாகக் கருதப்படுகின்றது. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் *பிற்காலப் பாண்டியர்* சோழர்களை வீழ்த்தினர். பாண்டியர் ஒரு நூற்றாண்டளவாக ஆண்டனர். பிறகு *விசயநகர* ஆட்சியும் மதுரை தஞ்சாவூர், *நாயக்கர்* ஆட்சியும் தொடங்கியது. கிருஷ்ணதேவராயர் (1509-1529) விசயநகர அரசின் மிகச் சிறந்த அரசர். அந்நிய ஆட்சிக் காலம் 17 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. 1639இல் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியினர் மீனவர் வாழும் கிராமமான *சென்னைப் பட்டணத்தில்* ஒரு வாணிப நிலையம் தொடங்கினர். இதுவே இன்று தமிழ்நாட்டின் தலைநகரான *சென்னையாகும்*. 1947இல் இந்தியா விடுதலை பெற்றது. தமிழ் நாட்டின் மக்களுள் பெரும்பான்மையானோர் இந்துக்கள்; *கிறிஸ்தவரும் முஸ்லிம்களும்* சிறுபான்மையினர் ஆவர்.



நிழற்படம் © கிளாட் சேவாஜியாட், பாரிஸ்

நிழற்படம் © அட்லாஸ் நிழற்படம், பாரிஸ்

சிகரெட், வெற்றிலை, பழம், இனிய பானங்கள் ஆகியவை மதுரையின் அருகிலுள்ள இக்கிராமக் கடையில் விற்கப்படும் முக்கிய பொருள்கள்.

குக்குப் பயன்படுவதே அவற்றின் தலையாய நோக்கம். பொது மக்களின் சுவைக்கு உரியவற்றை அளிப்பதே இவற்றின் குறிக்கோளாக இருப்பதால் திரைப்படம், சமயம், அரசியல் ஆகிய மூன்றுமே இந்த இதழ்களில் பெரிதும் இடம் பெறுகின்றன. திரையுலகச் செய்திகளும், வம்புப் பேச்சும் இவ்விதழ்களில் ஆதிக்கம் வகிக்கின்றன.

சிறப்பான சுவையாற்றலும் விருப்பத் தேர்வு உடையவர்களுக்கேற்ற இதழ் எதுவும் இவற்றில் இல்லை. எனவே, கருத் தாழம் உடைய எழுத்தாளர்கள் குறுகிய வட்டத்தில் இயங்கும் சிற்றேடுகளையே நாடவேண்டியிருக்கிறது.

இதழ்களையும்விடப் பெருமளவில் செல்வாக்கு உடையது திரைப்படம் (11-ஆம் பக்கத்தில் உள்ள பெட்டிச்செய்தி பார்க்கவும்). இந்தியாவிலுள்ள நிலையில்லாத் திரையரங்குகளில் ஆறில் ஒரு பகுதி தமிழகத்திலுள்ளன. இதிலிருந்தே கிராமப்புறம் மின்சார வசதி பெற்றிருப்பதையும் (தமிழகத்திலுள்ள பேரூர்களிலும், சிற்றூர்களிலும் 99% மின்சார வசதி பெற்றிருக்கின்றன) கிராமப்புறங்களில் திரைப்படம் ஊடுருவியிருப்பதையும் அறியலாம்.

திரைப்படத்தின்,செல்வாக்கைப் பேணிப் பெருக்குவதில், பெருமளவில் விற்பனையாகும் இதழ்களுக்குப் பெரும் பங்குண்டு. அதைப்போலவே அரசின் ஆதிக்கத்திலுள்ள வானொலியின் வாணிப ஒலிப் பரப்பில் திரைப்படப் பாடல்களும், திரைப்பட நிகழ்ச்சிகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

தமிழ் நாட்டில் திரையுலகத் தேவைகளின் விளைவாகச் 'சுவரொட்டிப் பண்பாடு' தோன்றியது. பேசும் படங்கள் முதலில் வந்தபொழுது பெரும்பாலான மக்கள் எழுத்தறிவில்லாதவர்களாகயிருந்தார்கள். இதழ்களும் அப்போதுதான் தோன்றத் தொடங்கியிருந்தன. எனவே, புதிய படங்கள் வருவதை அறிவிக்க முக்கியமாகப் பயன்பட்டது சுவரொட்டியே. இப்போது சுவரொட்டி விளம்பரம் பொது வாழ்வின் பிற துறைகளுக்கும் பரவிவிட்டதால், சுவரொட்டியில்லாத சுவர்களைக் காண்பது அரிது.



தொழில்கள் தோன்றியுள்ளன. வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக அணுமின் நிலையம் கல்பாக்கத்தில் தோன்றியுள்ளது.

வழிவழியாகப் பருத்தித் துணித்தொழிலும் தோல் பதனிடும் தொழிலும் தமிழகத்தில் வலுவாக அமைந்துள்ளன. இரண்டு பெரிய துறைமுகங்கள் தொழில் துறையின் தேவையை நிறைவு செய்கின்றன. நன்கமைந்த போக்குவரத்தால் மக்களும், சரக்குகளும் இயங்குவது எளிதானது. உள்ளூரிலேயே வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கும் ஏராளமான நகரங்களுக்குக் குடிபெயர்வதைத் தடுப்பதற்கும் ஏற்ற வகையில் தொழில்களைப் பரவலாக்கும் திட்டம் செயற்படுகிறது. தொழில் இல்லாத பகுதிகளில் தொழில்களை அமைப்பதற்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படுகிறது, நடுத்தரத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் இடமும், வசதிகளும் வழங்கும் தொழிற் பேட்டைகள், பின் தங்கிய பகுதிகளில் உருவாகியுள்ளன; வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் அல்லது குறைக்கும் ஏற்பாடு இது. இவ்வாறு தொழில் நுட்ப அறிவைப் பெறுவதிலும், பயன்படும் பண்டங்களைப் படைப்பதிலும் தமிழ் நாடு மாறுதலுக்கேற்ற நெகிழ்வுத்திறனோடு செயற்படுகிறது.

தொழில் வளர்ச்சியின் விளைவாக மக்களின் வாழ்வுப் பாணியும், உழைக்கும் முறையும் முக்கியமான மாற்றங்களைக் கண்டிருக்கிறது. வேளாண்மைக்கு வேண்டிய பொறியியற் சாதனங்களும், உரங்களும் ஏற்படுத்தியுள்ள மாற்றம் பெரிது. மேன்மேலும் அதிககின்றன. அரவை, சமையல் முதலியவற்றுக்கான நவீன சாதனங்கள் பயன்படுவதால் பழைய சமையல் முறைகள் வழக்கொழிந்து வருகின்றன. அதன் மூலம், மாறிய குடும்ப அமைப்பில் வாழும் இல்லத்தரசிகளுக்குப் புதிய புதிய ஓய்வு வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

தொழில் மயமாவதையொட்டி நகரங்கள் பெருகும் நிலைமை உருவாகிறது. நகர மக்கள் தொகையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிப்பது தமிழ் நாடு, கிராம மக்கள் நகரத்தில் குடியேறுவதும், கிராமப் பகுதிகளில் தொழில் மயமான நகரங்கள் மலர்வதும் தங்கு தடையில்லாமல் நடைபெறுகின்றன. இதனால் நகரப்பகுதிகளில் இடநெருக்கடி முற்றியுள்ளது.

வீட்டு வசதி கிடைப்பதும் மேன்மேலும் கடினமாகியுள்ளது. திறந்த வெளிகளை கான்க்ரீட் பண்டங்கள் நிறைக்கின்றன; சேரிகள் பெருகி வருகின்றன; இந்த நிலையில் சுகாதார வசதிகள் சிதறுண்டு போகின்றன. குடிதண்ணீர் வசதி குறைகிறது; குழந்தைகள் விளையாடுவதற்கு இருந்த இடம் சுருங்குகிறது. வாழையடி வாழையாக நின்று நிலவிய வீடுகட்டும் கலை மறைய புறாக்கூண்டு போன்ற அறைகளும், புழங்குவதற்கு மிகச் சுருங்கிய இடமும் உடைய அறைக்கட்டுகள் (Flats) தோன்றிய வண்ணம் இருக்கின்றன. சேரிகளை நீக்கியும், வீட்டு வசதியைப் பெருக்கியும் இச் சிக்கலுக்குத் தீர்வு காண அரசு முயன்று வந்தபோதிலும் அந்த முயற்சிக்கும் தேவைகளுக்கு

மேலே: தமிழ் நாட்டின் தலைநகரும் இந்தியாவின் நான்காவது பெரிய நகருமான (தமிழர் சென்னை எனக் கூறும்) மதராஸின் தெருக்காட்சி. பின்னால் சென்னை உயர் நீதி மன்றத்தின் உயர்ந்தோங்கிய கோபுரங்கள். 1857இல் சென்னைப் பல்கலைக் கழகம் நிறுவப்பெற்றது. போக்குவரத்துச் சாதனத் திறமையும் மக்களின் இடம் பெயராற்றலும் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணைசெய்கின்றன. இந்தியாவில் தமிழ்நாடு போன்ற ஒரு சில மாநிலங்களில் தாம் ஒவ்வொரு கிராமமும் சாலையினால் அல்லது இருப்புப் பாதையினால் இணைக்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் தனியாரும் நடத்தும் 6,000 வட்டார, விரைவுப் பேருந்துகள் நாள்தோறும் 12.7 இலட்சம் கி.மீ. தூரம் ஓடுகின்றன.

நிழற்படம்: © வசந்தா குமல், சென்னை

தமிழர் செய்தித்தாள்களையும் இதழ்களையும் ஆர்வமுடன் படிக்கின்றனர். மக்கள் விரும்பும் 8 இதழ்களின் 17.5 இலட்சம் பிரதிகள் வாரந்தோறும் விற்பனையாகின்றன. நகரில் வாழும் வயது வந்த தமிழருள் 42% பேர் தினத்தாளும், 46% பேர் வார இதழும் வாசிக்கின்றனர்.

அவற்றில் மிகப் பெரியவையாகவும், வண்ணக் கவர்ச்சி மிகுந்தவையாகவும் விளங்குவன திரைப்பட விளம்பரங்களே.

எழுத்தறிவுப் பெருக்கத்தாலும், வெளியூர்களுக்குச் செல்வதற்குத் தொழிலாளர் தயங்காததாலும் தமிழகத் தொழில் வளர்ச்சி கைகூடி வருகிறது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் பயனாக, பல்வேறு தொழிற்பண்டங்கள் உற்பத்தியாகின்றன. தொழிற் பண்டங்களும், நுகர்பொருள்களும் விரிவான வீச்சுக்குரியனவாக உற்பத்தி செய்யப்பெறுகின்றன. பெரிய அளவில் சிமெண்ட். உரம், மோட்டார் கார், தாதுப்பொருள், சுத்திகரிப்பு முதலியமான உழவர்கள் நீர்ப்பாசனத்திற்கு மோட்டார் பம்புகளைப் பயன்படுத்துகிறார்கள். வழிவழியாக வந்த முறையில் நிகழ்ந்த மாற்றத்தால் தொன்று தொட்டு நின்று நிலைத்த கவர்ச்சியான கிராமிய உழைப்புப் பாடல்களும் மறைந்து வருகின்றன.

கிராம வாழ்க்கை டிரான்ஸிஸ்டர்களும் தொலைக்காட்சிப் பொறிகளும் வழங்கும் மின்னணுத் தொழிலால் மாற்றம் கண்டுள்ளது. அவற்றால் கிராம மக்களுக்குப் புதிய பொழுதுபோக்கு வசதிகள் கிடைத்திருப்பதோடு, பள்ளிப் படிப்பு முடித்த பெண்களுக்கு மேன்மேலும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்மிடையேயுள்ள இடைவெளி நாள்தோறும் விரிவடைகிறது.

இவ்வாறு மாறிய நிலைமைகளால் புதிய புறக் கட்டுப்பாடுகளுக்கேற்றவாறு பாரம்பரிய முறைகளை மாற்றுவது அவசியமாகிறது. பெண்ணுரிமை விரிவெய்தி, கல்வி கற்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் அதிகமான வாய்ப்புக்கள் உருவாகியிருப்பினும், அவர்கள் முன்போலவே இல்லறப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது; முன்போலவே ஆண்களோடு சேய்மையிலிருந்தே பழகவேண்டியிருக்கிறது. சென்னை நகரத்தில்கூட உச்ச அளவில்

(தொடர்ச்சி IIIஆம் பக்கம் பார்க்க)

நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

கூட்டுத் திருமணங்கள் அண்மையில் நிகழ்ந்து வருகின்றன. திருமணச் செலவைக் குறைக்க இது ஒரு முயற்சியாகும். மேலே: சென்னையில் நாதசுர இசையுடன் கூட்டுத் திருமணம் தொடங்குகிறது. நாதசுரம் என்பது இரு வாய்க்கட்டைகளுள்ள ஒரு மீட்டர் நீளமுள்ள ஊதுகுழல். இதன் இசையின்றி எந்த விழாவும் இன்ப நிகழ்ச்சியும் நிறைவுறாது. இதன் உரத்த ஒலி 2 அல்லது 3 கி.மீ. தூரம் கேட்கும். நாதசுர இசைவாணர் பலர் தலைமுறையாகப் பயிற்சி பெற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

மணம் புரிதல்

தமிழ்நாட்டில் இன்றும் பெரும்பாலும் பெற்றோரே திருமணங்களுக்கு ஏற்பாடு செய்கின்றனர். கலப்புத் திருமணங்கள் அரிதாக இல்லையெனினும் இன்னும் விதி விலக்காகவே இருக்கின்றன. சிறுவர் திருமணங்கள் இப்போது நடைபெறுவதில்லை.

மணமக்களைத் தெரிந்தெடுப்பதில் பொருளாதார நிலையும் சாதியும் முக்கிய இடம்பெறுகின்றன. திருமணத்திற்கு மிகுந்த செலவாகின்றது. மணமகள் குடும்பத்தினர் எல்லாச் செலவுகளையும் ஏற்பதுடன். சீதனமும் கொடுக்க வேண்டும். பல பெண்களைப் பெற்ற பெற்றோர்க்கு இச்செலவுப் பளு பெருந் தொல்லையாகும்.

பெண் கல்வி இப்பிரச்சினையை இன்னும் பெரிதாக்குவது நம்ப முடியாததாக இருக்கலாம். பல சாதிகளில் கல்வி கற்ற பெண் சம அல்லது உயர் கல்வி கற்றவனையே மணக்கவேண்டும். ஆனால் மணமகனின் கல்விக்கேற்ற சீதனம் கொடுக்கவேண்டும். பல நடுத்தரக் குடும்பங்களில் பெண்கள் கல்வியும் வேலையும்பெறுவதென்றால், தமது சீதனத்தை அவர்களே சம்பாதித்துக் கொள்வதாகும். முற்காலத்தில் பணமும் நகையுமே சீதனமாக இருந்தது. ஆனால் இன்று ஸ்கூட்டர், குளிர்பதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, உயர் அழுத்தச் சமையற் கருவி போன்ற இக்காலப் பொருள்கள் சீதனத்துள் உட்பட்டவை.

கடந்த காலத்தில் திருமணம் 5 நாட்கள் நீடிக்கும் ஒரு பெரிய சமூக நிகழ்ச்சியாக இருந்தது. இன்று அச்சடங்கு ஒரு நாளில் முடிந்துவிடுகிறது. திருமணங்கள் இப்போது வீடுகளில் நடைபெறாமல், வாடகை மன்றங்களில் நடைபெறுகின்றன. எளிய முறையில் திருமணம் நடத்துவோருக்குத் துணையாகப்பதிவு திருமணச்சட்டங்கள் இயற்றப்பட்டன. கலப்புத் திருமணங்களுக்கேற்பவும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வசதிக்காகவோ, நம்பிக்கையின்



நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

காரணமாகவோ சடங்குகளை விரும்பாதவருக்காக அரசாங்கம் சீர்திருத்தத் திருமணச் சட்டம் இயற்றியுள்ளது. மரபு முறையில் நடைபெறாத திருமணங்களை இச்சட்டம் ஏற்றுக் கொள்கிறது.

புதிய மணமக்கள் ஊர்வலமாகத் தம் இல்லம் செல்வர்.

எஸ். ராமகிருஷ்ணன்

நிழற்படம் © மேரி-லூயி ரெய்ன்ச், பாரிஸ்

கணவனது 60 ஆம் பிறந்த நாள் விழாவின்போது திருமண வாக்குறுதியைப் புதுப்பிப்பது வழக்கம். வேள்வித்தீயைச் சுற்றிப் படையல் வைக்கப்படுகிறது. புனித நீர் சல்லடை வழியாக இருவர் மீதும் தெளிக்கப்படும். மனைவிக்கு மரபாக இரண்டாம் தாலி வழங்கப்படுகிறது.

தந்தையின் மடியில் அமர்ந்துள்ள மணப்பெண் மாங்கல்யம் (தாலி தொங்கும் மங்களக்கயிறு) தன் கழுத்தில் கட்டப்படுவதற்காகக் காத்திருக்கிறாள். திருமணச் சடங்கில் இது முக்கிய கட்டம். அப்போது மணமகள் பெற்றோரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி, கணவரின் பாதுகாப்பிற்குச் செல்கிறாள்.

ஒரு சென்னைப் பாட்டி தமிழகத்தின் மரபான ஏணைத் தொட்டியில் குழந்தையை வைத்துத் தாலாட்டித் தூங்கவைக்கிறாள்.

நிழற்படம் © ஃபாய்வர், பாரிஸ்

அன்றாட வாழ்க்கைக் காட்சிகள்

சுந்தர ராமசாமி

இருபதாம் நூற்றாண்டிலேயே இருபது நூற்றாண்டுகளுக்குள்ளும் மாறி மாறி காலப் பெயர்ச்சி கொள்ளும் வாழ்க்கை முறைக்கு தமிழ் மக்கள் இலக்காகியிருக்கிறார்கள். புகழ் பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் அணு ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் வாங்கிய இளைஞன் அங்கிருந்து சென்னை ஆங்கில தினசரியில் தனக்கு மணப்பெண் தேடி விளம்பரம் கொடுக்கும்போது தன் ஜாதியைக் குறிப்பிட்டு, தன் ஜாதியின் உட்பிரிவைக் குறிப்பிட்டு அந்த தினுசுப் பெண் அவன் விரும்பும் உயரமும் இடுப்பளவும் கொண்டிருந்தால் ஜாதகத்துடன் விரைவில் மனுப் போடச் சொல்கிறான். கம்ப்யூட்டரில் ஜாதகங்கள் கணிக்கப்படுவதால் விரைவாக அனுப்பி வைக்க முடியுமே.

திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர்கள் அவர்கள் பயன்படுத்தும் மிக நுட்பமான கருவிகளுக்கு ஆயுத பூஜையன்று குங்குமப் பொட்டு வைக்கிறார்கள். கிராமமும், நகரமும், பட்டணமும், அவை அவைக்கே உரித்தான வாழ்க்கை வேகங்களையும், முறைகளையும் கொண்டிருக்கின்றன. பட்டணங்களிலும் கிராமங்களிலும் சிறு நகரங்களை

சுந்தர ராமசாமி: இன்றைய தமிழ் கவிஞரும் நெடுங்கதை ஆசிரியருமாவார்.

நிழற்படம் © வீவான் யுனிவெர்ஸ், நாமுர், பெல்ஜியம்

மேற்கு தமிழ்நாட்டின் கிராம காட்சி

விட காலை விழிப்புச் சீக்கிரமே ஏற்படுகிறது. கிராமத்தில் இது இயற்கையாகவும், பட்டணத்தில் பலவந்தப்படுத்தும் சங்கடமாகவும் இருக்கிறது.

வெற்றுச் செம்பில் பசு அல்லது எருமையில் காம்பிலிருந்து பீச்சப்படும் பால் எழுப்பும் சப்தம்-அந்த அற்புத ஓசை-நினைவில் இன்னும் மட்கிப் போகாத தலைமுறை இப்போதும் பட்டணங்களில் இருக்கக்கூடும். பால் ஓசைகள், மாட்டின் கழுத்து மணி ஓசை, குளம்பு ஓசை, கொம்புகளின் ஓசைகள், வைக்கோல் ஓசை, பால் பாத்திரங்கள் தரையில் படும்போது எழும் ஓசைகள். இந்த அத்தனை ஓசைகளுக்கும் நகரங்களில் சைக்கிள் மணி ஒரேமாற்று ஓசையாகி விட்டது. பட்டணத்தில் வாசற் கதவோரம் பிளாஸ்டிக் கூட்டில் பால் விழுந்து கிடக்கிறது. பூத்திலிருந்து அதைக் கொண்டு வந்து சேர்க்கும் பெண்ணின் முகத்தைக்கூடப் பார்க்க முடிவதில்லை, அதைக் கணக்குப் பண்ணி அலாரம் வைக்கப்பட்வில்லையே. பிளாஸ்டிக் கவர் பால், பக்கத்தில் தினசரி. காப்பியைக் குடித்தவாறே தினசரியைப் படித்துக் கொண்டிருக்கும்போதே குழாயைத் திறந்து பெரிய பாத்திரங்களில் எல்லாம் தண்ணீரை நிரப்பி வைத்துக் கொள்வது நல்லது. தண்ணீர் தொடர்ந்தும் வரும் என்பது நிச்சயம் இல்லை என்றால், வராது என்பதும் நிச்சயம் இல்லை.

முன்னர் குளித்து விட்டுத்தான் முன்வாசல் கோலம் போட வேண்டும். 'சூரியன் உச்சிக்கு வந்தாச்சேடீ, இன்னுமா போடலை கோலம்' என்று என் பாட்டி என் தாயை நாற்பது வருடங்களுக்கு முன் குத்தியது எனக்கு நினைவிருக்கிறது. உண்மையில் அப்போதுதான் சூரியோதயம் ஆகியிருந்தது. அப்போது கோலப் பொடியும் அரிசிப் பொடியாக இருந்தது. பின் அது வெள்ளை மண் ஆகிவிட்டது. முகங்கழுவி குங்குமப் பொட்டு வைத்து முன் தலையையும் வாரிக்கொண்டால் குளிக்காமலே கோலம் போடலாம் என்பது காலப்போக்கில் பொது நியதியாகி விட்டது;

சமையல் வேலைகள் முன்போல் இல்லை. அடுக்களையில் உண்மையாகவே ஒரு புரட்சி நடந்திருக்கிறது. வாயு அடுப்பு, அரையல் மிஷின், சுடு தட்டு, குளிர்பதனப் பெட்டி, நேற்று மேல் தட்டுக்கு மட்டும் இவை சொந்தமாக இருந்ததென்றால் இன்று- நடுத் தட்டும் இவற்றைச் சொந்தமாக்கிக்கொள்ள முயன்று வெற்றிகளும் பெற்று வருகின்றன. வேலைக்குப் போகும் பெண்கள் காலத்தை மிச்சப்படுத்த சமையலில் எத்தனையோ உத்திகளை நாள்தோறும் கண்டுபிடித்து வருகிறார்கள். இதில் ஆண்களும் குழந்தைகளும் காலை முடுக்கத்தில் அவர்களுக்குரிய பங்குகளைச் செய்தாக வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலிருந்தும் எட்டு எட்டரை மணியிலிருந்தே குருவிகள் பறக்க ஆரம்பிக்கின்றன. சின்னக் குருவிகள் பறந்து, பெரிய குருவிகள் பறந்து ஒன்பது ஒன்பதரை மணிக்கு வீடு பேரமைதி கொள்கிறது. அதற்குப்பின் நாம் அழைப்பு மணியை அமுக்கினால் அநேகமாகக் கதவு திறக்கப்படுவதில்லை. அப்படியே திறந்தாலும் ஒரு வயதுமுதிர்ந்த முகம், நாலு விரலிடை திறந்து, பட்டுக்கொள்ளாத தன் பதில்களிலேயே பயந்து கதவைச் சாத்திக் கொண்டுவிடும்.

பஸ்ஸிலும் ரயிலிலும் ஏகக்கூட்டம். காலி இருக்கை இருந்தாலும்கூட ஆணுக்குப் பக்கத்தில் பெண்ணும் பெண்ணுக்குப் பக்கத்தில் ஆணும் உட்காருவது இல்லை என்பது மரபு. ஏறும்போது ஆண்களும், பெண்களும் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு ஏற வேண்டியிருக்கிறது. இது நிர்ப்பந்தம், நிற்கும் போதும், தாண்டிப் போகும்போதும் ஆணும் பெண்ணும் இடித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. வேறு வழியில்லை. இருந்தாலும் இப்போதைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளவேண்டாம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில வேடிக்கையான நடத்துநர்கள் இருக்கிறார்கள். ஜோக் அடித்துப் பயணிகளை சிரிக்க வைத்துக்கொண்டிருப்பார்கள் இவர்கள். காலையிலிருந்து நிமிடந்தோறும் ஒவ்வொருடைய மூளையிலும் விஷம் போல் ஏறும் பதற்றத்தை இவர்கள் தணித்து விடுகிறார்கள்.

மாலை நேரங்களை தொலைக்காட்சிக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றனர். உடலை முறுக்கிக் கையை நீட்டி நடுத்தட்டு தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. நடைமுறையில் தொலைக்காட்சி என்பது வீட்டுக்குள் நுழைந்திருக்கும் திரைப்படம்தான். திரை அரங்குகளில் பார்த்திருந்த படங்களை மீண்டும் வீட்டுக் கூடங்களில் பார்க்கிறார்கள். அக்கம் பக்கத்துக் குழந்தைகள் தொலைக்காட்சிப் பெட்டி முன்னால் தரையில் அமர்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு நிகழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல.

நிகழப் போவதும் தெரியும். நாயகியின் அல்லது நாயகனின் மூச்சு விடாமல் பேச வேண்டிய உணர்ச்சிக் கொந்தளிப்பு வசனங்களை அவர்களுடன் இவர்களும் சேர்ந்து கத்தி அவர்களுக்கு முன் வாக்கியத்தை இவர்கள் முடித்து மகிழ்ச்சி கொள்கிறார்கள். இதனால் திரைப்பட அரங்குகளில் கூட்டம் குறைவு என்பதில்லை. பகற் காட்சிக்குக்கூட உச்சியைப் பிளக்கும் வெயிலில் நீண்ட வரிசைகளைப் பார்க்க முடியும்.

நடுத்தட்டுப் பெண்கள் பொருட் செலவற்ற சமயப் பிரச்சாரக் கூட்டங்களுக்குப் போகக்கூடும். புலமையும், நினைவாற்றலும் கொண்ட பௌராணிகர் அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட, சினிமா சம்பந்தப்பட்ட, அரசியல் சம்பந்தப்பட்ட உதாரணங்களைப் புராணக் கதைகளோடு விரவி நேற்றைய தர்மத்தின் கோலோச்சல்களையும் அவற்றின் இன்றைய தேய்மானங்களையும் ஒப்பிட்டுப் படம்பிடித்துக் காட்டும்போது கேட்பவர் தன் வாழ்வின் அவலங்களை மதிப்பீடுகளின் பொதுச்சரிவுகளுடன் இணைத்து உள் கண்ணீர் கொள்வதில் சில ஆசுவாசங்கள் கிடைக்கக்கூடும்.

ஆண்களும் அதைவிடப் பெண்களும் விரும்பிச் செல்லும் மற்றொரு இடம் சபா நாடகங்கள். நிமிடந்தோறும் மேடை வெடிக்கும் துணுக்குகளுக்குக் குலுங்க குலுங்கச் சிரித்து, கதாநாயகியைச் சுற்றிச் சூழ்ந்து தாக்கும் சோகங்களுக்கு அவள் கதறும்போது கூடவே ரகசியமாக அழுது, அதன் பின் சூரியகிரகணங்களைக் கண்ட பனி போல் அவளது சிக்கல்கள் அனைத்தும் ஓட்டம் பிடிக்க அவளுடைய உவகையில் தானும் பங்குகொண்டு வீடு திரும்பும்போது மன அலுப்புக்கு வடிகால் தேடிக்கொண்ட சுகம் கிடைக்கத்தான் செய்கிறது.

எங்கும் போக ஆர்வமோ, பண வசதியோ இல்லையெனில் வார மாத பத்திரிகைகளில் சிலவற்றையேனும் படிக்கலாம். மற்றபடி அவற்றில் வீரசாகசக் கதைகள் வருகின்றன. சரித்திரக் காதல்களும், சமூகக் காதல்களும் பாலுணர்ச்சி கொப்புளிக்க வர்ணிக்கப்பட்டு அறத்தின் வறுபுறுத்தல்களோடு முடிகின்றன. துணுக்குகள் வருகின்றன. அரசியல், சினிமா அந்தரங்கச் செய்திகள் வருகின்றன. மேலோட்டமான கவிதைகள், கட்டுரைகள் வருகின்றன. இப் பத்திரிகைகளுடன் தன்னை மானசீகமாக இணைத்துக் கொள்ளாத தமிழன், இதற்காக அன்றாடம் சிறிது நேரம் ஒதுக்காத தமிழன் இல்லை என்றே சொல்லி விடலாம்.

ஞாயிற்றுக்கிழமை ஒரு அதி அற்புதமான நாள். ஞாயிற்றுக்கிழமைகளின் காலைப் பொழுதை உலகியலான காரியங்களுக்கும் பிற்பகல் ஆத்ம சாந்திக்கும் ஒதுக்கப்படுகிறது. குவிந்து கிடக்கும் துணிகளைத் துவைத்து பெட்டி போட்டு வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டுத் தையல் மிஷினில் உள்ளாடை ரிப்பேர்கள், வங்கி வேலைகள். (குடியிருப்புப் பகுதிகளில் வங்கிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைசெய்கின்றன) தட்டுப்பாடான தானியங்கள், உடலில் கொழுப்பை ஏற்றாத எண்ணெய்கள், சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய்-அல்லது இரண்டுமே—சற்று அதிகமாக வாங்கி வைத்துக்கொள்ள சில உபாயங்களை அமுல்படுத்த வேண்டும். தானிய வகைகளின் இடித்தல்கள், பொடித்தல்கள். எண்ணெய் தேய்த்து தலைமயிரை அலசி சாவகாசமாக குளிக்கவேண்டும். பிற்பகல் நன்றாக தூங்கி உடற் களைப்பை ஒரு சொட்டு மிச்சம் இல்லாமல் வெளியே தள்ளிவிட வேண்டும். பிற்பகல் சினிமா அல்லது டிராமா அல்லது மெரினா கடற்கரை அல்லது நண்பரின் வீட்டுக்கு குடும்பத்துடன் விஜயம். இவ்வாறு, ஞாயிற்றுக்கிழமை இவ்வளவு திட்டங்களையும் மூளையில் உறுத்திக்கொண்டு விடிகிறது. உடற் களைப்பு ‘இன்று வேண்டாம், வேண்டாம்’ என்று கத்துவதை மதித்து படுத்துக்கொண்டே இருந்தால் குடும்பம் உருப்பட்டாற் போல்தான். ஆவேசமாக எழுந்து சுறுசுறுப்புக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் பொழுதுக்குப் பின்னால் ஓடி ஓடிக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும்போதே அது இருளில் கண் காணாமல் மறைந்து விடுவது எவ்வளவு சங்கடமானது. இன்னும் கால் பங்கு வேலை கூட முடிக்கவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இப்படியேதான் ஆகிறது. யோசித்துப் பார்க்கும்போது கவனக்குறைவுகளும், சில அசிரத்தைகளும், சில விடுதல்களும் ஏற்பட்டுவிட்டன என்பது இப்போது தெரிகிறது. துல்லியம் கூடவில்லை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ‘தம்’ பிடித்துப் பார்க்கவேண்டும்.

நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் உள்ள இடைவெளி குறைந்துவிட்டது. நாள்தோறும் அபிவிருத்தி அடைந்து வரும் செம்மையான பேருந்து போக்குவரத்துகள் மனித உறவுகளை வளர்த்து வருகின்றன. நகரங்களில் சுற்றுப்புறங்கள் வளர்ந்து கிராமங்களை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

விவசாயத்தை மையமாக வைத்து கிராமம் சுழன்று கொண்டிருக்கிறது. ஆணும், பெண்ணும் அதி காலையிலேயே அங்கு வேலைக்குப் போகவேண்டியிருக்கிறது. வயல்களில் அல்லது தோட்டங்களில். காலை உணவைத் தயாரிப்பதற்கான அவகாசமோ குறைவான நேரத்தில் தயாரிக்க நவீன உபகரணங்களோ இல்லை, முன் தின உணவில் மிச்சமிருந்தால் இரண்டு வாய் அள்ளிப் போட்டுக்கொண்டுப் போகலாம், வேலைக்குப் போகிற வழியில் கடையில் டீ குடித்துவிட்டுப் போவது இப்

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

பெருகிவரும் திரைப்படத் தொழில்

நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

‘கந்தன் கருணை’ எனும் திரைப்படச் சுவரொட்டி (முருகன் எனப்படும் கந்தன் சிவபிரானின் மைந்தன்; போர்க்கடவுள்) முன்புறம் பரிசுச்சீட்டு விற்கும் இளைஞன்.

தமிழ்நாட்டில் திரைப்படமே மிக ஆற்றலுள்ளதும், மக்கள் விரும்புவதுமான செய்தித் தொடர்புச் சாதனமாகும். திரைப்பட நடிகர்கள் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளனர். ரசிகர் மன்றங்களில் மிகுதியான உறுப்பினர் உள்ளனர். மன்ற உறுப்பினர் தாம் விரும்பும் நடிகர்களை ஆதரித்து, மக்கள் கவனத்தை அவர்கள் பக்கம் ஈர்க்கின்றனர்; தம் நடிகர் நடிக்கும் புதிய படங்களை விளம்பரப்படுத்துகின்றனர்; அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

தமிழ் நாட்டில் 70 ஆண்டுகளாகத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. திரைப்படத் தொழில் மிகப் பெரியது. (1982இல் மட்டும் 487 படங்கள் வெளியிடப்பட்டன). பட உற்பத்தியும் விநியோகமும் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. ஏராளமான தொழிலாளர் இதில் வேலை செய்கின்றனர்.

மக்கள் சுவைக்கேற்ப பெரும்பாலும் படங்கள் எடுக்கப்படுகின்றன. பேசும் படங்கள் வந்த தொடக்கத்தில் திரைப்படங்கள் தேசிய உணர்ச்சியையும் பிறகு ‘‘தன்மான’’ இயக்க குறிக்கோள்களையும் பரப்பும் ஆற்றல்மிகு சாதனங்களாக இருந்தன. இப்போது அவ்வாறில்லை. இன்று ஏறக்குறைய எல்லாப் படங்களிலும் காதலே முக்கிய பொருளாக இருக்கின்றது. படம் தயாரிக்கும் அரங்குகளில் எடுக்கப்படுவதை விட, கிராமச் சூழ்நிலைகளிலே மிகுதியாகப் படங்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால், ஆண் பெண்ணைச் சந்தித்தல், வன்முறை, எல்லாப் படங்களிலும் புகுத்தப்படுகிறது. காதலர் தம்உணர்ச்சிகளை நடனத்திலும் பாட்டிலும் வெளிப்படுத்துகின்றனர். சண்டைக் காட்சிகள் பரவலாகவும், பொதுவாக உச்சகட்டமாகவும் அமைகின்றன.

எஸ். ராமகிருஷ்ணன்

சோறும் சடங்கும்

தமிழரின் சமையல் கலை

திலகா பாஸ்கரன்



திழற்படம் © வீவான் யுனிவெர்ஸ், நாமூர், பெல்ஜியம்

தம் குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு கிராமப் பெண்கள் அம்மியும் குழவியும், பின்புறமுள்ள உரலும் உலக்கையும் எனும் இரு பண்டைய சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

பண்டையத் தமிழரின் சமூக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிற சங்க இலக்கியங்கள், அவர்களின் உணவுப் பழக்கங்களின் வரலாற்றுப் பின்னணியையும் சுட்டிக்காட்டுகின்றது. சங்கப் பாடல்கள் (32ஆம் பக்கக் கட்டுரை பார்க்க) நிலத்தை இயற்கைச் சூழலுக்கேற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப் பாகுபாடு செய்து, அவ்வந்நிலத்திற்குரிய உணவையும் வகுத்துரைக்கின்றன.

கோவிற் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள பற்பல கல்வெட்டுகள், உணவு முறைகளும், சமய நடைமுறைகளும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன.

திலக பாஸ்கரன் உணவூட்ட வல்லுநரும் கல்லூரி விரிவுரையாளருமாவார்.

சமயச் சடங்குகளில் உணவின் பங்கினைக் கல்வெட்டுகள் விளக்குகின்றன. பலியிடுதல், சமைத்தல், படைத்தல், விருந்து ஆகிய அனைத்தும் வழிபாட்டின் அங்கமாயின. உண்ணா நோம்புகூட ஒரு சடங்கு முறையாயிற்று.

கி.பி. 11-12ஆம் நூற்றாண்டுகளில் சாதிப் பிரிவுகள் தனித்தனியே அமைந்தன. ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி உணவு முறைகள் உருவாயின. ''யாருக்கு யார் பரிமாறலாம்?', ''யாரிடமிருந்து உணவு பெறலாம்?'' என்ற சிக்கல்களும் சாதி அடிப்படையில் எழுந்தன. சாதி ஏற்றத்தாழ்வுக்கேற்ப, சைவ புலால் உணவு முறைகளும் அமைந்தன. பண்டைத் தமிழ் நாட்டில் அருகியிருந்த சைவ உணவு முறை, பௌத்த, சமண சமயச் செல்வாக்கின் காரணமாகச் செல்வாக்குப் பெறலாயிற்று.

நாளடைவில் உணவு பற்றிய பல புதிய கொள்கைகள் தோன்றின. சுவையைக் கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு,

துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவையாகப் பகுத்ததனர். எல்லா உணவுகளையும் குளிர்ச்சியூட்டும் உணவு, வெப்பமூட்டும் உணவு என இருவகையாகப் பிரித்தனர். தமிழர் உணவு முறையில் இன்னும் இப்பாகுபாடு நின்று நிலவுகிறது. அது மட்டுமின்றி, இப்பாகுபாடு, நாட்டு மருத்துவ முறைகளிலும் செல்வாக்குப் பெற்றுள்ளது. நோய்களை வெப்பு நோய், சீதள நோய் என வகைப்படுத்தி, ஒவ்வொரு வகை நோயையும் உணவு முறையால் குணப்படுத்தும் வழிமுறை கண்டிருந்தனர். வெப்பத்தால் உண்டாகும் நோய்களுக்குக் குளிர்ச்சியான உணவுகளையும், குளிர்ச்சியால் ஏற்படும் நோய்களுக்கு வெப்பமூட்டும் உணவுகளையும் கொடுத்துக் குணப்படுத்தினார்கள்.

கி.பி.முதல் நூற்றாண்டில் வழங்கிய சில சமையல் பக்குவங்கள், சற்றும் மாற்றப்படாமல் இன்றும் கையாளப்படுகின்றன. சமையற் கலை விரிவானது; சிக்கலானது; அது ஒரு நுண்கலையாகவே கருதப்படுகிறது. சமையற் கலை பற்றிய பாக நூல்கள், அடுப்பின் வகைகள் பற்றியும். சமையலறையின் வடிவளவு குறித்தும், அடுப்பு எந்தத் திசையை நோக்கி இருக்க வேண்டும் என்பதையும், ஒரு சமையற்காரர் பெற்றிருக்க வேண்டிய பண்பியல்புகள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

தமிழரின் அன்றாட உணவு எளிமையானது. அரிசிச்சோறு, சாம்பார், புலாலுண்பவர்களுக்குமீன் அல்லது இறைச்சிக் கறி, காய்கறிப்புலவு, ரசம், தயிர் ஆகியவையே பெரும்பாலும் அவர்களின் அன்றாட உணவில் இடம்பெறுகின்றன. பண்டிகை நாட்களில் பாயசம் இடம்பெறுகின்றது.

பணக்காரக் குடும்பங்களில்கூட அன்றாட உணவு, மேற்சொன்ன வகைகளிலிருந்து அதிகம் வேறுபடுவதில்லை. ஆனால் விருந்தினர் வரும்போதும், திருமண விழாக்களிலும், நறுஞ்சுவை மிகுந்த பெருவிருந்து படைக்கப்படுகிறது. இந்நன்னாட்களில் விருந்தோம்புநரின் செல்வச் செழுமை இந்த விருந்துகளில் பிரதிபலிக்கின்றன.

இயற்கைச் சூழலுக்கேற்பவும், பல்வேறு மண்டலங்களில் விளையும் உணவுப் பொருள்களுக்கேற்பவும் தமிழ் மக்களின் உணவு முறைகள் வெவ்வேறு விதமாக உருவாகியுள்ளன. ஆற்றங்கரைகளிலும், கழிமுகப் பகுதிகனிலும் வாழ்வோரின் உணவில் அரிசி, கரும்பு, வாழைப்பழம், தேங்கால் மிகுதியாக இடம் பெறுகின்றன. சற்று வறண்ட பகுதிகளில் தினைவகைகளும், பருப்பு வகைகளும் முக்கிய உணவாகின்றன.

பூண்டு, சுவையூட்டும் பொருள்கள், நறுமணப் பொருள்கள் ஆகியவற்றைத் திறம்படக் கையாள்வதுதான் தேர்ந்த சமையற் கலையாகும். நறுமணப் பொருள்கள் கையாளப்படும் அளவு, குடும்பத்திற்குக் குடும்பம் வேறுபடுவதால், உணவுப் பண்டங்களின் சுவையிலும் நுட்பமான வேறுபாட்டைக் காண்கின்றோம்.• நேர்மாறான சுவைகளையுடைய உணவுப் பண்டங்களை அடிக்கடிக் காணலாம். சாம்பார், மோர்க் குழம்பு, புளிக்குழம்பு, மீன்வறுவல், இறைச்சிக் கறி ஆகியவை கைப்பும், கார்ப்பும் இணைந்த, மக்கள் மிகுதியாக விரும்பி உண்ணும் உண்டிகளாகும்.

தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் முதன்மையான உணவு அரிசிதான். பெரும்பாலும் மூன்று வேளையும் அரிசி உணவே உண்ணப்படுகின்றன. பெரும்பாலான நடுத்தரக் குடும்பங்களில் காலைச் சிற்றுண்டி இட்லி, தோசை, புட்டு, இடியாப்பம் அல்லது அப்பம் ஆகும். இக்காலத் தமிழரின் உணவில் முக்கிய பானமாக இடம் பிடித்திருப்பது காப்பி.



வீட்டில் மகனுக்கு உபநயன விழாவின்போது மரபான முறையில் வாழை இலையில் விருந்தினக்குச் சிறப்பு விருந்தளிக்கப்படுகிறது. 12 வயதில் நடைபெறும் இச்சடங்கின்போது பையனுக்குப் பூநூல் அணிவிக்கப்படும். இந்நூல் இடதுதோளிலிருந்து உடலின் குறுக்காக வலது விலாப்பக்கம் தொங்கும். வாழ்நாள் முழுவதும் அணியப்படும் இந்நூல் ஆண்டுதோறும் மாற்றப்படும். இந்நூலை அணிபவர் ''இருபிறப்பாளர்'' என்பதை இது காட்டும்.

நிழற்படம் © ஜான் பாப்திஸ்த் ஃபாய்வ்ர், பாரிஸ்

காப்பிக் கொட்டையை வறுத்துப் பொடியாக்கி, பாலும் சர்க்கரையும் கலந்து தயாரிக்கப்படும் காப்பி, காலை உணவின் போது அருந்தப்படுகின்றது. இன்று திடீர்க் காப்பியும் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் உணவுப்பழக்கம் மெல்ல மெல்ல மாறிவருகின்றது. நகர்புறங்களில் கோதுமையைப் பயன்படுத்துவது பெருகிவருகின்றது. காலை உணவாக பூரி, உருளைக்கிழங்குடன் சேர்த்து உண்ணப்படுகின்றது. இரவு உணவில், சோற்றுக்குப் பதிலாக, சப்பாத்தி இடம் பெறுகின்றது.

நகர்ப்புறங்களில் துருப்பிடிக்காத பாத்திரங்களும் சமையற் கருவிகளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டபோதிலும், வாழை இலையில் உணவு பரிமாறும் பரம்பரைப் பழக்கம இன்னும் நிலவுகிறது. உண்பவருக்கு முன்னால், இலையின் நுனி இடதுபுறமாக இருக்கும் வகையில் இலை போடப்படுகிறது. இலையின் இடது ஓரத்தில் முதலில் உப்பும், ஊறுகாயும் பரிமாறப்படுகின்றன. எதனையும் இனிப்பு வழங்கித் தொடங்குவதே தமிழர் பண்பாடு. குழந்தைக்கு முதலில் கொடுக்கும் திட உணவு இனிப்புப் பண்டம். புதுமணத் தம்பதிகள் முதலில் அருந்துவது இனிக்கும் பால். அது போலவே, விருந்தும் இனிப்புடன் தொடங்குகிறது.

ஒவ்வொரு பண்டிகைக்கும், சடங்குக்கும் தனிவகை உண்டி உண்டு. ஏழாம் மாதத்தில் குழந்தைக்குக் கொடுக்கப்படும் முதல் அரிசி உணவு சர்க்கரைப் பொங்கலாகும். குழந்தைக்குப் பல் முளைக்கும்போது, பால் கொழுக்கட்டை கொடுக்கின்றார்கள். எல்லாச் சமுதாயங்களிலும் மக்கள் பூப்பெய்தும் நாள் சிறப்புக்குரிய நன்னாளாகும். பூப்பெய்திய பெண்ணுக்குப் பால், பழம், சர்க்கரை ஆகியவற்றைக் கொண்டு போய்க் கொடுத்துக் குடும்பப் பெண்கள் வாழ்த்துகிறார்கள். பெண் கருவுற்ற ஏழாம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் அவளுக்கு வளைகாப்பிட்டுச் சீமந்தம் கழிக்கின்றார்கள். அன்று பலவாக அரிசி உண்டிகள் ஆக்கி உண்டு மகிழ்கின்றார்கள்.

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோர் உழுதுண்டு வாழ்வோர். எனவே, இங்கு தமிழாண்டின் தை முதல் நாள் பொங்கல் திருநாள் அறுவடைப் பெருநாளாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. (31ஆம் பக்கத்துப் பெட்டிச் செய்தி பார்க்க) உழவர் இல்லத்தில் பொங்கும் வளமையைப் பொங்கல் குறிக்கிறது.

தமிழரின் சமையலறையில் நவீன சாதனங்கள் படிப்படியாக இடம்பிடித்து வருகின்றன. பழையன கழிந்து, புதுமைகள் புகுந்துள்ளன. •சமைப்பதற்கு நெடுநேரம் பிடிக்கும் மரபு உண்டிகள் மறைந்து வருகின்றன. திடீர் இட்டலி, திடீர் சாம்பார் பொடி, திடீர் ரசப்பொடி போன்ற ஆயத்த உணவுப் பண்டங்கள் இப்பொழுது சமையலறையைப் படையெடுத்து விட்டன. மாவாட்டும் ஆட்டுரல்கள் மறைந்து, மாவு அறைக்கும் எந்திரங்கள் பயனுக்கு வந்துவிட்டன. கூட்டுக் குடும்பம் உடைந்து, தனிக் குடித்தனங்கள் பெருகிவிட்டன; அத்துடன் பணிகளுக்குச் செல்லும் மகளிர் • எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. இதனால், தமிழ் மக்களின் •உணவுப் பழக்கங்களிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சமையல் வேலையை எளிதாக்குவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. எனினும், தமிழரின் உணவுப் பழக்கங்களும், அவற்றின் பண்பாட்டுச் சிறப்புகளும் தங்கள் அடிப்படை இயல்பினை இன்னும் இழக்கவில்லை.

தமிழில்: இரா. நடராசன்



நிழற்படம் இமானுவல் குய்லோ © அட்லாஸ் நிழற்படம், பாரிஸ்

தஞ்சைப் பெரிய கோயில் முற்றிலும் கருங்கல்லாலான இம் மாபெரும் சிவாலயம் புகழ்மிகு சோழ மன்னர் முதலாம் ராஜராஜர் (985—1014) ஆட்சியில் கட்டப்பெற்றது.

கடவுளரின் வாயில்

1. கல்லிலே மறையுரை

ஆர். நாகசாமி

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் வாழ்க்கை, வானளாவும் கோயில்களையும் எழிலார்ந்த சிற்பங்களையும் வியத்தகு செப்புத் திருமேனிகளையும் மையமாகக் கொண்டு திகழ்ந்து வந்துள்ளது.

தமிழ் நாட்டின் தலங்கள், சிவன், திருமால், முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களின், திருவிளையாடல்களும், அவதாரங்களும் நிகழ்ந்த தலங்களாகவும் தலபுராணங்களோடு தொடர்பு கொண்டவையாகவும் திகழ்கின்றன. இவ்வாறு புராணங்களிலும் இதிகாசங்களிலும் குறிக்கப்பட்டுள்ள இடங்கள் தெய்வ மகிமை பெற்றவைகளாகக் கொள்ளப்பட்டன. ஏராளமான மக்கள் சென்று வழிபடும் தலங்களாகவும் உள்ளன. இப்புராண மரபுகள் சில அனைத்திந்திய மரபில் மிளிர்ந்தவை. ஆயினும் பெரும்பாலானவை தமிழகத்திலேயே தோன்றி தமிழ் உணர்வாகப் பரிணமித்தவை.

திருவரங்கத்துள்ள பெருமான் கோயிலும், இராமேச்சுரத்து சிவபிரான் கோயிலும், இராமாயணத்துடன் தொடர்பு கொண்டவை. தசமாமுகனை கொன்ற பாவம் போயற இராமர் சிவபெருமானை வழிபட்ட தலம் இராமேச்சுரமாகும். முருகப்பெருமான் சூர சம்ஹாரம் செய்த இடமாகக் கொண்டு வழிபடப்பெறும் இடம் திருச்செந்தூர், மதுரை அங்கயற்கண்ணம்மை ஆலயம், சொக்கநாதப் பெருமான் 64 திருவிளையாடல்கள் புரிந்த தலமாகும்.



திருநெல்வேலி மாவட்டக் கோயிலின் கோபுரத்தில் இந்த 15ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது. பாரசீக வளைகுடாவிலிருந்து குதிரைகளை ஏற்றிவரும் கப்பலை இது காட்டுகிறது. தென்னிந்திய மன்னர் கள்விலையுயர்ந்தகுதிரைகளைப் பாரசீகத்திலிருந்தும் அரேபியாவிலிருந்தும் இறக்குமதி செய்தனர். விஜயநகர மன்னர் தமக்கும் தம் அலுவலர்களுக்கும் ஆண்டுதோறும் 13,000 குதிரைகள் இறக்குமதி செய்தாராம்.

நிழற்படம் © ஐ. எஃப். ஐ, புதுச்சேரி

ஆர். நாகசாமி தமிழ்க்கலையிலும் தொல்பொருளாய்விலும் வல்லுநர். 1959 முதல் 1962 வரை சென்னை அருங்காட்சியகத்தில் கலை, தொல்பொருளாய்வுக் காப்பாளராக இருந்தார். அப்போது தமிழக தொல்பொருளாய்வுத் துறையில் சேர்ந்த இவர் 1966இல் அதன் முதல் இயக்குநரானார். 100-க்கு மேற்பட்ட நூல்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது "தாந்த்ரிக் கல்ட்ஸ் ஆஃப் சவுத் இண்டியா" 1982இல் வெளியிடப் பெற்றது.

கோயில்கள் மக்களின் வேண்டுதல்கள் நிறைவேறும் பொருட்டும் எடுக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரத்தில் உள்ள கல்வெட்டு மக்களின் விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டுச் சிவாலயம் எடுக்கப்பட்டதாகக் கூறுகிறது. மன்னன் புதியதாக ஓர் ஊரை நிர்மாணித்தபோது மக்களின் நல்வாழ்வுக்காக, பல ஆலயங்களை அங்கு எழுப்பித்து வழிபாட்டுக்கும் வகை செய்தான். சங்க காலத்து புகழ் பெற்ற மன்னனாகிய கரிகாலன், உறையூரைத் தலைநகராக ஆக்கிய போது பண்டைய நூல் மரபுப்படி கோயில் எடுத்து பின்னர் குடியேறினான். அரசன், பெற்றோர், உறவினர், மற்றும் புகழ்பெற்றவர்களின் நினைவாகவும் கோயில்கள் எடுக்கப்பட்டன.

பெரும்பாலான ஆலயங்கள், மன்னர்களாலும், மாதேவியராலும், பெருங்குடி மக்களாலும், அன்பாலும், பக்திப் பெருக்காலும் எடுக்கப்பட்டன. சங்ககாலச் சோழப் பெருமன்னன் கோச்செங்கண்ணான், சிவபிரானுக்கு எழில் மாடம் எழுபது எடுப்பித்தான். கி.பி. 590 முதல் 630வரை ஆண்ட புகழ்பெற்ற பல்லவப் பேரரசன் முதலாம் மகேந்திரவர்மன் பக்தியினால் பாறைகளைக் குடைந்து பல தளிகளைத் தோற்றுவித்துள்ளான். சிவபிரானுக்காக இவ்வாலயத்தை எடுத்து, அதில் அவனுருவை பிரதிட்டை செய்து தலையாலே தாங்குகின்றான். என்று திருச்சியில் உள்ள அவனது கல்வெட்டுக் கூறுகிறது. மகேந்திரவர்மன் பெருங்கோயில் எடுத்தான் என்ற பொருளில் 'மகாசேத்தாகாரி' என்ற பட்டம் ஏற்றான். கி.பி. 985 முதல் 1014 வரை ஆண்ட சோழப் பெருந்தகை முதலாம் இராஜராஜ சோழனால் நிறைந்த பக்தியோடு எடுக்கப் பெற்றது தஞ்சைப் பெருங்கோயில்.

இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது நினைவாகவோ, கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. இறந்த ஒரு கால வரைக்குப் பின்னர் இறந்தோர் தெய்வமாகி நிற்பர் என்றும் அவர்கள் வழிபாட்டுக்கு உரியவர் என்றும் நிலவிய நம்பிக்கையால் இறந்துபட்டோர்க்கு கோயில் எடுப்பது பரவலாகக் காணப்படுகிறது. பெருங் கற்காலத்தில் எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் ''கற்றிட்டைகள்' பின்னர் தோன்றிய பள்ளிப் படைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. பிற்காலத்தில் சில கோயில்கள் 'கற்றிட்டைகள்' வடிவிலேயே தோன்றின. இவற்றின் உட்புறக் கல்லில் இறந்தோரின் உருவம் பொறிக்கப்பட்டு விளங்கும்.

பாண்டியரின் பண்டைய தலைநகரான மதுரையிலுள்ள மீனாட்சி அம்மனின் சைவ ஆலய முகப்பு. 1310இல் இந்நகர் முற்றிலும் அழிந்தது. இப்போதுள்ள கோயில் 17—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நிழற்படம் இந்து மதத்தின் பரந்த நோக்கைக் காட்டுகிறது. இது சைவ ஆலயமாக இருப்பினும், வலப்புறத்தில் புராணப் பறவையான கருடனில் அமர்ந்திருக்கும் விஷ்ணுவைக் காணலாம்.

நிழற்படம் © க்ளோத் சோவகியோ, பாரிஸ்

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் உட்புறம். இடப்புறம் சிவபிரானின் வாகனமான நந்தியையும் வலப்புறம் சிவபிரான், பார்வதியின் மகனான யானைத் தலையுடைய கணேசரையும் காணலாம். அவரது வாகனமான மூஞ்சூறு முன்னால் பதுங்கி நிற்கிறது.

நிழற்படம் © க்ளோத் சோவகியோ, பாரிஸ்

கோயில்களில் வழிபாடு செய்யும் முறைகள் ஆகமங்கள் அல்லது தந்திர நூல்களில் வரன் முறை செய்யப்பட்டுள்ளன. ஆகமங்கள், சரியை, கிரியை, யோகம்,ஞானம் என்று நான்கு பகுதிகளாக உள்ளன. வழிபடுவோர் ஆற்றின் கண் குளித்தலும் உள்ளமும் புறமும் தூய்மையாக்கி நித்த நியமங்களை அனுசரித்தலும் தீட்சை பெறுதல் போன்ற முறைகளும் 'கிரியை'யில் அடங்கும்.

ஆலயங்களில் பூசை செய்யும் முறை கிரியாபாதத்தில் குறிக்கப்பெறும். அடியார் அனுசரிக்க வேண்டிய யோகமுறைகள் யோக பாதத்தில் காணப்படும். வழிபாட்டின் இறுதி குறிக்கோளான ஞானம் அடைதலும், அதன் பயனாய் வீடு பேறு பெறுதலுமான தத்துவங்களை ஞான பாதம் எடுத்துரைக்கும்.

தொன்மையான ஆகமங்கள் கோயில் வழிபாட்டுமுறைகளோடு மட்டுமின்றி ஊரமைப்பு, நகரமைப்பு, மனை எடுத்தல், கோயில் நிர்மாணித்தல், பரிகலன்கள் செய்தல் முதலிய பொருள்கள் பற்றியும் விரிவாகக் குறிக்கின்றன. சங்க காலத்தில் சிவபெருமான், திருமால், கொற்றவை, முதலிய தெய்வங்களுக்கு சமணர், பௌத்தர், திருமேனிகளுக்கும் கோயில்கள் இருந்தன. ஆயினும் அவை பெரும்பாலும் செங்கல்லாலும், சுதையாலும், மரத்தாலும், கட்டப்பட்டவை. அக்காலத்திய கட்டிடங்கள் என்பவை ஏதும் எஞ்சவில்லையேயென்றாலும் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்த சைத்தியம், விகாரம் ஆகியவற்றின் எஞ்சியபகுதிகள் காவிரிபூம்பட்டினத்தில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள மண்ணீட்டாளர்களைத்தொடர்ந்து நிலவியதற்கு எடுத்துக்காட்டாக சுதையாலான சிற்பங்களின் உடற் பகுதிகளும், தலைப் பகுதிகளும் இங்கு கிடைத்துள்ளன. பக்திச் செல்வம் பரவிய கி.பி. 600-ஐயொட்டி பல நூற்றுக்கணக்கான கோயில்கள், சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் எடுக்கப்பட்டன. சிலைகள் செங்கல்லாலும் சுதையாலும் எடுக்கப்பட்டவை. முதல் மகேந்திர பல்லவன், பல கோயில்களைத் தோற்றுவித்தவன் மட்டும் அல்ல, சிறந்த கலைஞனாகவும், இசையிலும், நாட்டியத்திலும் வல்லவனாகவும் திகழ்ந்தான். ஓவியத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டு ‘சித்ரகாரப்புலி’ என்ற பட்டம் பெற்றவன். வடக்கே சென்னைப் பகுதியிலிருந்து, தெற்கே திருச்சிவரையிலும் மலைக் குன்றுகளைக் குடைந்து பல குகைக் கோயில்கள் அவனால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அவனுக்குப் பின் வந்தவர்கள் அவன் பணியைத் தொடர்ந்து செய்தார்கள். மகேந்திரனது மகனான மாமல்லனால் சென்னைக்கு அருகில் மாமல்லை துறைமுகப் பட்டினமாக நிறுவப்பட்டது. இங்கு பல்லவ சிற்பிகள் தமது கலைத் திறமையால் ஒற்றைக் கற்கோயில்களையும் குகைக் கோயில்களையும், பாறைச் சிற்பங்களையும் தோற்றுவித்துள்ளனர். கி.பி. 700இல் இராஜசிம்ம பல்லவன் பல குகைகளிலும் கோயில்களிலும் எழிலார்ந்த சிற்பங்களை உருவாக்க சிற்பிகளை ஊக்குவித்துள்ளான். மலையைச் செதுக்கி உருவாக்கப்பட்ட கோயில்கள் உள்ளன. இவற்றில் உருவத்தாலும் தோற்றத்தாலும் ‘ரதங்களைப்’ போன்று ஐந்து கோயில்கள் உள்ளன. இவை திட்டமிட்டு செதுக்கிஅமைக்கப்பட்டவை மட்டுமல்ல. சீராகவும் எழிலாகவும் அமைந்த உன்னதப் படைப்புக்களாகும். இவை அன்று திகழ்ந்த மரத்தாலான கட்டிடங்களை படம் பிடித்துக் காட்டுபவை போல பலகணி, விட்டம் முதலிய மரவேலைப்பாடுகளை பிரதிபலிக்கின்றன. ஒற்றைக் கற்கோயில்களைப்போல் பதினைந்துக்கு மேற்பட்ட குகைக் கோயில்கள், அரைகுறையாக முற்றுப் பெற்ற நிலையில் இங்கு உள்ளன. சிலவற்றில் சிவபெருமான், துர்க்கை ஆகிய தெய்வங்களின் உருவங்கள் எழிலாகப் படைக்கப்பட்டுள்ளன. மகிஷாசுரமர்த்தினியின் குகைக் கோயிலில் பாய்ந்து வரும் சிம்மத்தின் மீதமர்ந்து வரும் துர்க்கை, குள்ளர்களும், பெண்களும் சூழ்த்து வரும் தோற்றம் உள்ளது. தேவி கரத்தில் வில்லும், அம்பும், வாளும் பூண்டு விளங்குகிறாள், அவளுக்கு எதிரில் எருமைத்தலை அசுரன் தோற்று, பின் வாங்கும் நிலையில் அவனது வீரர் அனைவரும் பின்வாங்குகின்றனர். சிலர் வீழ்கின்றனர். சிலர் களத்தை விட்டு ஓடுகின்றனர். தேவியின் பக்கத்தில் அனைவரும் முன்னேறுகின்றனர். அசுரன் பக்கத்தில் அனைவரும் வீழ்கின்றனர். இந்திய நாட்டிலேயே, இது சிற்பக்கலையின் மகோன்னதமான படையாகும். இதற்கு எதிரில், திருமால் சாந்தமாக அமைதியாக அனந்தனாம் அரவில் படுத்துறங்குகின்ற அரவணை துயின்ற அண்ணல் உருவம் உள்ளது.

மாமல்லபுரத்தில் உள்ள மற்றொன்று மிகச் சிறந்த அர்ச்சுனன் தவம் என்னும் பாறைச் சிற்பமாகும். பாறையின் நடுவில் உள்ள பிளவு ஒன்று, ஆகாயத்திலிருந்து நிலத்தில் பாய்ந்து பாதாள உலகுக்குப் பாயும் கங்கை நதியாக உருவகிக்கப்பட்டுள்ளது. அமரர்களும், இயக்கர், கின்னரர் முதலியோரும், கானவர்களும், பறவைகளும் விலங்குகளும் சூழ்ந்து வர, மகாபாரதத்தின் வீரன் அர்ச்சுனன், சிவபிரானுக்கு எதிரே தவம்புரிவது காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் அடிப்பகுதியில் உள்ள யானைகளின் சிற்பங்கள், இந்தியக் கலைப் படைப்புகளிலேயே ஈடுஇணையற்றவை.

இதன் அருகில் கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கி ஆநிரைகளையும் ஆயர்களையும் காத்த காட்சி உள்ளது. இங்குள்ள பசுவும், கன்றும், விலங்குகளின் உயிர்த் துடிப்பை வடித்துக் காட்டும் பல்லவச் சிற்பிகளின் வல்லமையை எடுத்துக் காட்டுகிறது. மாமல்லபுரம், சிற்பிகளின் கலைக் கருவூலம் எனலாம். அனைத்துலகக் கலையின் இருப்பிடமாக இது திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

(தொடர்ச்சிபதினெட்டாம்பக்கம்பார்க்க)

திருவரங்கத்திலுள்ள விஷ்ணு ஆலயத்தின் 13ஆம் நூற்றாண்டுச் சிற்பம் பல வைணவப் பாடல்களின் கற்பனையை எதிரொலிக்கின்றது. இவற்றில் பக்தி நிறை ஆன்மா, தன் காதலரான இறைவனை அடைய விழையும் இளநங்கையாகக் காட்டப்படுகின்றது.

காஞ்சீபுரத்திலுள்ள கைலாசநாதர் ஆலய அடிப்பகுதியை அலங்கரிக்கும் புடைப்போவியத்தில் குள்ளர் ஆனந்த நடனமாடுகின்றனர். இச்சிவாலயத்தை கி.பி. 725இல் பல்லவ மன்னர் ராஜசிம்மர் கட்டினார்.

நிழற்படங்கள்© ஆர். நாகசாமி, சென்னை

மாமல்லபுர ஆலயச் சிற்பங்கள்

சென்னைக்கு 80 கி.மீ. தெற்கே கடற்கரையிலுள்ள மாமல்லபுர . ஆலயத் தொகுதி பல்லவ வம்சத்தின் (4—9ஆம் நூற்றாண்டுகள்) மாபெரும் கட்டடக்கலை, சிற்பக்கலைச்சாதனைகளுள் ஒன்று. பெரும் பாறை முகப்பில் செதுக்கப்பட்டுள்ள ''அர்ஜுனர் தவம்'' அல்லது ''கங்கை இறக்கம்'' எனும் சிற்பம் ஓர் எழில்மிகு படைப்பாகும். அதன் நடுவில், பெரும் இந்து சமயக் காப்பியமான 'மகா பாரத' வீரரான அர்ஜுனர் சிவபிரானுக்காக தவமிருக்கிறார். அர்ஜுனருக்கு அருகில் பாறையிலுள்ள பிளவு, வான்கங்கை வானிலிருந்து நிலத்திற்கு இறங்குவதைக் குறிக்கின்றது. நடுப் பிளவுக்கு இரு மருங்கிலும் கங்கையின் அற்புதமான இறக்கத்தைக் காண வந்திருக்கும் கடவுளர், சிறு தெய்வங்கள், புனிதர்கள், இசைவாணர், வேடர், நகர மக்கள் (வலப்புறம் பார்க்க) விலங்குகள் (கீழே), பறவைகள் ஆகியோரின் எழில் சிற்பங்களைக் காணலாம். அருகிலுள்ள குகையில் விஷ்ணுவின் வாழ்க்கைக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. வலப்புறம் அடியில்; ஆயர் மன்னரான கிருஷ்ணராக 8ஆம் அவதாரம் எடுத்த விஷ்ணு பசுவிடம் பால்கறப்பதைக் காணலாம். அதே குகையில் மற்றெரு சிற்பத்தில் கிருஷ்ணர் தம்மை எதிர்க்கும் இந்திரனின்கோபத்தினின்று ஆயர்களையும் அவர்களுடைய மந்தைகளையும் காப்பதற்காக கோவர்த்தன மலையைத் தூக்கியிருப்பதைக் காணலாம். அடியில்: மாமல்லபுரத்தில் ஒரே பாறையில் செதுக்கப்பெற்ற 'ஐந்து இரதங்கள்' எனப்படும் கோயில்கள். இவை, விழாக்காலத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் தெய்வங்களின் தேர்களைப் போலுள்ளன. ''மகா பாரதத்''தின் பாண்டவ வீரர்களுக்கும் அவர்களின் துணைவி திரௌபதிக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள இவை மாமல்ல் பல்லவன் (630—668) ஆட்சியில் பாறையில் செதுக்கப்பெற்றன. இவரது பெயரே மாமல்லபுரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



நிழற்படம் © கிளாட் சோவகாட், பாரிஸ்

நிழற்படம் © அரசுத் தொல்பொருளாய்வுத் துறை, தமிழ்நாடு



நிழற்படம் © பால் அல்மாசி, பாரிஸ்



நிழற்படம் கி. லெனார் © அட்லஸ் ஃபோட்டோ, பாரிஸ்

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

கி.பி.9ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசர் தோன்றியபோது கட்டிடக் கலையில் சில மாற்றங்கள் தென்படுகின்றன. பெரும்பாலான கோயில்கள், கருங்கல்லால் அதிக உயரமின்றி கட்டப்பட்டு விளங்குகின்றன. மிகவும் கவனத்துடனும் வேலைப்பாட்டுடனும் கருவறை கட்டப்பட்டது. அதில் கோபுரங்களில் தெய்வங்களின் உருவங்கள் மிகவும் அழகாக வடித்து, உரிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவை வழிபாட்டு முறைக்கும் தேவைக்கும் ஏற்ப இடம் பெற்றுள்ளன. இக்கோயில்கள் சிறியவையாக இருந்தாலும், இவற்றின் எளிமையும், சீரான அங்க அமைப்புகளும் மனத்தைக் கவர்கின்றன.

இந்த எளிமையான தோற்றத்திலிருந்து, ஒரு நூற்றாண்டுக்குள்ளாக முதலாம் இராஜராஜ சோழனால் (கி.பி. 985-1014) எடுக்கப்பட்ட பெருங்கோயில் தென்னிந்திய மரபிலேயே மாபெரும் கோயிலாக பரிணமித்தது. சுமார் 85 மீட்டர் உயரத்திற்கும் மேலாக, முழுவதும் கருங்கல்லாலேயே எடுக்கப்பட்ட தஞ்சைக் கோயில், கட்டிடக் கலையின் மகோன்னதத்திலும், சீரான அமைப்பிலும் வியத்தகு படைப்பு.

இதன் ஒவ்வொரு அங்கமும் பெருமிதமான படைப்புகள். ஐந்து மீட்டர் உயரத்திற்கும் மேற்பட்ட ஒரே கல்லால் வடித்தெடுக்கப்பட்ட வாயிலை காத்து நிற்கும் மிகப் பெரிய துவார பாலர் சிலை கூட, கட்டிடத்தின் பெருமிதத்தில் மறைந்து நிற்கிறது. வானளாவ ஓங்கும் இக்கட்டிடத்தின் அடியில் நின்று பார்ப்பவர்கள் வியந்து பிரமித்து நிற்பர். இராஜராஜனின் அருமை மைந்தன் முதலாம் இராஜேந்திரன் இதே போன்று அவனது தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டியுள்ளான். கும்பகோணம் நகருக்கு அருகில் உள்ள தாராசுரத்திலும், திருபுவனத்திலும் உள்ள சோழர் கோயில்கள் கலைவண்ணம் மிக்கவை.

சோழர் கலை பல்லவர் கலையிலிருந்து சற்று வேறுபட்டது. சோழர் கட்டிட வல்லமையில் மிகவும் கைதேர்ந்தவர்கள். பல்லவர்கள் நளினமும், எழிலும் ததும்பும் சிற்பக்கலையில் சிறந்தவர்கள். 12ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு புதிய மரபு தோன்றுகிறது. திருச்சுற்று மாளிகைகளும் உயர்ந்த கோபுரங்களும் அனைத்து முக்கிய கோயில்களிலும் எடுக்கப்பட்டன. திருவிழாக்களுக்காக ஆயிரக்கால் மண்டபங்களும், நூற்றுக்கால் மண்டபங்களும் கட்டப்பட்டன.

கி.பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்து கோபுரங்கள் வானோங்கும் வகையில் 60 மீட்டர் உயரத்துக்கு எழுப்பப்பட்டன. இதிலிருந்து இந்துக்கோயில்களின் சின்னங்களாக கோபுரங்கள் மாறின. 1509—1529 வரை ஆண்ட விஜய நகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயன் தில்லை, காஞ்சி, காளஹஸ்தி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இது போன்ற மிகப் பெரிய கோயில்களை எழுப்பித்தான். இதிலிருந்து வானளாவும் கோபுரங்கள் 'ராயகோபுரங்கள்' என வழங்கப்படுகின்றன. இவற்றின் அடிப்பகுதி முற்றிலும் கருங்கல்லாலும், மேல்பகுதி செங்கல்லாலும், சுதையாலும் எடுக்கப்பட்டன, வண்ணம் பூசப்பட்ட நூற்றுக்கணக்கான சுதை உருவங்கள் இவற்றின் மேல் பகுதியை அலங்கரித்தன. இந்த மரபே இப்பொழுது தொடர்ந்து நிலவி வருகிறது.

வண்ணப் பக்கங்கள்

பக்கம் 19

மேலே: சிலைகள், மண் குதிரைகள் ஆகிய காணிக்கைகள் சூழ்ந்துள்ள கிராம வீரக் கடவுள். (28ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையும் நிழற்படக் கதையும் காண்க).

அடியில் இடப்புறம்: வீரக் கடவுளரின் உருவங்களுக்கு முன்னால் அவர்களுடைய வீர உணர்வை மதிக்கும் வகையில் திரிசூலம், வாள், ஈட்டி ஆகியவை நடப்பட்டுள்ளன.

நிழற்படம் © எஸ், பாஸ்கரன், சென்னை

அடியில் வலப்புறம்: பாம்பாட்டியின் குழலிசைக்கேற்ப பாம்புகள் எழுந்து ஆடுகின்றன. இம்மட்சிலை 15ஆம் நூற்றாண்டுக் கவிஞரான பாம்பாட்டிச் சித்தரின் உருவமாக இருக்கலாம். பாம்பாட்டி என்றால் ''ஆடு பாம்பே ஆடு'' என்று கையொப்பமிடுபவர். சித்தர்கள் என்போர் கவிஞர்களும் பண்டைய மரபுகளை எழுதுவோருமாவார். இவர்களுடைய நூல்கள் சில தமிழ் கவிதைத் தொகுப்புகளில் காணப்படுகின்றன. இவர்கள் இரசவாதம், மருத்துவம், யோகம், மாயவித்தை, அற்புத ஆற்றல்கள் பற்றி எழுதினர். சித்தர் கவிஞர்களின் நீண்ட வரிசையில் தாம் இறுதிக் கவிஞரென இக்காலத் தமிழ் கவிஞரான சுப்பிரமணிய பாரதியார் கூறிக்கொண்டார்.

நிழற்படம் © ஆர். நாகசாமி, சென்னை

நடுப் பக்கங்கள்

பக்கம் 20

மேலே: பல்லவர் காலத்து 'அர்ஜுனர் தவம்' எனும் பெரும் பாறைச் சிற்பத்தின் விரிவான தோற்றம். (17ஆம் பக்க நிழற்படங்களும் தலைப்புகளும் காண்க). கங்கை ஆற்றின் புனித நீரில் கழுவிய துணியை அல்லது ஆடையைப் பிழியும் மனிதனை இதில் காணலாம்.

அடியில்: சிவபிரானின் தலை இது. சிவன், பார்வதி திருமணத்தைக் காட்டும் பிற்காலப் (9ஆம் நூற்றாண்டு) பல்லவ வெண்கலச் சிற்பம். (24ஆம் பக்க நிழற்படம் காண்க.

நிழற்படப் © ஆர், நாகசாமி, சென்னை

பக்கம் 21

மேலே இடப்புறம்: திரைக் காட்சிகள் தமிழ்நாட்டின் மிகப் பரவலான பொழுதுபோக்குகளுள் ஒன்று. பகல் காட்சியை விளம்பரப்படுத்தும் இதுபோன்ற வண்ணச் சுவரொட்டிகளைச் சென்னையின் தெருக்களில் காணலாம். (10ஆம் பக்கம் பார்க்க).

நிழற்படம் © ஷான் பாப்திஸ்த் ஃபாய்வ்ர், பாரிஸ்

அடியில் இடப்புறம்: பாணமலை தளகிரீஸ்வரர் ஆலயத்திலுள்ள சிவபிரானின், துணைவியார் பார்வதியைக் காட்டும் பிற்காலப் பல்லவச் சுவரோவியத்தின் விரிவான தோற்றம்.

நிழற்படம் © பி மத்தியாஸ்

மேலே வலப்புறம்: குள்ளரின் தலையில் நடனமாடும் சிவ நடேசரின் முற்காலச் சோழர் காலத்திய இவ்வெண்கலச் சிலை தஞ்சாவூர் மாவட்ட நல்லூரைச் சேர்ந்தது. இதன் காலம் கி.பி. 900 எட்டுக் கரங்களுள்ள ஒரே நடராசர் சிலை இது ஒன்றுதான். இங்கு காணப்படும் சிலை பிற நடராசர் சிலைகளைவிட வடிவத்திலும், நிற்கும் நிலையிலும் வேறுபட்டுள்ளது. (25ஆம் பக்க நிழற்படம் காண்க) சிவபிரானின் சிறப்பியல்புகளைக் காட்டுவதற்காகப் பல நடன வடிவங்கள் அமைக்கப்பெற்றன.

அடியில் வலப்புறம்: ஆலயச் சடங்கில் நடனம் முக்கிய இடம்பெற்றது. ஆலய நடன மாதர் (தேவதாசிகள்), கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரத முனிவர் வகுத்த நடன, சைகை முறைகளுக்கேற்ப உயர்வகை நடனமாடிவந்தனர். இன்று தேவதாசி முறை மறைந்துவிட்டது. ஆயினும் 'பரத நாட்டியம்' எனும் ஆலய நடனம் இன்னும் எல்லா சமூகப் பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆடப் பெறுகின்றது. (26ஆம் பக்கமும் காண்க).

நிழற்படங்கள் © ஆர். நாகசாமி, சென்னை





ல் தினசரி பகல் 11·30





2.

வெண்கலச் சிலைகள்

உலோகங்களால் சிலைகளைவார்த்தெடுக்கும் கலை உலகக் கலைக்கு தமிழகம் ஈந்துள்ள தனிப்பெரும் கலையாகும். சங்க இலக்கியங்களில் இதுபோன்ற சிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும், திருவிழாக் காலங்களில் உலா வரும் திருமேனிகளைப் பாடியுள்ளனர். சிலைகள் உலாவாக எடுத்து வரப்படும் திருமேனிகள் பெரும்பாலும், செம்பால் செய்யப்படுவது மரபு.

உலோகங்களான விக்ரகங்கள் 'தேன்மெழுகு' முறையால் செம்பு, வெள்ளி அல்லது தங்கத்தால் முற்றிலும் கனமாக முற்காலங்களில் வார்க்கப்பட்டன. பிற்காலங்களில், செம்பு, பித்தளை, துத்தநாகம், பொன், வெள்ளி ஆகிய ஐந்து உலோகங்களைக் கொண்டு சிலைகளாக வார்க்கப்பட்டு வழிபடப்படுகின்றன. நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களிலும் 'கடவுள்' நிறைந்து நிற்பதால், விக்ரகங்கள் வார்க்கப்படும் பஞ்ச உலோகங்களும், பஞ்ச பூதங்களைக் குறிக்கும் என்ற கருத்து நிலவுகிறது, ஆதலின் இவை 'பஞ்சலோக மூர்த்திகள்' என்று அழைக்கப்படுகின்றன.

மெழுகினால் உருவம் பிடிக்கத் தொடங்குவதுமுதல் வார்த்து இறுதியாக கோயிலில் பிரதிஷ்டை செய்யப்படும்வரை ஒவ்வொரு செயலும் மந்திரகீதங்கள் ஒலிக்க, பூஜை வழிபாட்டுடனேயே செய்யப்படுகிறது. இறுதியாகச் செய்யப்படுவது உருவத்துக்குத் 'திருக் கண்திறப்பு' என்னும் கண்களைத் திறக்கும் செயலாகும். வலக்கண் சூரியனையும், இடக்கண் சந்திரனையும், நெற்றியில் உள்ள திலகக் குறி நெருப்பையும் குறிக்கும். பீடத்தில் பொருத்தி ''ரத்தின நியாசம்' செய்தல் பிரதிட்டைக்கு ஒப்பாகும்.

விக்ரகங்கள், கருவறையில் உள்ள மூலவரின் புறத்தோற்றமாக, நித்த வழிபாடு பெறுவதோடு திருவிழாக் காலங்களில் அழகுற அலங்கரிக்கப்பட்டு வாகனம் அல்லது தேர் முதலியவற்றில் வைத்து வீதி உலாவாக எடுத்து வரப்படுகின்றன. ஒவ்வொரு கோயிலிலும் இது போன்ற பல செப்புத் திருமேனிகள் உள்ளன. ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகள் இதுபோல் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ளவற்றில் மிகவும் தொன்மையானவை, திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில், ஈமத்தாழிகளில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்தவையேயாகும். அவற்றில் பல விளக்குகளும், நாய், கோழி போன்ற உருவங்களால் அலங்கரிக்கப்பட்ட தட்டுகளுமாகும். ஒரு சிறு செப்பு உருவம், 'தாய்த் தெய்வத்தின் சிலை' என்பர். கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பு விக்ரகங்களில் சிலவே கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் திருமாலின் திருவுருவங்களாகும். பல்லவர் காலத்து திருமேனிகளில். மிகவும் அழகு வாய்ந்தது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள சோமாஸ்கந்தர் சிலை ஆகும். கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு செப்புக்கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள். மூவுலகும் ஈரடியால் அளந்த உலகளந்த திரிவிக்ரம மூர்த்தியின் ஒரு சிலையும் கொடுமுடியில் உள்ள விஷ்ணுவின் சிலையும் ஆகும். இக்கலை தமிழகத்தில் இமயம் எனத் திகழ்வது. ஒரு கல்யாண சுந்தர் நாணம் மேலீட்டில் தளிர்க் கொடி என நிற்கும் உமை எனும் கன்னியின் உருவும், அவள் அருகில், அவள்பால் ஆராக் காதலால் பெருமிதத்தோடு கரம் பற்றி நிற்கும் மணக்கோல நாதராம் அரனின் உருவும் எழிலின் சிகரமாம் தெய்விகத் திருக்கோலம் என்பதோடு மட்டுமின்றி மனித இதயத்தில் பெருக்கெடுக்கும்

வண்ணப் பக்கம் 22

மேலே இடப்புறம்: திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மகளிர் நெல் நாற்று நடுகின்றனர்.

நிழற்படம் © மாரி லூயிஸ் ரெய்னீஷ், பாரிஸ்

கீழே இடப்புறம்: சேலைகள் சாயம் காய்ச்சப்படுகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில் மகளிரின் மரபான ஆடையான சேலை ஒளி வண்ணமுடையது அல்லது பூவேலையுடையது. இது 5 மீட்டர் (சடங்குப் புடவை 8 மீட்டர்) நீளமுள்ளது; உடலைச் சுற்றி அணியப்படும். அதன் ஒரு முனையைத் தலையில் முக்காடாய்ப் போடலாம். இந்துப் பெண்கள் இடைவரை இருக்கும் சட்டைக்கும் பாவாடைக்கும் மேலே சேலையை அணிகின்றனர்.

மேலே வலப்புறம்: கும்பகோணத்தில் 12 ஆண்டுக்கொருமுறை நிகழும் பெரு விழாவில் பக்தர்கள் குணத்தில் திருநீராடுகின்றனர்.

நிழற்படம் © எஸ். பாஸ்கரன், சென்னை

அடியில் வலப்புறம்: இந்தியப் பெருங்காப்பியமான 'மகாபாரதத்'தின் அல்லது வட்டாரப்புராணங்களின் அடிப்படையில் தமிழ் நாட்டிய நாடகங்களை ஆண்கள் மட்டும் நடத்துகின்றனர். இத் தெருக்கூத்து கிராமங்களில் பரவலாக நடைபெறுகின்றது. இதில் இலக்கிய, கிராமிய இயல்புகள் கலந்துள்ளன. சில்வேளை இது பல இரவுகள் தொடர்ந்து நடைபெறும். உரையாடலின் நடுவே நடனமும் இசையும் இடம்பெறும். நடிகர்கள் தம் முகத்தில் வண்ணம் பூசி, வண்ண உடைகளும், பெரிய தலையணிகளும் அணிந்திருப்பார்கள்.

நிழற்படங்கள் © ஆர். நாகசாமி, சென்னை

நிழற்படம் © ஆர். நாகசாமி, சென்னை

காப்பியத் தலைவன் இராமரின் தம்பி இலக்குமணனின் சோழர் கால வெண்கலச்சிலை, 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இது இன்றும் தஞ்சாவூர் மாவட்ட பருதியூரில் வழிபடப்படுகிறது.

சிவபிரான், பார்வதி திருமணம். வடகளத்தூரிலுள்ள இந்த 9ஆம் நூற்றாண்டு வெண்கலச்சிலை பிற்காலப் பல்லவ வெண்கலச் சிற்பத்திற்கு ஓர் அரிய எடுத்துக்காட்டு. (இப்பக்கக் கட்டுரையும், 20ஆம் பக்க வண்ணப் படமும் காண்க)

நிழற்படம் © ஆர். நாகசாமி, சென்னை

உணர்ச்சிகளின் பிரதிபிம்பமென இச்சிலை திகழ்கிறது.

கி.பி. 10-11 நூற்றாண்டுகளில் சோழப் பேரரசர்களின் கீழ் செப்புக்கலை, மகோன்னத நிலையை எய்தியது. இப்போது உலக முழுவதும் இதன் கலைவண்ணம் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. முற்காலச் சோழர் கலை ஆதித்த சோழன் பாணி, செம்பியன் மாதேவியார் பாணி, இராஜ ராஜ சோழர் மரபு என்று மூன்று மரபாக பிரித்து அறியப்படுகிறது. கி.பி. 875 முதல் 906 வரை ஆண்ட ஆதித்த சோழன் காலத்தும், 906லிருந்து 955 வரை ஆண்ட அவன் மகன் பராந்தகன் காலத்தும், அழகான அங்கங்களும், சிற்பங்களும் பொருந்திய பல கோயில்கள் எழுப்பப்பட்டன. அக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஒவ்வொரு சிற்ப வடிவங்களில், பிற்காலத்தில் வந்த பரம்பரையை மட்டுமின்றி தற்கால சிந்தனை சிற்பிகளையும் கலைஞர்களையும் பெரிதும் கவர்ந்துள்ள வடிவம் ஆடவல்லான் என்னும் 'நடராஜ வடிவம்' ஆகும். கலைப் படைப்புகளில் சிறந்த வடிவம் என்பதோடு மட்டுமின்றி இந்திய நாட்டில் தோன்றிய உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட உருவம் என இது திகழ்கிறது. (25ஆம் பக்கப் படங்களையும் விளக்கங்களையும் காணவும்) அன்று தொட்டு எல்லாச் சிவன் கோயில்களிலும், நடராஜ வடிவம் இடம்பெற்றுள்ளது.

சிறந்த கலைகளைப் போற்றும் கலை உணர்வும் பக்திப் பெருக்கும் நிறைந்து திகழ்ந்த சோழப் பேரரசியார் செம்பியன் மாதேவியாராகும். இளம் வயதிலேயே தம் கணவரை இழந்த அவ்வம்மையார், திருக்கோயில்களுக்கு சென்று வழிபடுவதிலும், திருக்கோயில்களை புதுப்பிப்பதிலும், விக்ரகங்களை வார்த்து திருக்கோயில்களில் வழிபாட்டுக்குக் கொடுப்பதிலும் தமது வாழ்நாளைக் கழித்தார். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட கலன்களும், தெய்வங்களை அலங்கரிக்கும் அணிகலன்களும் ஏராளமாக அவரால் அளிக்கப்பட்டன. அவரால் செய்தளிக்கப்பட்ட விக்ரகச் சிலைகள், எழிலும், நெளிவும், தெய்விகத் தன்மையும் நிறைந்து விளங்குபவை.

கி.பி. 985 முதல் 1014 வரை ஆண்ட முதலாம் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருங்கோயில் பல செப்புத் திருமேனிகளை செய்தளித்துள்ளான். இராஜராஜன் தானே முன் நின்று தஞ்சைப் பெருங்கோயிலுக்கு செய்த பணியெல்லாம் அவனது கல்வெட்டால் புலனாகின்றன. விரிவான குறிப்புகளுடன் அவனால் செய்தளிக்கப்பட்ட பல செப்புத் திருமேனிகள் அக்கல்சுவரேடுகளில் குறிக்கப்படுகின்றன.

இராஜராஜன் மரபில் செய்தளிக்கப்பட்டு வளப்பமும் பெருமிதமும் நிறைந்த பல செப்பு வடிவங்கள் தஞ்சைக் கலைக்கூடத்தை அலங்கரிக்கின்றன. இன்னும் சில கோயில்களில் வழிபாட்டில் உள்ளன. தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ள ஆடவல்லாரின் சிலை இவற்றில் மிகச் சிறந்தது. பதினொன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை இராஜராஜன் தோற்றுவித்த கலை மரபு தொடர்ந்து நிலவியது. அதன் பிறகு செப்புச் சிலைகள் எண்ணிக்கையில் ஏராளமாகச் செய்யப்பட்ட போதிலும், கலைவனப்புக் குன்றத் தொடங்கியது.



சிவ நடராசர் பற்றிய சிந்தனைகள்

புகழ்மிகு ஃபிரெஞ்சு சிற்பி ஒகுய்ஸ்த் ரோதன் (1840 – 1917) உணர்ச்சி மிகு இந்தியக் கலை ஆர்வலர். 1921இல் வெளியான 'ஆர்ஸ் ஆசியாட்டிகா' எனும் இதழில், சென்னை அருங்காட்சியகத்திலுள்ள சிவபிரானின் சிலைகளின் நிழற்படங்களைப் பற்றி சுருக்கமான கருத்தாழமிக்க குறிப்புகள் எழுதியிருந்தார். கீழே: சுடர் வட்டத்தின் நடுவே ஆடும் சிவபிரானின் வெண்கலச் சிலையின் தலையும் முகமும் பற்றி ரோதனின் சிந்தனைகளிலிருந்து சில பகுதிகள்.

சிவபிரானை பற்றிப் பொதுக் கருத்துகள்

வாழ்வின் நிறைவு, வாழ்க்கை ஆறு, காற்று, கதிரோன், வாழ்வின் பொங்கும் உணர்ச்சி. இவ்வாறுதான் தூரக்கிழக்கு நாடுகளின் கலை நமக்குத் தோன்றுகிறது.

அக்காலத்தில் மனித உடலின் தெய்வத் தன்மையை வடித்துக் காட்டினர். அது உண்மையான உருவத்தை ஒட்டியிருந்ததனால் அவ்வாறு இருந்ததாகக் கூறமுடியாது. ஏனெனில் நமது உருவ வடிவங்கள் அப்படியே இருந்து வருகின்றன. ஆனால் இன்றைய அடிமைத்தனம் தான் முழு விடுதலை பெற்றுவிட்டதாகக் கருதியது. நாம் அக்கருத்து எல்லைக்கு அப்பால் இருக்கிறோம், சுவை நுகர்வு குறைந்துவிட்டது...



நிழற்படங்கள்: விக்டர் கொளரி © அரசு அருங்காட்சியகம், சென்னை

கூத்தப் பெருமான் சிவ நடராசரின் வெண்கலச் சிலைகள் இந்துமதக் கோட்பாட்டையும் தத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவை இறைவனின் ஆக்கல், அழித்தல், அறியாமையை ஒழித்தல், அருள் அளித்தல் ஆகிய ஐந்து செயல்களையும் குறிப்பால் உணர்த்துகின்றன. நான்கு கரங்களுடைய சிவபிரான் சுடர்விடும் ஒளிவட்டத்தினுள்ளே காணப்படுகிறார் (மேலே நிழற்படத்தையும் இடப்புறம் விரிவான தோற்றத்தையும் காண்க). ஒரு கையில் சிறிய உடுக்கை உள்ளது. இது அனைத்துலகப் படைப்பின் தொடக்க அதிர்வைக் குறிக்கின்றது. மற்றொரு கையில் படைப்புகள் அனைத்தையும் அவிக்கும் தீ உள்ளது. அபய நிலையில் பக்தனை நோக்கியுள்ள மூன்றாம் கையின் உட்புறம் அவனுக்கு அச்சத்திலிருந்து விடுதலையளிப்பதாக உறுதி கூறுகின்றது. உடலின் குறுக்கே 'கஜஹஸ்த' நிலையிலிருக்கும் நான்காம் கை, தூக்கிய இடப் பாதத்தைக் காட்டுகிறது. இப்பாதமே அறியாமையிலும் மருட்சியிலும் அடைக்கலம் (வலப்பாதம் நசுக்கும் குள்ளப் பூதம் இவற்றைக் குறிக்கிறது), ஆன்மாவின் இறுதிக்குறிக்கோள்; அதில் எல்லாம் பேரின்பம்; அங்கு பிறப்பும் இறப்பும் இல்லை. சிவபிரானே இசைக்கும் நடனத்திற்கும் விளக்கமாவார். அவர் பரந்த வானவெளியிலும், பக்தனின் தூய உள்ளத்திலும் ஆடுவதாகக் கூறப்படுகின்றது.

சிவபிரானின் தலைபற்றிய நீண்ட ஆழ்சிந்தனையின்போது:

வீங்கிப் பிதுங்கிய உணர்வு பொழியும் இவ்வாய்...

வாயின் மென்மையும் கண்ணின் மென்மையும் ஒன்று போலுள்ளன.

இன்ப ஏரி போன்ற இவ்வுதடுகளின் எல்லையில் துடிக்கும் உயரிய மூக்குத் துளைகள் உள்ளன.

வளைந்து செல்லும் பாம்புபோன்ற வாய் ஈர இன்பத்தில் நெளிகின்றது. மூடிப் புடைத்துள்ள கண்களை இமை மயிர்கள் தைத்துள்ளன.

மூக்கின் இரு புறங்களும் மென்மையாக உயர்ந்து பரந்து விரிந்துள்ளன.

சொற்களை உருவாக்கும் உதடுகள், சொற்கள் வெளியேறும் போது அசைகின்றன. அசைவில் அவை எழில் அரவம் போன்றுள்ளன.

ஒளிந்து கொள்ள ஓரம் மட்டுமுள்ள கண்கள் எழில் வரிவடிவமும், அடர்ந்த விண்மீன்களின் அமைதியும் உடையன.

இக்கண்களின் அமைதியான ஒளிர்வு; அசையாத வரை கோடுகள்; இவ்வமைதியின் அசைவற்ற இன்பம்.

வளைவுகள் கூடி நின்றுவிடும் இடம்தான் நாடி.

இத்தோற்ற வளைவுகள் தொடர்ந்து முடியும்போது மற்றொன்றினுள் கரைந்துவிடுகின்றன. வாயின் அசைவுகள் கன்னங்களுள் மறைந்துவிடுகின்றன.

காதிலிருந்து வரும் வளைவு ஒரு சிறிய வளைவை எதிரொலிக்கின்றது. இச்சிறு வளைவு வாயையும், ஓரளவு மூக்கின் இரு புறங்களையும் இழுக்கின்றது. இது மூக்கின் அடியிலும், கன்ன எலும்புகள் வரை நாடியின் அடியிலும் சென்று வட்ட வளைவாகின்றது.

வளைந்துள்ள உயர்ந்த கன்னங்கள்.

இன்னும் சிவபிரானின் கருத்துவளமிகு தலையின் முன்னால்:

இக்கண்ணும் மறுகண்ணைப்போல் அதே நிலையிலுள்ளது. இது அருள் ததும்பும் அடைக்கலம்; இன்ப நுகர்வுடையது, ஒளிரும் தன்மையது.

மூடிய கண்கள், சென்றுவிட்ட காலத்தின் இனிமை.

அரும் பளிங்குபோல் இக்கண்கள் தீட்டப்பெற்றுள்ளன.

இமைகளின் சிமிழில் அடைபட்ட கண்கள்; புருவத்தின் வளைவு; வளைந்த உதட்டின் நெளிவு.

வாய் இனிமை மிகு எண்ணங்களின் குகை; ஆனால் சீற்றத்தின் எரிமலை.

இவ்வெண்கலச் சிலையில் சிறைப்படுத்தக் கூடிய உள்ளுயிர் பல நூற்றாண்டுகளாகச் சிறைப்பட்டுள்ளது. ஆவல்கள் முடிவின்றி அடைபட்டுள்ள இவ்வாய்; பார்த்துப் பேச இருக்கும் கண்கள்.

இடையறாது நுழைந்து வெளியேறும் தேனீக்கள் போல், என்றும் உயிர் வாழினுள் புகுந்து வெளியேறுகின்றது; அது இனிய நறுமண மூச்சு.

இவ்வழகிய, மறைந்துபோன முகத்தோற்றத்திற்கு ஒரு தோற்றமுண்டு. இத்தோற்ற வளைவுகள் முடிவுறுமிடத்தில், தாழ்ந்த கன்னங்களின் எழிலானது கழுத்தின் இணைப்புடன் இணைத்துவிடுகிறது.

ஒகுய்ஸ்த் ரோதன்



1 2 3 4

பரத நாட்டியம்

புத்துயிர் பெற்ற பண்டைய கலை

தமிழ் நாட்டின் பண்டைய நாட்டிய நாடகத்திற்கு இப்போது பரதநாட்டியம் என்பது பெயர். நடனமாடுவோர் ஒரு பொருளை வெளிப்படுத்துவதற்குத் துணையாக மரபொழுங்கான கை சைகைகளும் உடல் அசைவுகளும் இதில் பயன்படுத்தப்படுகின்றன. இந்து சமயக் காப்பியங்களான மகாபாரத, இராமாயணப் பாத்திரங்களை இச்சிக்கலான எழில் கலையில் காணலாம். இதில் நாடகம், இசை, கவிதை, வண்ணம், ஒழுங்குநலம் சலந்துள்ளன.

ஓர் அரிய வடமொழி நூலாகிய 'நாட்டிய சாஸ்திரா' வில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ள நுட்பங்களுக்கேற்ப பரத நாட்டியம் நடைபெறுகின்றது. நாட்டிய, நாடக இயல்புகளை எல்லாம் கூறும் இந்நூலைக் கிறித்துவ ஊழியின் தொடக்கத்தில் பரதர் எனும் முனிவர் எழுதியிருக்கக்கூடும். பல நூற்றாண்டுகளாகப் பெரிய கோயில்களின் பகுதிகளில் மட்டும் 'தேவதாசி' (இறை ஊழியர்) எனும் நடனமாதர் இந்நடனங்களை ஆடி வந்தனர். இவர்கள் அரங்கில் ஆடுவதற்குத் தயாராகு முன் பல ஆண்டுகள் பயிற்சி பெற்றனர். கோயிற் சுவர்களில் செதுக்கப்பெற்ற பல சிற்பங்கள் கரணங்களை (நாட்டிய சாஸ்திரத்தில் விளக்கப்பட்டுள்ள கை, கால் நிலைகளை) காட்டி, அக்கால சமய வாழ்வில் நடனம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எண்பிக்கின்றன. இச்சிற்பங்கள் சில கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இந்த கோயில் நடன மாதரின் வழியாகவே (அப்போது தாசி ஆட்டம், தேவதாசி நடனம் எனப்பட்ட) பரத நாட்டியம் இக்காலம் வரை நிலைத்துள்ளது. பிறகு தேவதாசி முறை பெருமை இழந்து பழிக்குட்பட்டது. அது நீண்டகாலமாகப் பேணி வளர்த்த நாட்டிய மரபு மறைந்தொழியும்போல் தோன்றியது.

ஆயினும் கடந்த 50 ஆண்டுகளில், பண்டைய இந்தியப் பண்பாட்டு மரபுகள் பற்றிப் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் பயனாக, பரத நாட்டியம் அழிவினின்று பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், அரிய வகையில் புத்துயிர் பெற்றுப் பன்னாட்டுப் புகழடைந்துள்ளது. ருக்மிணி தேவி இப்புத்தெழுச்சியின் சிறப்புச் சின்னமாக இயங்குகின்றார். 1904இல் பிறந்த இவர் 1930களில் தேவதாசிக் குலத்திற்கு வெளியே பரத நாட்டியம் பயின்ற முதல் அம்மையாராவார். இவர் பாலசரஸ்வதி போன்ற பிற பெரும் கலைஞருடன் சேர்ந்து ''ஆலய உணர்வை அரங்கிற்கு கொண்டுவர' முனைந்தார். இவ்வியக்கத்தில் அறிஞரும் படைப்பாளரும் இணைந்து பண்டைய நூல்களையும் சுவரோவியங்களையும், சிற்பங்களையும் ஆராய்ந்தும், தேவதாசி மரபினருடன் கலந்துரையாடியும் பண்டைய நாட்டியத்தின் மூல வகைகளைத் திரும்பக் கண்டுபிடிக்க முயன்றனர்.

வருங்காலக் கலைஞருக்கும் ஆசிரியருக்கும் பயிற்சியளிக்க 1936இல் ருக்மிணி தேவி சென்னையில் 'கலாச்சேத்திரம் (''கலைகளின் நிலையம்'') எனும் கழகத்தை நிறுவினார். அன்றிலிருந்து அங்கு அவரது மேற்பார்வையில் உலகின் பல பகுதிகளிலிருந்து வந்த மாணவர்கள் கர்நாடக இசையிலும பரத நாட்டியத்திலும் பயிற்சிபெற்று வந்துள்ளனர். மேலும் அச்சடித்தல், நெய்தல், நாடகம், உடை ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பரத நாட்டியம் ஓர் எல்லையற்ற கலை என்பதை நினைக்கும்போது பெரு வியப்பாக இருக்கின்றது. ஏனெனில், மகாபாரதத்தையும் இராமாயணத்தையும் பரத நாட்டியம் வாயிலாகக் காட்டும்போது, மனித உணர்ச்சிகள், எண்ணங்கள் அனைத்தையும் வெளிப்படுத்த முடிகின்றது. இக்காப்பியங்களும் பிற பண்டைய கதைகளும் மனிதனின் அனுபவங்கள் அனைத்தையும் சித்தரிக்கின்றன என்று ருக்மிணி தேவி எழுதியுள்ளார்.

பரத நாட்டியத்தில் கை அசைவுகள் பலதிறப்பட்டவையாக இருப்பதல்; நடனமாடுவோர் அருவமான கருத்துகள் முதல் உருவங்கள், செயல்கள் அனைத்தையும் காட்டமுடியும். கையில் ஓர் அசைவு பல்வேறு, தொடர்பற்ற பொருள்களை உணர்த்தலாம். இப்பக்கத்தில்: (1) பாம்பின் தலை; (2) வன விலங்கின் தலை; (3) பெறுநர் அல்லது அரும்பு; (4) விரிந்த தாமரை; (5) 4 எனும் எண்; (6) தேனீ; (7) பிடித்தல்; பறவை; (8) அச்சம்; 5 எனும் எண்; (9) உண்ணல்; கொப்பூழ்; (10) பறவை.

எதிர்ப்பக்கம்: பரத நாட்டிய வல்லுநர் யாமினி கிருஷ்ணமூர்த்தி, ருக்மிணி தேவி சென்னையில் நிறுவிய பன்னாட்டு நடன, இசை நிலையமான கலாச்சேத்திரத்தில் பயிற்சி பெற்றவர்

6 7 8 9





5

நிழற்படம் © பதிப்புரிமை பெற்றது

ருக்மிணி தேவி

10



நிழற்படம் ஸில்வி கார்னோ, பாரிஸ்

நிழற்படம் © க்ளாட் சோவகியோ, பாரிஸ்

கிராமக் கடவுளரும் வீரரும்

இந்த 'தாய்க் கடவுள்' 3.5 மீட்டர் உயரமுள்ளது. இதன் காலம் கி.மு.500 அண்மையில் பெருங்கற்காலக் கல்லறைகளின் அருகில் கிடைத்தது. இவள் ஸ்ரீவத்ஸாவின் முன்னோடியாக அல்லது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய செல்வ தேவதையின் அடையாளமாகக் கருதப்படுகிறாள். உலகின் பல பகுதிகளில் இத்தகைய தாய்க் கடவுள் செழுமைச் சிலைகள் கிடைத்துள்ளன.

குயவர் கலை

தமிழ்நாட்டில் குயவர்கள் ஒரு தனி நிலை பெற்றுள்ளனர். இவர்கள் இந்தியாவின் பிற பகுதியிலுள்ள குயவர்களைப் போலல்லாமல் 'இருபிறப்பாளர்'களைப்போல் பூணூல் அணிந்துள்ளனர் (13ஆம் பக்கத்தலைப்பு காண்க). பிற இடங்களில் இந்நூலை உயர் சாதியினரே அணிகின்றனர். இக்குயவர் பலமுறை சிறிய கிராமக் கோயில்களின் காப்பாளராகவும் இருக்கின்றனர். இம்மரபுவழிப் பணியின் பயனாகச் சமூகத்தில் மதிப்புப் பெற்றுள்ளனர். இதனால், கடவுளருக்கு அளிக்கப்படும் இறைச்சி, பழம், பணம் போன்ற காணிக்கைகளிலும் பங்கு பெறுகின்றனர். பானை, வீட்டுப் பாத்திரங்கள் போன்றவை செய்வதே தமிழக குயவரின் முக்கியத்தொழிலாக இருப்பினும், உலகிலேயே மிகப் பெரிய மட்சிலைகள் செய்து புகழ் பெற்றுள்ளனர். 7 மீட்டர் உயரமுள்ள குதிரைச் சிலைகள், குறிப்பாக அனைவருக்கும் காணிக்கையாகத் தேவைப்படுகின்றன. கிராமங்களின் பூதங்களை விரட்ட இரவுக் காவல் புரியும் அய்யனாரின் வீரர்களுக்கு இவை குதிரைகளாகுமென நம்பப்படுகின்றது. ஆனால் அண்மையில் இவை செங்கல்லாலும் சிமெண்டாலும் செய்யப்படுகின்றன. குழந்தை பிறந்ததற்காக அல்லது குணமடைந்ததற்காகக் குழந்தைச் சிலை, காயம் அல்லது நோய் நீங்கியதற்காகக் கால், கை, அல்லது பிற உறுப்புகள் போன்ற வடிவங்கள், சிலவேளை விலங்குகள் (பொதுவாகப் பசுக்கள், அரிதாக நாய்கள், பூனைகள்) சிறிய அல்லது நடுத்தர அளவுள்ள காணிக்கைப் பொருள்கள் பழைய முறையிலே செய்யப்படுகின்றன. கோயிலுக்குச் சிலை வழங்கும்போது பல சிக்கலான வழிபாடுகளைச் செய்ய வேண்டும். ஆயினும் சாதாரண காணிக்கைப் பொருளுக்குக்கூட, அதை ஆலயத்தில் வைக்குமுன், இன்றியமையாத, உயிரூட்டும் தோற்றமுள்ள கண்களை அதில் பொருத்தும் இறுதி நேரம்தான் மிக முக்கியமானதாகும்.

இந்திய நாட்டில் வானளாவ விளங்கும் பெருங்கோயில்கள் பயணிகளை வியப்பில் ஆழ்த்திய போதிலும், நூற்றுக்கணக்கில் காணப்படும் நாட்டுப்புற கோயில்களே மக்களின் ஆழ்ந்த பக்தியை எடுத்துக்காட்டுகின்றன. ஓடுகின்ற ஆறுகளிலும், குன்றுகளிலும், நீர் நிலைகளிலும், மரங்களிலும், கடலிலும், ஒளியிலும், காற்றிலும், தெய்வம் கலந்து நிற்பதாகக் கருதினர். இயற்கை அன்னையின் அமைதியான வளமையிலும், சீற்றத்திலும் கடவுள் வெளிப்படுவதாக நம்பினர். அந்நம்பிக்கையே நாட்டுத் தெய்வ வழிபாடாக பரிணமித்தது. பண்டைய உலகெங்கும் பரவலாக நிலவிய 'வளமைத் தெய்வ' வழிபாடும் இத்துடன் தொடர்பு கொண்டது. தெய்வத்தைத் தாயாகப் போற்றும் நம்பிக்கையால், ஊர்த்தெய்வமாக, 'கிராம தேவதையாக' உருவகித்து அத்தேவியே ஊர்மக்களைக் காப்பவளாகவும், அவர்களது வாழ்வை நிர்ணயிப்பவளாகவும், தாயைப் போல் அன்போடு வளர்ப்பவளாகவும் போற்றினர். தமது நாட்டுக்காகவும் மக்கள் சமுதாயத்துக்காகவும், தமது வாழ்வை தியாகம் செய்த "வீரர்களின்" வழிபாடு, 'கிராம தேவதை' வழிபாட்டுக்கு இன்றியமையாத அடிப்படையாக அமைந்தது.

தமிழ் நாட்டிலும், இந்தியாவின் பிற இடங்களிலும், எடுக்கப்பட்ட 'நடுகல்' அல்லது 'வீரக்கற்கள்' மறைந்த வீரர்கள் அவற்றில் தெய்வமாக உறைவதாகக் கொண்டு வணங்கப்பட்டனர். வீரமரணம் எய்தியோர் ஆவி, ஊர் மக்களது வாழ்வை வளப்படுத்தும் தெய்வசக்தி என்று வழிபடும் மரபு, வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே இறந்தோருக்கு பெருங்கற் சின்னங்கள் எடுக்கும் மரபிலிருந்தே வந்தது என்பதில் ஐயமில்லை.

மூன்று குத்துக்கற்களும், தலைக்கல்லும் அடிக்கல்லும் கொண்டு ஒரு சிறிய இல்லம்போல எடுக்கப்படும் 'கல் திட்டைகள்' போல் நடுகற்கள் காணப்படுகின்றன. இது பின்புறக் கல்லில் புகழ் நிறுத்திய இறந்தவீரனின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு வீரனின் உருவங்கள் பல நிலைகளில் காணப்படுகின்றன. வேல், வாள், அல்லது வில் கொண்டு வீரர் போரிடுவதாக பெரும்பாலும் இவற்றில் காணப்படுகின்றன.

பல நடுகற்களில் வீரன் இறந்த போரும் அவனது பெயரும், நடுகல் எடுத்தோரின் பெயரும், வட்டார மொழியில் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் வீரனின் பெயரும் பீடும் பொறிக்கப்பட்ட நடுகற்கள் சுமார் கி.பி.4ஆம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரைக் காணப்படுகின்றன.

நாட்டுப்புற கோயில்களை பற்றியும் அவற்றின் சமுதாயப் பின்னணியைப் பற்றியும் அறிந்து கொள்ள நடுகற்களைப் பற்றி அறிவது இன்றியமையாததாகும். பல இடங்களில் நடுகற்கள் நிழல் நிறைந்த மரங்களின் அடியில் எளிமையான சூழ்நிலையில் காணப்படுகின்றன. நீண்ட வாள்களும், வேல்களும் சூலங்களும் அவற்றின் முன்னர் குத்தி வைக்கப்பட்டுள்ளன. மண் குதிரைகள் கிராமியப் பாணியில் வண்ணம் பூசப்பட்டு முன் வைக்கப்பட்டு விளங்குகின்றன. இந்த வீரனின் ஆவி, அக்கல்லில் நிரந்தரமாக நிலைத்து அச்சமுதாயத்தின் நலனைக் காத்து நிற்கும் என்ற அசையா நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. அதில் உறையும் தெய்வத்தை மக்கள் பயபக்தியுடன் போற்றுகின்றனர், வழிபடுகின்றனர். தமிழ்நாட்டில் சில வட்டார தெய்வங்கள் இதுபோன்ற வீரவழிபாட்டிலிருந்து தோன்றியவை. அவ்வாறு விளங்குவதுதான் மதுரைவீரன் என்னும் தெய்வம். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் நாட்டைக் காத்து, ஆனால் இறுதியில் அந்நாட்டு மன்னனின் தண்டனையால், காதல் காரணமாக உயிரிழந்த வீரனே மதுரை வீரன். அவ்வீரன் அவ்வட்டாரம் முழுவதும் மிகவும் சக்தி வாய்ந்த

நிழற்படம் © மாநில தொல்பொருளாய்வுத்துறை, தமிழ்நாடு

நிழற்படங்கள்: ஆலன் பாப்திஸ்த் ஃபோபிஸ்ர், பாரிஸ்

தெய்வமாக கருதப்படுகிறான்.

அந்திமயங்கிய பின்னர் அவனது ஆவி குதிரைமீது ஏறி ஊரைச் சுற்றி வந்து மக்களை இரவு நேரங்களில் காப்பதாக நாட்டு மக்கள் இன்றும் நம்புகின்றனர்.

வீரமரணம் எய்திய பத்தினிப் பெண்டிரை வழிபடு மரபும் கிராம தேவதைக் கோயில்கள் தோன்ற ஒரு காரணமாக இருந்தன. இறந்த தனது கணவனை இட்ட தீயில் பிறர் தடுத்தும் தானே முன்வந்து வீழ்ந்து இறந்த பெண்கள் தெய்வமாகப் போற்றப்பட்டனர்.

கிறிஸ்தவ ஊழியின் தொடக்கத்திலிருந்து இந்த மரபு நிலவி வந்துள்ளது எனக் கூறும் சான்றுகள் உள்ளன. இவ்வாறு இறந்துபட்ட பெண்களின் ஆவி மக்களுக்கு வளம் அளிப்பதோடு மட்டுமின்றி, தவறு செய்தோரை கடுமையாக தண்டிக்கும் மிகச் சக்தி வாய்ந்தது என்றும் நம்புகின்றனர். அவர்களது உருவங்கள் கல்லில் பொறிக்கப்பட்டு 'பத்தினித் தெய்வம்' என்று போற்றுப்படுகிறது.

இது போன்ற கிராம தேவதைகளின் வழிபாட்டில் இறந்து போனவருக்கு எது மிகவும் உகந்த உணவோ அல்லது பிற பொருள்களோ, அவற்றையே படைப்பது மரபாகும். ஆடு, கோழி முதலியவற்றை இவர்களுக்கு பலி இடுதலும், கள், சாராயம் முதலியன படைத்தலும் மிகவும் சாதாரணமாக இடம் பெறுகின்றன. இதுபோல் விலங்குகளை பலிகொடுப்பது தவறாக விமர்சித்தும், திரித்தும் பரவலாகப் பேசப்படுகிறது. இது மக்களுடைய உணவுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி தோன்றியது. ஒருவர் எதை விரும்பி உண்கிறாரோ அதுவே பக்தியுடன் தெய்வத்துக்கு வழிபாடாக இவ்வாறு படைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் இத்தெய்வங்களுக்கு திருவிழாக்கள் எடுக்கப்படுகின்றன. பஞ்சம், அம்மை போன்ற தொற்றுநோய்கள், கள்ளர் பயம் போன்று குடிகளை வருத்தும் நிலை ஏற்பட்டால் சிறப்பாக பூசை போடுவார்கள். இத்திருவிழாக்கள் மிகவும் சிறப்பாகவும் மேளதாளத்துடனும் கொடை கொம்புகளுடனும் நடைபெறும். இத்தெய்வங்களின் முன்னிலையில் பொய்யுரைத்தால் அவன் மிகவும் கடுமையான தெய்வ தண்டனை அடைவான் என நம்பப்படுகிறது. ஆதலின் கிராமப்புறங்களில் கற்பழித்தல், களவாடல், தொடர்பான பல வழக்குகள் இன்றும் இத்தெய்வங்களின் முன்னிலையில் தீர்க்கப்படுகின்ன.

கிராம தெய்வங்கள் எல்லா நோய்களையும் தீர்க்கும் என்று நம்பப்படுகிறது. உடலின் ஏதாவது ஓர் அங்கமோ, அல்லது முழுமையோ நோயால் பீடிக்கப்பட்டால் அதை தீர்ப்பதற்கு அதே போன்று 'உருவாரம்' செய்து தெய்வத்துக்கு படைத்து வேண்டுதலாக, "நேர்த்திகடன்" கொடுத்தால் நோய் நீங்குமென்று வழிபடுவர். இவ்வுருவங்கள் மண், மரம் அல்லது உலோகத்தால் செய்யப்படுகின்றன. சில சமயம் சுடு மண்ணால் முழு உருவாரம் செய்து வைப்பது உண்டு. மகப்பேறு சுகப்பிரசவமாக நடைபெற ஒரு தொட்டிலில் குழந்தை போல் செய்வதும் உண்டு. கால்நடைகளுக்கு நோய் உண்டானால் கன்று, மாடு போன்று உருவங்களும் செய்து வைப்பதுண்டு. நூற்றுக்கணக்கான சுடுமண் பொம்மைகள் இதுபோல் கிராம தேவதைக் கோயில்களில் காணப்படுவதைக் காணலாம்.

நாட்டுப்புறப் பாடல்களுக்கும், கூத்துக்களுக்கும், கிராம தெய்வ வழிபாடு அடிப்படையாகத் திகழ்கிறது. நூற்றுக்கணக்கான நாட்டுப்பாடல்கள் வீரவழிபாட்டிலிருந்து தோன்றியவை. கிராமப் பாடகர்கள் திருவிழாக் காலங்களில் உணர்ச்சிப் பெருக்கோடு பாடுவர். சில இடங்களில் இரவு முழுவதும் இவ்வாறு பாடுவதைக் காணலாம். இப்பாடல்களில் உள்ள சக்தி, வீட்டின் உள்ளே இருப்பவரையும் மெய்மறந்து பாடல் வரும் இடம் நோக்கி ஓடச் செய்யும் வல்லமை பெற்றவை. ஆயிரக்கணக்கில் மக்கள் இவ்வாறு ஆடிக்கொண்டும் பாடிக் கொண்டும் செல்வதை சில திருவிழாக்களில் காணலாம்.

கிராமப்புற மக்களது பாடல்களிலிருந்தும், ஆடை அணிகலன்களிலிருந்தும், பண்டைய மரபு மாறாது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நிலவுகிறது. உதாரணமாக மதுரைச் சித்திரைத் திருவிழாவில் ஆயிரக்கணக்கில் மக்கள் வண்ண ஆடைகள் அணிந்து, அணிகள் பூண்டு, மாலைகள் தரித்து பங்கு ஏற்பதை 16—17ஆம் நூற்றாண்டு ஓவியங்களிலும் சிற்பங்களிலும் ஒத்துள்ளதைக் காணலாம். கரூரில் நூற்றுக்கணக்கில் ஆண்கள், பெண்கள் உருவம் தரித்து ஆடிக்கொண்டும் பாடிக் கொண்டும் செல்வதைக் காணலாம். சென்னைக்கு அருகில் பெரியபாளையம் அம்மன் கோயிலில் ஆண்களும், பெண்களும் தழை ஆடை மட்டும் தரித்து பலமுறை கோயிலை வலம் வருதலைக் காணலாம். சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் இது போன்ற மரபுகள் இன்றும் காணப்படுவது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இவை மக்கள் மனதில் எவ்வளவு திடமான நம்பிக்கையுடன் திகழ்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டு.

சில இடங்களில் நாட்டு நம்பிக்கைகள் பெருங்கோயில்களுடனும் இணைவதைக் காணலாம். மதுரைக்கருகில் உள்ள அழகர் கோயிலில் ஆகமமுறைப்படி வைஷ்ணவ அந்தணர்களால் பூஜைகள் நடத்தப்படுகின்றன. கோயிலின் கோபுர வாயிலில் பதினெட்டாம் படிக்கருப்பன் என்ற ஊர்த் தெய்வம் வணங்கப்படுகிறது. அக்கோயிலைக் கள்ளர்கள் தாக்கிய போது, அதைக் காத்து உயிர் நீத்த வீரன் கருப்பன். நாட்டுப்புற மக்கள், மூலக் கோயிலில் உள்ள திருமாலைக் காட்டிலும், பதினெட்டாம்படி கருப்பனிடம் மிகுந்த பயமும் பக்தியும் கொண்டு வணங்குவதைக் காணலாம். திருவிழாக் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அழகரையும், கருப்பனையும் சேர்ந்து வணங்குவதைக் காணலாம். பல இடங்களில் இது போன்று நடப்பதால், பெருங்கோயில் மரபுக்கும் நாட்டுக் கோயில் மரபுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை எனும்படி தோற்றமளிக்கும்.

இருப்பினும் கிராமக் கோயிலுக்கும் பெருங் கோயிலுக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு. பெருங் கோயில்களில் நித்திய பூஜைகளும், திருவிழாக்களும், அதற்கென்றே சிறப்பு பயிற்சி பெற்ற குருக்கள் குடும்பங்களால் நடத்தப் பெறுகின்றன. தெய்வத்துக்கும் அடியார்களுக்கும் இடையில் அவர்களுக்கு உதவ இடைப்பட்டவர் ஒருவர் இடம் பெறுகிறார். இது இன்றியமையாத தேவையாக சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வழிபாட்டுக்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரிடம், அப்பணியை ஒப்படைத்துவிட்டு மற்ற குடிமக்கள், கவலை இன்றி தங்கள் பணிகளைச் செய்ய இது வாய்ப்பளிப்பளிக்கிறது. அவர்கள் வேண்டும்போது கோயிலுக்குச் செல்லலாம்.

பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரரின் ஆட்சியில் கி.பி. 625-இல் நிறுவப்பட்ட இந்நடுகல், உண்மையுள்ள நாய் அருகில் நிற்க, கொள்ளையரிடமிருந்து தன் பசுத் தொழுவத்தைக்காத்து உயிர்நீத்த வீரனின் நினைவுக் கல்லாகும். இந்நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் வீரனது பெயர் நாயின் பெயர் ஆகியவை கல்லின் உச்சியில் பண்டைய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

நிழற்படம் © அரசுத் தொல்பொருளாய்வுத் துறை தமிழ்நாடு.

அறுவடை விழா



நிழற்படங்கள்: ஷான் பாப்திஸ்த் ஃபாய்வ்ரி, பாரிஸ்

மிக முக்கியமான தமிழர் விழாவான பொங்கல் விழாவைத் தமிழர் நகர்களிலும் கிராமங்களிலும் கொண்டாடுவதை இந்நிழற்படங்களில் காணலாம். இயற்கைக்கு நன்றி கூறும் இந்நான்கு நாள் விழா 'பொங்குதல்' எனும் தமிழ்ச் சொல்லிலிருந்து பெயர் பெற்றுள்ளது. நெல், பிற தானியங்கள், கரும்பு, (தமிழர் சமையலில் முக்கிய பொருளான) மஞ்சள் ஆகியவை அறுவடையாகும் தைத் திங்களில் (ஜனவரி—பெப்ருவரி) கொண்டாடப்படுகின்றது. பொங்கலின் முதல் நாளன்று வீட்டுக்கு வெளியே மட்பாண்டத்தில் அரிசியைப் பாலில் பொங்குகின்றனர். பிறகு சூரியக் கடவுகளுக்கு வழிபாட்டு முறையில் அதைப் படையலாக அர்ப்பணிக்கின்றனர். மேலே: நகரில் வாழும் பிராமணக் கணவனும் மனைவியும் மரபான ஆடையணிந்து, பூஜைக்குப் பயன்படுத்தும் வழிபாட்டுப் பாத்திரங்களைக் பரப்பி வைக்கின்றனர். வலப்புறம்: கிராமத்தில் இச்சடங்கு எளிய முறையில், ஆனால் அதே பக்தியுடன் நடைபெறுகின்றது. சிறுமி புத்தாடை அணிந்து தலையில் மலர் சூடி விழாக் கோலத்தில் காணப்படுகிறாள். வழிபாட்டு முறைக்கேற்ப சோறு பொங்கும் பானையைச் சுற்றி மஞ்சள் செடி கட்டப்பட்டுள்ளது. பின்னாலுள்ள இரு கரும்புகளும் தட்டிலுள்ள தேங்காயும் வாழைப்பழங்களும் காணிக்கைப் பொருள்கள். கோலம் பூஜையின் முக்கிய இயல்பாகும். மேலே வலப்புறம்: புதுச்சேரியில் பின்னலான பூக்கள், விலங்குகள் அமைந்த விரிவான கோலத்தைத் தெருவில் வரைகின்றனர். பொங்கலுக்குப் பிந்திய நாட்களில் பசுக்களையும் எருதுகளையும் மக்கள் வணங்குகின்றர். அவற்றின் கொம்புகளுக்கு வண்ணம் பூசி அவற்றிற்குப், பூ அணிந்து, மணிகளை மாலையாகப் போட்டு பொங்கல் சோறு படைக்கின்றனர்.



நிழற்படம்: ஜான் கே. ஐசக்

இயற்கைக் காட்சியில் கவிதை
சங்க உலகம்

ஃப்ரான்சுவா குரோ

நிழற்படம் © ஆர். நாகசாமி, சென்னை

திருவாசகம் எனும் பக்திப் பாடல் திரட்டினை எழுதிய கவிஞரும் அருட்தொண்டருமான மாணிக்கவாசகரின் 10 ஆம் நூற்றாண்டு வெண்கலச் சிலை. நீட்டிய இடக் கரத்திலுள்ள ஓலைச் சுவடிகள் அவருடைய பாடல்களைக் காட்டுகின்றன; வலக்கை உயர் மதத்தைப் போதிக்கும் 'வியாக்கியான' நிலையில் உள்ளது.

'சங்கம் என்னும் மந்திரச் சொல், திராவிடப் பண்பாட்டுக் கருவூலமாம் தமிழ் இலக்கியத்தின் ஒரு பொற் காலத்தை நம் கண்முன்னே கொண்டு வருகிறது. முதல் இடை, கடைச் சங்கங்கள் வீற்றிருந்து தமிழாய்ந்த ஓர் அற்புதக் காலம் நம் மனத் திரையில் விரிகின்றது. முச் சங்கங்களுள் முதலிடைச் சங்கங்கள் பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங் கடல்கொண்ட'போது அழிந்துபோயின. கடைச் சங்கம் மட்டுமே தப்பிப் பிழைத்தது.

கடைச் சங்கமிருந்து தமிழாய்ந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இன்றுள்ள இந்திய மொழிகள் அனைத்திலும் மிகத் தொன்மை வாய்ந்த தமிழ்மொழியில் எழுந்த அரிய இலக்கியங்கள் இக் கடைச் சங்க காலத்திலேயே, அதாவது கிறித்தவ ஊழியின் தொடக்க நூற்றாண்டுகளிலேயே தொகைநூல்களாகத் தொகுக்கப் பெற்றுவிட்டன. எனவே, உலக இலக்கிய வரலாற்றில் சங்க காலத்தை ஒரு சீர்மிகு காலம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இத்தொகை நூல்களை இடைக்காலத்து உரையாசிரியர்களும், பின்னர் வந்த 19, 20ஆம் நூற்றாண்டுத்தமிழறிஞர்களும்கண்ணேபோற் போற்றிக் காத்து வந்திருக்கின்றனர்.

இடைச் சங்கத்தில் 450-க்கும் மேற்பட்ட புலவர்கள் வீற்றிருந்து தமிழாய்ந்தனர் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், இவர்களைப் பற்றிய முழு விவரங்கள் தெரியவில்லை. இவர்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினையும் சேர்ந்தவர்கள். புலமைத் திறனுக்காக மட்டுமே இவர்களைப் புரவலர்கள் போற்றிப் புரந்தார்கள். இவர்களில் பலர் அவைக்களப் புலவர்களாகத் திகழ்ந்தனர்; புலமைச் செறுக்குடன் விளங்கினர். வேந்தர்களின் வெற்றிகளையும், வீரர்களின் போர்ச் செயல்களையும், போரிடும் நாட்டின் துயரங்களையும் பாடினர். மன்னர்கள் இவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றினர். மோசிகீரனார் என்னும் சங்கப் புலவர், சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறையிடத்துப் பரிசில் பெறச் சென்றிருந்தகால், அவன் அரண்மனையிலிருந்து நீராட்டக் கொண்டு போயிருந்த வீரமுரசம் மீண்டும் வருமுன், களைப்பினால் அம்முரசம் வைத்திருந்த கட்டிலேறிப்படுத்து உறங்குவாராயினர். முரசு கட்டிலில் அவ்வாறு படுத்து அதன் புனிதத்தைக் கெடுப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாயிருந்தும், அது முரசு கட்டிலென அறியாது துயின்ற புலவரை அரசன் கொல்லாது விட்டதுடன், அவர் தூங்கியெழுமளவும் தாமே அருகில்நின்று அவருக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்தான். தமிழருமையறிந்த மன்னர்கள், புலவர்களிடம் எத்துணை பெருமதிப்பு வைத்திருந்தார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

இந்நிகழ்ச்சி, அன்றைய அரசர்களின் மரபுகளையும், முரசறைந்து எழுச்சியூட்டும் முரசறைவோருக்கு அப்போதிருந்த நன்மதிப்பையும், அவர்களையும் புலவர்களின் புனிதப் பணியினையும் போற்றிப் புரக்கும் மன்னர்களின் பெருங்குணத்தையும் புலப்படுத்துகின்றது. சங்கப் புலவர்கள், ஔவையாரைப் போன்று, அரசர்களின் தூதர்களாகச் சென்று சந்து செய்வித்திருக்கிறார்கள்; கபிலரைப் போன்றோர் இளவரசர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். புலவர்களின் பாராட்டைப் பெறுவதை அரசர்கள் பெருமையாகக் கருதினர். புலவர்கள் வேந்தர்களைப் புகழ்ந்து. பாடிப் பரிசில்கள் பெற்றார்கள். ஆனால் புலவர்களின் போற்றுதலை விலை கொடுத்து வாங்கிட இயலாது. புலவர்களின் இகழ்ச்சிக்குள்ளாவதை அரசர்கள் இழிவாக எண்ணினார்கள்.

சங்ககாலப் புலவர்களிடையே நெருங்கிய பாசப்பிணைப்பு நிலவியது. வறுமையைப் போக்கும் புரவலர்களின் முகவரிகளைப் பரிமாற்றிக் கொள்ளும் வறிய பாணர்களாக அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் ஒருங்கிணைந்து சங்கம் அமைத்துத் தமிழாய்ந்தவர்கள். முச் சங்கங்கள் பற்றிய வரலாறு எழுத்து வடிவம் பெற்றது பின்னாளில்தான். எனினும் மறைந்த சங்கத்தின் புணர்கூட்டில் தோன்றிய செம்மையான மொழி மரபின் தனிப்பாங்குகளைக் கொண்ட சங்கப் பாடல்களில் ஆங்காங்கே வரலாற்றுக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. கிறித்தவ ஊழி தொடங்குவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சீர்மிகு காலமாகத் திகழ்ந்த சங்க காலத்தில் வழங்கிய தமிழிலக்கிய இலக்கண மரபுகளை வகுத்துரைக்கும் அரிய நூலாகத் திகழ்வது தொல்காப்பியம்.

உள்ளத்தெழுந்த தூய உணர்ச்சியால் தோன்றிய புலமையின் துலக்கமே சங்கப் பாடல்கள். இப்பாடல்கள் செறிவானவை; பல்வகைப்பட்டவை; இயல்பு நவிற்சியாய் அமைந்தவை; குறைந்த அடிகளில் ஓர் உணர்வை அல்லது நிகழ்ச்சியை உணர்த்த எழுந்தவை; வரை கடந்த புனைவுக்கும், இயல்பிறந்த கற்பனைக்கும் இவற்றில் இடமில்லை. அகப்பொருள் பற்றிய பாடல்கள் இவற்றில் சற்று மிகுதி. உணர்ச்சி, புலனுணர்வு என்னும் மொழிகளின் வாயிலாக மனிதகுலம்முழுவதற்குமே அறிவுணர்த்த வல்லவை சங்க இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களின் பிறிதொரு சிறப்பியல்பு அவற்றுள் சமயக் கருத்துக்கள் மிகுதியாக இடம் பெறாமையே. இது இந்திய இலக்கியங்களின் மரபுக்கு

ஃப்ரான்சுவா குரோ, நடைமுறை, உயர் கல்விப் பள்ளியில் கல்வி இயக்குநர்; பாரிஸிலுள்ள தூர கிழக்குப் ஃபிரெஞ்சுப் பள்ளியின் இயக்குநர். திராவிட வரலாறு, இலக்கியம் ஆகியவற்றில் வல்லுநரான இவர் பண்டைய சங்கத் தொகை நூலான பரிபாடலைப் ஃபிரெஞ்சில் மொழிபெயர்த்ததற்காக 'ப்ரி சாய்ந்தூர்' பரிசு பெற்றார். இவ்விதழைத் தயாரிப்பதில் உதவியும் அறிவுரையும் வழங்கிய திரு. குரோ அவர்களுக்கு 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியர்கள் நன்றி கூறுகின்றனர்.

மாறுபட்டது எனலாம், இவ்விலக்கியங்கள் உணர்த்தும் மெய்யறிவு, மிகுந்த மனிதப் பண்பு வாய்ந்தவை; அறநெறி வழிப்பட்டவை. இப்பாடல்கள், சீரான ஒழுங்குநெறிப்படித் தொகுக் பெற்ற தொகை நூல்களாக விளங்குகின்றன. சொற்களும் உவம உருவகங்களும் மனம் போன போக்கில் கையாளப்படவில்லை. அணிகளும், மரபுகளும் முன்னோர் வகுத்த இலக்கணம் பிறழாமல் கையாளப்படும்பொழுது, அற்பமான கருத்துகள் கூட, பொருட்செறிவோடு விழுமியவவாகத் தோன்றுகின்றன.

அகிலத்தையே தன்னுள் சீராக அடக்கியுள்ள நுட்பமான தமிழ்மொழி பகுப்பாய்வுக்கு வழங்கியுள்ள அருங்கொடையாக விளங்குபவை சங்கப் பாடல்கள். உலகியல் வாழ்வை அகம், புறம் என்னும் இரு கூறுகளாக இப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன. புறப், பொருட் பாடல்கள், புறவாழ்வில் விழுமியனவற்றையெல்லாம் உணர்த்துகின்றன. ஆனிரை கவர்தல், ஆனிரை மீட்டல், போருக்கு ஆயத்தம் செய்தல் (பசு, பெண்டிர், சிறுவர், முதியோர், அந்தணர் ஆகியோரைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லுதல்), முற்றுகையிடல், போரிடல், வெற்றி வாகை சூடல், தோல்வியுறுதல் போன்ற போர்க்காலச் செயல்களைப் புறப்பாடல்கள் பாடுகின்றன. அகப்பாடல்கள், அகத்தெழும் நுட்ப உணர்வுகளையும், அன்பில் விளைந்த உறவுகளையும் இயம்புகின்றன.

அக உலகை இயற்கை அமைப்பையொட்டி குறிஞ்சி (மலை), முல்லை (காடு), மருதம்(வயல்) நெய்தல் (கடற்கரை), பாலை எனப் பிரித்தனர். இந்த நிலப் பாகுபாடு அந்தந்த நிலத்தின் சமூகப் பொருளாதார நிலைகளையும் மக்களின் தொழில்களையும், அவ்வந் நிலத்துச் செடி கொடிகளையும் குறிப்பனவாகும். அவ்வந் நிலத்துக்குரிய பருவம், பொழுது, தெய்வம், யாழ் போன்ற கருப்பொருள்களும் துல்லியமாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. அனைத்திற்கும் மேலாக, குறிஞ்சிக்குப் புணர்தலும், முல்லைக்கு இருத்தலும் மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்குப் பிரிதலும், பாலைக்கு இரங்கலும் உரிப்பொருள்களாக வகுத்துரைக்கப்பட்டிருக்கும் திறன் உலகில் எந்த மொழியிலும் காணுதற்கரிய தனிச் சிறப்பாகும்.

குறிஞ்சி, நள்ளிரவில் காதலர்கள் கூடும் நிலைக்களனாகும். அருவிகளும், ஏரிகளும் நிறைந்து, தேக்கும் மூங்கிலும் அகிலும் செறிந்து, தேனும் தினையும் மலிந்துள்ள குறிஞ்சியில் குளிர் நிலவுப் பொழுதில் காதலர் நெஞ்சில் ஆர்வம் மீதூரப் புணர்ச்சியொழுக்கம் தோன்றுகின்றன.

இக்குறிஞ்சி நிலத்தின் தெய்வம், சேயோனாகிய முருகன் ஆவான். முருகனின் இரு மனைவியருள் ஒருத்தியாகிய வள்ளி, மலைவேடன் மகளேயாவாள். முருகன், கண்ணைப் பறிக்கும் செங்காந்தள் மலரை அணிந்தவன்; மலைப் பறவையாகிய மயிலை வாகனமாய்க் கொண்டவன்; குறிஞ்சி என்னும் பெயர்கூட தமிழ்நாட்டின் உயர்ந்த மலைகளில் 10 அல்லது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்ந்து ஒளிரும் ஒரு பொன்னிற மலரின் பெயரேயாகும். குறிஞ்சியின் மலர்ச்சியும், தோகை விரித்தாடும் மயில்களின் அகவலோசையும், அருவிகளின் பேரொலியும், வனவிலங்குகளின் முழக்கமும் குறிஞ்சிக் காதலர்களின் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துகின்றன.

குறிஞ்சிக் காதலர்கள், மலைப்பாதையின் பேரிடர்களை மறந்து, இறுகத் தழுவிக் கொள்கிறார்கள். தமிழ்மக்கள் பெரிதும் விரும்பும் நிலம் குறிஞ்சியேயாகும். பெரும்புலவர் கபிலர், குறிஞ்சிக் காதலின் பெருமையை ஆரிய மன்னன் ஒருவனுக்கு உணர்த்தும் நோக்குடன் '*குறிஞ்சிப் பாட்டு*' என்னும் அகநூலைப் பாடினார்.

'*கலித்தொகை*' என்னும் சங்க நூலில் ஐந்நிலங்களுக்குமுரிய உரிப்பொருள்களுக்குத் தனித்தனியே பாடல்கள் உள்ளன. எனினும், இவற்றுள் பாலையின் இரங்கலும், நெய்தலின் பிரிதலும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. குறிஞ்சியின் உரிப்பொருள் பெற்றுள்ள இடம் குறைவே. மாயோன் உறையும் முல்லை நிலத்திற்குரிய உரிப்பொருள், தலைவன் வருகையை தலைவி எதிர்பார்த்தல் 'இருத்தல்' ஆகும். ஆட்கொள்ள வரும் திருமாலின் வருகையை எதிர்பார்க்கும் அடியார்களின் ஆன்மிக ஏக்கத்தை இந்த உரிப்பொருள் குறிப்பதாகக் கூறுவர்.

மருதம் தீம்புனல் உலகம். ஊடல் இதற்குரிய உரிப்பொருள். இந்நிலத்துத் தலைவன் தலைவியை விடுத்துப் பரத்



நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

கீழே: கி. பி. 1000 இல் சோழப் பேரரசர் ராஜராஜர் கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலில் இச்சிற்பத்தின் நடுவில் அமர்ந்திருப்பவர் மயில் வாகனத்திலிருக்கும் முருகப் பெருமான். பண்டைய தமிழரின் முக்கிய தெய்வமான முருகன் பிற்காலத்தில், வட இந்தியர் போர்க் கடவுளும் சிவபிரானின் தலைமகனுமான கந்தனாகக் கருதப்பட்டார். இன்னும் தென்னிந்தியாவில் பெருந்திரளானோர் இவரை சுப்பிரமணியராக வழிபடுகின்றனர். **வலப்புறம்:** முருகனைக் காட்டும் இன்றைய தெருச் சுவரோவியம்.



நிழற்படம்: இமானுவேல் கியூ © அட்லஸ் நிழற்படம், பாரிஸ்

தமிழில் புதிய படைப்புகள்

எஸ். ராமகிருஷ்ணன்

ஏறத்தாழ இருபது ஆண்டுகட்கு முன்பு தமிழ்ப் படைப்பிலக்கியம் புத்தெழுச்சியைக் கண்டது. பண்டையத் தமிழ்ப் பண்பாட்டில் முழுமையாக் ஈடுபட்டிருந்த நிலைமை மாறியது; பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழி ஆயிற்று. உலகத் தமிழ் மாநாடுகள் மூலம் தமிழுக்கு உலக அறிமுகம் கிடைத்தது. 1930-களில் தொடங்கிய புதுக்கவிதை இயக்கம் அறுபதுகளில் வேரூன்றி, ஓரிரண்டாயிரம் வாசகர்களை உடையனவாய், குறுகிய காலமே வாழ்ந்த சிற்றேடுகளால் ஊட்டம் பெற்றது.

இந்தப் பின்னணியில் தமிழ் எழுத்தாளர்கள் இரண்டு செல்வாக்கு உடைய இதழ்களின் ஆதரவை நாடினார்கள். 1. சி.சு. செல்லப்பாவின் *எழுத்து* (1959-இல் தொடங்கியது); 2. க.நா.சுப்பிரமணியத்தின் *இலக்கிய வட்டம்* (1964இல் தொடங்கியது). இந்த இரண்டு ஏடுகளும், அவற்றில் எழுதிய எழுத்தாளர்களும் 1930-களின் இடையில் தோன்றிய *மணிக்கொடி*யை முன்மாதிரியாகக் கொண்டனர். இலக்கியம் வாழ்க்கையின் உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளும் முதன் முயற்சியாக மிளிர்ந்தது *மணிக்கொடி*.

*மணிக்கொடி*யைத் தொடங்கியவர்கள் இலட்சியவாதிகள். மக்களிடையே செல்வாக்குப் பெற்று வந்த புதிய இதழ்களுக்கு மாற்றாக இந்த இதழை நடத்தினார்கள். இவர்கள் அயல் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவிக்கும் குறிக்கோளுடைய தேசிய வாதிகளாகத் திகழ்ந்த போதிலும், பன்னாட்டுப் பண்பாட்டின் நீரோட்டத்துடன் தமிழ் உணர்வு உயிர்த் தொடர்பு கொள்ள வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார்கள். அவர்களே ஆங்கிலக் கல்வியாலும், அதன் மூலம் உலகப் பண்பாட்டின் தாக்கத்தாலும் ஆக்கம் பெற்றவர்கள்தான்.

மணிக்கொடியில் ஓங்கி உயர்ந்த குரலாக ஒலித்தது புதுமைப்பித்தனுடையது. இன்றும் தற்கால இலக்கிய மரபுக்கு மூல முதலாக விளங்குவதும் அந்தக் குரல்தான். கொள்கை விளக்கக் கருவியாக இலக்கியத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பது புதுமைப்பித்தன் கருத்து. தமது கதைகள் உலகத்துக்கு அறிவூட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டவை அல்ல என்றும், வாழ்க்கையைப் பேணும் தத்துவத்துக்குள் கலை ஒடுங்கக் கூடாது என்றும் முழங்கினார் புதுமைப்பித்தன். கிரிஜாதேவி, ராமாமிருதத்தம்மாள், வ.ரா. முதலிய எழுத்தாளர்கள் சாதி அமைப்பின் தீமைகளைச் சாடி, சாதித் தடைகளை நீக்குவதில், சிறப்பாகக் கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதில், ஈடுபட்டிருந்தபோது, புதுமைப்பித்தன் கலப்புத் திருமணங்களால் தோன்றும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டினார். கலப்புத் திருமணம் செய்வோரின் பண்பாட்டு வேற்றுமைகளால் எழக்கூடிய சிக்கல்களை 'நெஞ்சுரத்துடன் புலப்படுத்தின புதுமைப்பித்தன் கதைகள்.

நிழற்படம்: லிவான் புனிவெர்ஸ், நாமூர், பெல்ஜியம்

தமிழ்த் தாய், தமிழ்த் தெய்வம் எனப் போற்றப்படும் தமிழ் மொழியை முருகக் கடவுள் படைத்ததாகவும், அதன் இலக்கணத்தை சிவபிரான் வெளிப்படுத்தியதாகவும் மரபான கருத்து நிலவுகின்றது. பண்டைய சம்ஸ்கிருதத்தில் எழுதப்பெற்றவற்றைத் தவிர தமிழ் இலக்கியமே இந்தியாவில் மிகத் தொன்மையானது. தமிழ் மொழியில் 'நூல்' எனும் சொல்லே நூல் இழைக்கும், எழுதி முடித்த புத்தகத்திற்கும் பயன்படுகின்றது. இதைக் குறிப்பது போல் மேலே மூன்று தலைமுறையினரான கிராமவாசிகள் தேங்காய் நாரைக் கயிறாகத் திரிக்கின்றனர்.

மார்க்சியத்தைத் தழுவி நிற்கும் முற்போக்கு எழுத்தாளர்களில் பெரும்பாலோர் புதுமைப்பித்தனை தமது மூலவராகப் போற்றுகிறார்கள். சுதந்திர இந்தியாவின் முதல் தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான தொ.மு.சி. ரகுநாதன் முதலாளி—தொழிலாளி உறவை சித்திரிக்கும் *பஞ்சும் பசியும்* (1953) என்னும் நாவல் வாயிலாகப் படிப்போர் கவனத்தை ஈர்த்தார். அவரைத் தொடர்ந்து வந்த ஜெயகாந்தன் பல சிறுகதைகளிலும், நாவல்களிலும் துன்பத்தில் உழலும் ஏழைகளின் சார்பில் நின்றார்.

பலதரப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி ஏராளமாக எழுதிக் குவித்தவர் ஜெயகாந்தன். நகர நடுத்தர வர்க்கத்தினர், மனித உரிமை இல்லாத நகரச் சேரி மக்கள் புரட்சிக் கொடி உயர்த்திய பெண்கள், கலை பற்றிய கருத்துகள், மரபு வாழ்வுக்கும், நவீன வாழ்வுக்கும் இடையில் தோன்றும் பகை, அந்தப் பகையால் உண்டாகும் மாற்றங்கள், பிராமணீயத்தைப் பற்றிய கருத்துகள், நீதி, பாலுணர்வின் பன்முகங்கள் முதலியவையெல்லாம் ஜெயகாந்தன் எழுத்தில் இடம் பெற்றன. அவருடைய திருத்தமான குரலால் உணர்ச்சிபெற்றவர் பலர். பல எழுத்தாளர்களுக்கு அவர் முன்மாதிரியானார்.

பூமணி, பா. ஜெயப்பிரகாசம், ராஜேந்திர சோழன் முதல் இளம் இடதுசாரி எழுத்தாளர்கள் புதுமைப்பித்தனிடமிருந்தும் ஜெயகாந்தனிடமிருந்தும் தூண்டுதல் பெற்றனர். ஆனால் அந்த இருவருடைய அகன்ற பார்வை இவர்

களுக்கு இல்லை. கிராம வாழ்வையும், தொழிலாளர் வர்க்கத்தையும் நுட்பமாக ஆய்வதோடு அவர்கள் அமைந்தனர்.

உழைக்கும் மக்களை விழித்தெழச் செய்து ஒன்றுபடுத்துவதற்கு உகந்த கருவியாக இலக்கியத்தைப் பயன்படுத்துவதே முற்போக்கு எழுத்தாளர்களின் பொது நோக்காக அமைந்தது. கொள்கை விளக்கம் செய்வதிலேயே அவர்கள் கருத்தூன்றிச் செயற்பட்டனர். நவீன தமிழ் இலக்கியத்தில் இந்தப் போக்கு ஆதிக்கம் செலுத்துகிறது என்பது பெரும்பாலும் உண்மை.

முன்னாளைய முற்போக்காளர்கள், ஆங்கிலக் கல்வியாலும், நகரப் பெருக்கத்தாலும் இந்தியப் பண்பாட்டுக்கு கேடு நேருவதைக் கண்டு துடித்தார்கள். முதல் நாவலாகிய *பிரதாப முதலியார் சரித்திரம்* (1879) எழுதிய வேதநாயகப் பிள்ளையின் கருத்துரை ஈண்டு குறிப்பிடத்தக்கது; இறைப்பற்றும், சமுதாயப் பொறுப்புக்களை நிறைவேற்றும் உணர்வும் தம் நாவலில் வலியுறுத்தப் பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய சமகாலத்தவரான ராஜமய்யர் நாட்டுப்புற மரபுகளைப் பாதுகாப்பதற்கும், பக்தி நெறியைப் போற்றுவதற்கும், தாம் கதை எழுதுவதாகக் கூறினார். அ. மாதவையாவும் வழிவழி வந்த பண்பாட்டினைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவலையால் உந்தப்பட்டார். பெண்களின் நிலையைக் கண்டும், அறியாமையால் அவர்களுக்குச் சமுதாயம் இழைக்கும் கொடுமைகளைக் கண்டும் (சிறுவர்களுக்குத் திருமணம் செய்வதும் இளவயதிலேயே பெண்கள் விதவைகளாவதும் பெருவழக்காய் இருந்த காலமது) மனம் கொதித்தவர் மாதவையா. நகர வாழ்வால் தனி நபர்களுக்கு ஏற்படும் ஆபத்தையும் அவர் உணர்ந்திருந்தார்.

முதல் தலைமுறையைச் சேர்ந்த நாவலாசிரியர்களான இந்த மூவரைப் போலவே அவர்களைத் தொடர்ந்து வந்த எழுத்தாளர்களும் இலக்கியத்தைச் சமுதாய நன்மைக்காகப் பயன்படுத்தினார்கள். இரண்டு உதாரணங்களை இங்குக் குறிப்பிடலாம்: 1. வ.ரா. வின் *சுந்தரி*; 2. பாரதியின் நிறைவுறாத நாவலான *சந்திரிகையின் கதை* இரண்டுமே விதவைகளின் பிரச்சினைகளையும் சமுதாயம் அவர்களை நடத்தும் முறையையும் அவர்களது மறுமணத்தையும் பற்றி ஆய்கின்றன. 1920இல் தேசிய அரசியலில் தோன்றினார் காந்தி. அவருடைய கொள்கைகளும் தத்துவங்களும் பலஎழுத்தாளர்களுடைய உள்ளங்களை கொள்ளை கொண்டன. ஓர் எடுத்துக்காட்டு: 1930இல் வெளிவந்த *தேசபக்தன் கந்தன்* என்னும் நாவல் (கே. எஸ். வேங்கடரமணி எழுதியது) கிராம வளர்ச்சியைப் பற்றியும், நாட்டு வாழ்வில் கிராமத்தின் முக்கிய இடம் பற்றியும் காந்தீயக் கொள்கைகளை விளக்குகிறது.

1930-களில் வாணிப நோக்குடைய இதழ் தோன்றின. அவற்றில் மிகுந்த செல்வாக்கு எய்தியது ஆனந்தவிகடன். அதன் வெற்றிக்குத் தலையாய காரணம், ஏராளமாக எழுதிக் குவித்த கல்கியே ஆவார். தேசிய விளக்கத்தின் மூலம் பெருவெற்றி பெற்ற *தியாகபுமி* என்னும் நாவலைப் படைத்தவர் கல்கி. வாசர்களிடையே கல்கிக்கு ஏற்பட்ட பெருஞ் செல்வாக்கின் விளைவாக மேலும் பல இதழ்கள் தோன்றின. பாமரர் மனம் விரும்பும் எழுத்துக்கு விரிவான விற்பனை வாய்ப்பை அவை ஏற்படுத்திக் கொடுத்தன. 1970-களிலிருந்து இத்தகைய இதழ்கள் பல்கிப் பெருகியுள்ளன. இவை. தமிழகப் பண்பாட்டு வாழ்வில் வலுவான பிடிப்பு உடையனவாய்த் திகழ்கின்றன.

தனிச் சிறப்புடைய இலக்கியங்களை படைத்துள்ள சில எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் 'பரம்பரை'யைக் காணலாம். சுந்தரராமசாமி எழுதிய *ஜே. ஜே. சில குறிப்புக்கள்*, *புளிய மரத்தின் கதை* என்பவையும் ஜி. நாகராஜன் எழுதிய *நாளை மற்றுமொரு நாளே* என்னும் நாவலும் அவரே எழுதிய சில சிறுகதைகளும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. வாழ்வின் கடுமையான நடப்புக்கு இடையே இலக்கியம் நிலை கொள்ளவேண்டும் என்னும் புதுமைப்பித்தன் இலட்சியத்தை இவை நிறைவேற்றுகின்றன. இந்த இரு எழுத்தாளர்களும் தெளிவுடையவர்கள்: கருத்தோட்டக் கூர்மையுடையவர்கள்; உண்மையான அனுபவத்தை நடிப்புக்கு இடந்தராமல் நேர்மையுடன் எடுத்துரைக்கும் தன்மை உடையவர்கள். சமுதாய நோக்கும், கலைத் தேவைகளும் அவர்களது எழுத்தில் சமநிலைஎய்தியிருந்தன.

புதுமைப்பித்தன் காலத்திலிருந்து தமிழ் இலக்கியம் குறிப்பிட்ட சில எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கமும் ஊக்கமும் பெற்று வந்திருக்கின்றது. அவர்களில் பெரும்பாலோர் இந்தியப் பண்பாட்டாலும் இந்தியச் சிந்தனை முறைகளாலும் உருவானவர்கள். அவர்களில் முக்கியமான இருவர் 1. க. நா. சுப்பிரமணியம் 2. சி.சு. செல்லப்பா. இவர்களிருவரும் 1945–1965–க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய மிகவும் பாதகமான சூழ்நிலைகளுக்கிடையிலும் படைப்பிலக்கியத்தையும், திறனாய்வுப் போக்கையும் பேணிவந்தார்கள்; பல்வேறு சிற்றேடுகள் வாயிலாக புதுக்கவிதையையும் இலக்கியத் திறனாய்வையும் வழி நடத்துவதில் அவர்கள் ஆற்றிய பணி பெரிது.

முக்கியமான தமிழ் நாவல்களில் ஒன்றான க.நா. சுப்பிரமணியத்தின் *பொய்த்தேவு* (1943) தமிழ் மனத்தையும், இறைவன்-மனிதன் உறவில் அதற்குள்ள ஈடுபாட்டையும், தத்துவ வேட்கையையும் ஆய்கிறது. அவருடைய சிறுகதைகள் ஏற்றத்தாழ்வான தரமுடையவை; எனினும் *அழகி* போன்ற ஓரிரண்டு சிறுகதைகள் மிக முக்கியமானவை. செல்லப்பாவின் *வாடிவாசல்*, *ஜீவனாம்சம்* என்னும் படைப்புகள் வழிவழிவந்த சமுதாயத்தை அடித்தளமாகக் கொண்டவை.

முதலில் *மணிக்கொடியில்* எழுதிய மௌனி தமிழிலக்கியத்தின் பெரும்புள்ளி

(தொடர்ச்சி IV ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய தமிழ் ஓவியம்



இன்றைய தமிழக ஓவியர்கள், மரபிலும் பொருளியல், புராணக் கருத்துகளுடைய பண்டைய சிற்பங்கள் முதல் கிராமியக்கலை, 20ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய ஓவியத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி வரை பல்வேறு இயல்புகளைப் பின்பற்றுகின்றனர். கே.வி. ஹரிதாசன் தீட்டிய 'ப்ரம சூத்திரம்' (1978) இவர் தந்த்ர நூல்களில் தியானத்திற்குத் துணையாகப் பயன்படும் 'யந்த்ரங்கள்' எனும் வரிவடிவங்களைக் கருத்தியலான வடிவங்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தியுள்ளார். கீழே: கே. சீனிவாசுலு தீட்டிய 'தாய்லெட்' எனும் ஓவியத்தில் கிராமக் கலை வடிவங்கள் கன வடிவங்களுடன் கலந்துள்ளன. இன்றைய தமிழக ஓவியர்கள் தமக்கென்றே ஒரு தனி கலை இயல்பை வகுக்க முயலும் போது அவர்களை எதிர்நோக்கும் அறைகூவலைப் பற்றி தமிழ் ஓவியரும் திறனாய்வாளருமான வி. ஜெயராமன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: "கருத்தியல் நெறியுடன் பின்னிப் பிணைந்த வளமான பண்பாட்டு மரபுக்கேற்ப தம் கருத்தை வெளிப்படுத்துதல் தமிழக ஓவியர்களுக்கு அரிதாக இருந்தது, இருக்கின்றது. பின்பற்றக் கூடிய மரபான படைப்புகளின் மூலமுதல் இல்லாததால் ஓவியர்கள் தொல்லையடைந்தனர். பண்டைய ஓவியங்கள் மிகச் சிலவே காணப்படுவதால், அவர்கள் சிற்பங்களையே பார்க்க வேண்டியிருந்தது. ஆகவே ஆலயக் கட்டடக்கலை, பண்டைய அளவுகளுக்குட்பட்டிருந்த சிற்பக்கலையின் புத்தெழுச்சி, 'ரசம்' (சுவை), 'பாவம்' (மனநிலை) ஆகியவற்றின் ஒழுங்கியல்பு, அருவமான, கருத்துகளை உருவமாகவும், உருவங்களை அருவ வடிவமாகவும் காட்டும் போது எழும் எழில் முரண்பாடு ஆகியவற்றிலிருந்து தான் அவர்கள் உணர்ச்சிக் கருவைப்பெற முடிந்தது.



நிழற்படம் © ராகவேந்திர ராவ், சென்னை

தமிழ்ப் பெண்கள்

சி. எஸ். லட்சுமி

தமிழ்க் காப்பியங்கள், மகளிரைக் கற்புக்கடம் பூண்ட பொற்புடைச் செல்வியராகச் சித்திரித்தன. இப் பத்தினிப் பெண்டிரின் கற்புக்கனல் கொழுநனைக் கொன்றதற்குப் பழிவாங்க ஒரு மாநகரையே எரித்திடும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தது. இந்தத்தோற்றம் இந்நூற்றாண்டின் விடியல்வரை நீடித்தது. அதன் பின்பு, இந்தத் தோற்றம், உண்மை நிலையிலிருந்து வேறுபட்டதென்பதை மகளிர் உணரலாயினர். தங்கள் நிலை நடைமுறையில் தாழ்வுற்றிருப்பதை உணர்ந்த மகளிர், அறிவுத் தாகங் கொண்டு கல்வியில் நாட்டம் செலுத்தலாயினர். பெண் கல்வியைப் பல பெருந் தலைவர்கள் ஆதரித்தனர். எனினும், அவர்களுக்கு எவ்வகைக் கல்வியை, எந்த மொழியில் அளிக்க வேண்டும் என்பது குறித்துச் சர்ச்சை எழுந்தது. மகளிர் நற்பண்புகளின் இருப்பிடமாக விளங்குவதால், அவர்களை ஆசிரியப் பணிக்கும், மருத்துவத் தொழிலுக்கும் ஆயத்தப்படுத்தும் வகையில் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற கருத்து பொதுவாக உருவாகியது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தங்கள் இல்லங்களிலேயே பெண்களுக்கு கல்வி கற்பித்து வந்த தொடக்க கால ஆசிரியைகளில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள். ஆனால், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்து விதவைகளில் பலருக்கு ஆசிரியத் தொழில் புகலிடமளித்தது. அந்நாளில், இந்து விதவைகள் மறுமணம் செய்துகொள்ள அனுமதியில்லை. அன்று, குழந்தைத் திருமண முறை நிலவியதால் விதவைகள் பெருகி இருந்தனர்.

சி. எஸ். லட்சுமி மகளிர் இயல் வல்லுநர்; 20ஆம் நூற்றாண்டில் தமிழகப் பெண்களின் சமூக வரலாறு எனும் சித்திரங்கள் அடங்கிய நூலை எழுதி வருகிறார்.

'சகோதரி சுப்புலட்சுமி' என அன்புடன் அழைக்கப்பெற்ற அஞ்சாநெஞ்சம் வாய்ந்த இளம்பெண்ணின் வாயிலாக இந்த விதவைகளுக்கு விடிவுகாலம் பிறந்தது. சகோதரி சுப்புலட்சுமி தம் 11ஆம் வயதிலேயே விதவையானவர். முற்போக்கு எண்ணங்கொண்ட இவருடைய தந்தை அளித்த ஊக்கத்தின் பேரில், தொடர்ந்து கல்வி பயின்று, ஆசிரியையானார். இவர் சிறுமியாயிருந்தபோது, ஒரு திருமணத்தில் ஒரு மூன்று வயதுச் சிறுமிக்கு, அவள் ஒரு விதவை என்ற காரணத்தால் இழைக்கப்பட்ட கொடுமையை நினைந்து இவர் பல ஆண்டுகள் மனங்குமுறினார். விதவை மறுவாழ்வுக்காகத் தொண்டு செய்ய வேண்டுமென உறுதி பூண்டார். ஆசிரியைப் பயிற்சி முடிந்ததும், இவர் விதவைகள் இல்லம் ஒன்றைத் தொடங்கி, அங்கு அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சியளிக்கலானார். தமிழ்நாட்டில் விதவைகள் மறுவாழ்வுக்காகத் தொண்டாற்றியவர்களில் முன்னோடியாக இவர் திகழ்ந்தார்.

பெண்கல்வி வளர்ச்சி, பெண்கள் பற்றிய கேலித் துணுக்குகள் தோன்ற வழி வகுத்தது. பெண்களின் புதிய நாகரிக ஆடையணிகள் கேலிச்சித்திரங்களிலும் துணுக்குகளிலும் நையாண்டிக்குள்ளாயின. மாறிவரும் உலகில் ஒரு தலைமுறையினரின் கவலைகளையும் அச்சங்களையுங்கூட இவை வெளிப்படுத்தின.

பெண் கல்வி இயக்கத்தோடு, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைச் சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான சீர்திருத்த இயக்கங்களும் தோன்றின. அன்னி பெசன்ட். மார்கரட் கசின்ஸ் போன்ற ஆங்கிலப் பெண்மணியர் தென்னிந்திய அரசியல் சமூக வாழ்வில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தனர். அன்னி பெசண்ட் 1917இல் இந்திய மகளிர் சங்கத்தை நிறுவினார். மார்கரட் கசின்ஸ் 1926இல் அனைத்திந்திய மகளிர் மன்றத்தைத் தொடங்கினார். திருமண வயதை உயர்த்துதல், தேவதாசி முறையை ஒழித்தல் போன்ற சீர்திருத்தங்களுக்காக இந்த இயக்கங்கள் போராடின.

இந்திய உயர்குடி மகளிர் பலர் இவர்களுடைய சமூகச் சீர்திருத்த முயற்சிகளுக்குத் துணை நின்றார்கள்.

எழுத்துத் துறையிலும், மற்ற நுண்கலைகளிலுங்கூட தீவிரப்பங்கு கொள்ளலாயினர். நாடகங்களிலும் திரைப்படங்களிலும் நடிப்பதும், நடனமாடுவதும் தேவதாசி சமூகத்தினருக்கே உரியது என்ற நிலை மாறியது. நுண்கலைகளில் பாரம்பரியமாக ஈடுபட்டிராத சமூகங்களைச் சேர்ந்த கலாநிதி, ருக்மணி தேவி, டி.கே. பட்டம்மாள் போன்றவர்களும் பரத நாட்டியத்திலும், இசையிலும் இன்று புகழ் பெற்றுத் திகழ்கின்றார்கள். வை. மு. கோதை நாயகி அம்மாளை ஆசிரியையாகக் கொண்ட ''*ஜெகன் மோகினி*'', சகோதரி பாலாம்மாள் ஆசிரியையாக இருந்த ''*சிந்தாமணி*'' போன்ற பெண்களுக்காகப் பெண்களே நடத்திய' இதழ்கள் தோன்றி, மகளிர் பற்றிய பல்வேறு பிரச்சினைகள் குறித்த விவாதத்திற்கு வழி வகுத்தன.

இந்தியாவில் விடுதலைப் போராட்டம் நாடெங்கிலும் தீவிரமடைந்தபோது, காந்தியடிகளின் அறைகூவலை ஏற்று ஏராளமான தமிழ்ப் பெண்மணிகள் அரசியல் வேள்வியில் குதித்தனர். அவர்கள் அயல்நாட்டுத் துணிகள் விற்கும் கடைகள்முன் மறியல் செய்தனர்; கட்சிப் பொதுக் கூட்டங்களில் பேசினர்; காந்தியக் கொள்கைகளைப் பரப்புவதற்கு நாடெங்கும் பயணம் செய்தனர்; மகளிரின் புதிய பங்குப்பணி குறித்துக் கட்டுரைகள் எழுதினர்; எழுத்தறிவிப்பு இயக்கங்களில் முனைந்து பங்கு கொண்டனர்.

1947இல் நாடு விடுதலையடைந்த பிறகு, மகளிர் நலத்துறை அமைக்கப்பட்டது. ''மகளிர் தங்களையே மீண்டும் கண்டுணர்வதற்கு அவர்களுக்கு உதவிபுரியும் கடினமான பெரும் பணியில்'' இத்துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. 1950-க்குப் பின்னர், தமிழ் மகளிர் உலகம், அவர்களை விலக்கி வைத்திருந்த துறைகளுக்கும் விரிவடைந்து, பணிபுரியும் மகளிரை நகரங்களில் இன்று ஏராளமாகக் காண்கின்றோம். மகளிர் மன்றங்கள் பெருகியுள்ளன. தமிழ்ப் பெண்களிடையே எழுத்தறிவு விகிதம் அதிகமாகி உள்ளது.



சிறந்த ஆடையும் மாலையும் பூவும் அணிந்துள்ள இத்தமிழ்ப் பெண்ணுக்கு அனைவரும் சூழ, பூப்புப் பருவச் சடங்கு நடைபெறுகின்றது. இவளுக்கு ஆசியாகவும் கண்ணேறு படாதவாறும் உறவினள் ஒருத்தி இவள் நெற்றியில் சிகப்புப் பொட்டு வைக்கிறாள்.

நிழற்படம் © மாரி-லூயிஸ் ரெய்னீஷ், பாரிஸ்.

நிழற்படம் © பதிப்புரிமை பெற்றது

தமிழ்ப் பெண் கல்வியின் முன்னோடிகளுள் ஒருவரும், பணியாட்களாகவும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் இழிநிலையிலுமிருந்த விதவைகளைக் காக்கும் போராட்டத்தின் தலைவியுமான சகோதரி சுப்புலட்சுமி.

தமிழ்நாட்டில் அண்மையில் மகளிருக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் ஒன்றும் தொடங்க பெற்றுள்ளது.

இத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினும், மகளிர் முன்பு ஆற்றிவந்த பணிகள் மறையவுமில்லை; மாறவுமில்லை. தற்காலத் தமிழ் இலக்கியங்களிலும், செய்தித் தொடர்புச் சாதனங்களிலும், பழக்க வழக்கங்களிலும், கற்புடை மகளிர், பாசமிக்க தாய் என்ற பாரம்பரியத் தோற்றமே இன்னும் பிரதிபலிக்கிறது. கதைகளில் வரும் பெரும்பாலான மகளிர் பாத்திரங்கள், அகத்தோற்றத்தையும் புறத்தோற்றத்தையும் கொண்டியிருக்கின்றன. புறத்தோற்றத்தில் ''நாகரிக'' நங்கையராகச் சித்தரிக்கப்படும் பெண்கள்கூட, கதையின் ஏதாவதோரிடத்தில் தன்னிடம் மறைந்து கிடக்கும் அழகு வாய்ந்த பாரம்பரியப் பண்புகளை, நாகரிகம் அழித்துவிடவில்லை என்பதை மெய்ப்பிக்கின்றார்கள். கடும் க்கட்டுத் திட்டங்களுக்குட்பட்ட பாரம்பரிய ஒழுக்க நெறியினின்றும் வழுவுகின்றவர்கள் கடும் தண்டனைகளுக்குள்ளாவதாகச் சித்தரிக்கப்படுகிறார்கள்.

வணிகப் போக்கில் உருவாக்கப்பட்டு செய்தித்தொடர்புச் சாதனங்கள் வாயிலாக் வழங்கப்பட்டுள்ளன. பெண்கள் பற்றிய தோற்றம், பெரும்பாலும் இலக்கியங்களில் காணும் தோற்றத்தைப் போன்றே அமைந்துள்ளது. செய்தித் தொடர்புச் சாதனங்கள், பெரும்பாலும் மரபுவழித் தோற்றத்தை ''நல்ல''தென்றும், ''நவநாகரிக''த் தோற்றத்தைத் ''தீய''தென்றும் சித்திரிக்கின்றன; தீயதை நல்லது வென்றுவிடும் என்றும் உணர்த்தப்படுகின்றது. வாணிப நோக்கங்கள், திருமணம் உட்பட குடும்ப உறவுகளையும் பாதித்துள்ளன. மகளிரை விலைபோகக்கூடிய அல்லது விலைபோகாத பண்டங்களாகக் கருதும் போக்கு காணப்படுகிறது. 'வரதட்சிணை' ஒரு கொடிய பீடையாக உருவெடுத்துள்ளது. அலுவலகத்தில் பணிபுரியும் பெண், விடுதலை பெறுவதற்குப் பதிலாக, வரதட்சணை ஈட்டித்தரும் நபராக மாற்றப்பட்டுவிட்டாள்.

நகர்ப்புற மகளிர்க்கும், நாட்டுப்புற மகளிர்க்குமிடையிலான இடைவெளி விரிவடைந்துள்ளது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், கிராம நங்கையர், காவிய நாயகியாரைப் போன்று கற்புக்கர்சியராக, எழிலரசியராகக் கருதப் பெற்றனர். அவர்கள், கள்ளங்கபடில்லாமல் மெருகற்ற பெண் குரலில் தாலாட்டு பாடல்களையும், வாய்மொழி மரபுக் காதற் பாடல்களையும் பாடினார்கள். இந்த எளிய நாட்டுப்புற வாழ்க்கைச் சித்திரத்தை இன்று எத்தனையோ மாற்றங்கள் மாற்றிவிட்டன. அன்று பெருமைக்குரியவராக இருந்த நாட்டுப்புறப் பெண்டிர், இன்று அன்றாடம் மேம்பட்ட வாழ்வுக்குப் போராடும் முகமறியாப் பெருங்கூட்டத்தில் கலந்து உருவின்றிக் கரைந்து போய்விட்டார்கள்.

இன்றையத் தமிழ் மகளிர் அச்சங் கொள்வதற்குப் பல காரணங்கள் இருப்பினும், நம்பிக்கை கொள்வதற்கும் காரணங்கள் உள்ளன. தமிழ் மகளிர் இன்று ஒரு திருப்புமுனையில் நின்று கொண்டிருக்கிறார்கள். இதனை அவர்களே உணர்ந்திருப்பது, ஒரு நம்பிக்கையூட்டும் செய்தியாகும். வேறு சில அறிகுறிகளும் இந்த நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்றன. பெரும்பாலான மகளிர் இதழ்கள், இல்லறப் பெண்டிரின் நல்லற பாங்கினை எடுத்துரைப்பதுடன், மகளிரைப் பாதிக்கும் சட்டங்கள், மகளிரின் உளவியல் சிக்கல்கள், திரிபானநெறிமுறைகள் பெண்கள் வாழ்வை நாசமாக்கும் வீதம் ஆகியவை பற்றிய விவாதங்களுக்கும் இடமளிக்கின்றன. சமையற்கலை, பூ தையல் வேலை, ஆடைகள் தைத்தல் போன்றவை பற்றிய செய்திக் குவியல்களுக்கிடையே இந்தச் சிக்கல்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடம் சொற்பமே. எனினும், அடுக்களையும் குடுமபமும் ஆக்கிரமித்திருந்த இடத்தில் இந்த அளவுக்கேனும் இவை இடம்பிடித்திருப்பதுமகிழ்ச்சிக்குரியதாகும். செய்தித் தொடர்புச் சாதனங்களில், அவ்வப்போது அறிவு வேட்கை கொண்ட மகளிர் சித்திரிக்கப்படுகின்றனர்.

மகளிர் தங்களைக் கண்டுணரச் செய்திடும் நடவடிக்கைகளின் தொடக்க நிலைகளில் தாய்சேய் பாதுகாப்புத் திட்டங்களில் கவனம் செலுத்தப்பெற்றது. இத்திட்டங்கள், மரபுவழித் தேவைகளை நிறைவுசெய்து, முந்தைய அறப் பணிகளுக்கும் விரிவுபடுத்துவதை நோக்மாகக் கொண்டிருந்தன. இன்றுள்ள *மகளிர் மக்களாட்சி முன்னணி*, பெண்ணு*ரிமை* இயக்கம் போன்ற அமைப்புகள், மகளிர் பற்றிய தோற்றத்தை மாற்றியமைக்க உறுதிபூண்டு, அதற்காக பாடுபட்டு வருகின்றன. பெரும்பாலான மகளிர் இன்னும் வானத்தை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்; சிறகடித்து பறந்துவிட அவர்கள் இன்னும் துணியவில்லை. அவர்களது இறகுகள் கத்தரிக்கப்பட அவர்கள் சிறகடித்துப் பறந்திடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

முப்பெரும் அறிவியலார்

சர் சந்திரசேகர வெங்கட்ட ராமன் (1888-1970) ஒளிச் சிதறல்களையும், 'ராமன் விளைவு' என்பது பற்றியும் கண்டிபிடித்ததாக இவருக்கு 1930இல் நோபல் இயற்பியல் பரிசு வழங்கப் பெற்றது. ஒளிக்கதிர் நீர்ப்பொருளினூடே அல்லது வடிவினூடே செல்லும் போது சிதறுகின்றது என்றும் சிதறிய ஒளியின் ஒரு பகுதியின் அலை வெண் மாற்றம் சிதறவைக்கும் மூலக்கூற்றின் அமைப்பை அறிய வழிசெய்கின்றது. திண்பொருள், நீர்ப்பொருள், வாயுக்கள் ஆகிய பல்வேறு பொருள்களின் அமைப்பையும் இயல்புகளையும் அறிவதற்கு 'ராமன்விளைவு' மிகுதியாகப் பயன்படுகின்றது. திருச்சிராப்பள்ளியில் பிறந்த இவர் 'இண்டியன் ஜர்னல்ஆப்ஃபிசிக்ஸ்' எனும் இதழைத் தொடங்கி இந்திய அறிவியல் கழகத்தை நிறுவினார்.

சீனிவாச ராமானுஜம் (1881 - 1920) இக்கால கணிதமேதைகளுள் ஒருவர். ஈரோட்டில் தென்னிந்திய பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் தமது 15ஆம் வயதில் ஜி. எஸ். கார் எழுதிய ''சினாப்ஸிஸ் ஆஃப் எலிமெண்டரி ரிசல்ட்ஸ் இன் ப்யூர் அண்டு அப்லைடு மேத்தமாடிக்ஸ்: எனும் நூலிலுள்ள 6,000தோற்றங்களின் விளைவுகளைச் சரிபார்த்தபோது இவருக்கு அறிவார்வம் எழுந்ததினால் தாமே தேற்றங்களையும் வகுக்கத் தொடங்கினார். 1911இல் 'ஜர்னல் ஆஃப் இண்டியன் மேத்தமாட்டிக்ஸ்' எனும் இதழில் தமது முதல் கட்டுரையை வெளியிட்டார். 1914இல் கேம்ப்ரிட்ஜில் ட்ரினிட்டி கல்லூரியில் பணியாற்றிய பிரிட்டிஷ் கணித இயலார் ஜி. எம். ஹார்டியுடன் பணியாற்ற இங்கிலாந்து சென்றார். ராமானுஜத்தின் கணித அறிவு தனிச் சிறப்பு வாய்ந்தது. உலையின் வெப்பத்தை அறிய இவரது பணி பயன்படுகின்றது. அணு உலைகளை அறிந்து ஒழுங்குபடுத்தும் தன்மையை ஆராய இவருடைய கொள்கைகள் ஆயப்படுகின்றன.

சுப்பிரமணியன் சந்திரசேகர் (பிறப்பு 1910); வானியல் இயற்பியலாரான இவர் நோபல் பரிசு பெறும் இரண்டாவது தமிழராவார். சர். சி. வி. ராமனின் மருமகனான இவர் தனது 'தியரட்டிகல் ஸ்டடீஸ் ஆஃப் தி ஃபிசிக்கல் ப்ராசஸஸ் ஆஃப் இம்பார்ட்டன்ஸ் டு தி ஸ்ட்ரக்சர் அண்டு இவல்யூஷன் ஆஃப் ஸ்டார்ஸ்' நூலிற்காக 1983ஆம் ஆண்டு நோபல் இயற்பியல் பரிசைப் பெற்றார்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பயணம் செய்யும் நேரங்களில் பெண்களுக்கென்று தனிப் பேருந்துகளை ஓட்டுகிறது மாநில அரசு.

மரபும் புதுமையும் எவ்வாறு ஒத்திசைய முடியும் அல்லது பிணக்கைத் தோற்றுவிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திருமணத்தைக் கருதலாம். எந்தச் சமுதாயத்திலும் ஒருவர் வாழ்வில் முக்கிய நிகழ்ச்சியாக அமைவது திருமணம். ஆனால், தமிழகத்தில் ஆண் பெண் உறவைப் பற்றியும், அதற்குச் சமுதாயத்திலுள்ள சிறப்பிடம் பற்றியும் தமிழ்ச் சமுதாயம் கொண்டிருக்கும் கருத்தோட்டத்தை வெளிப்படுத்துவது திருமணம். இப்போதும் பெரும்பாலான திருமணங்கள் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மணம் செய்து கொள்ள வேண்டியவர்களுடைய ஜாதகங்களே (எட்டாம் பக்கத்தில் புகைப்படக் கதையைக் காண்க) திருமணங்களை தீர்மானிக்கின்றன.

தமிழர் வாழ்வில் சமயம் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. உண்மை சமயத்திலும், இயற்கை கடந்த நம்பிக்கைகளிலும் உள்ள பற்று திட்டவட்டமாகப் பெருகி வருகிறது எனலாம்; பொருளாதார குறிக்கோள்களும் பாதுகாப்பும் சாதாரண மனிதனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் இந்த நாட்களில், உடற்காப்புக்கும் பொருளாதார வசதிக்கும் பயன்படும் காப்பீடாகச் சமய நம்பிக்கை பயன்படுகிறது போலும்.

புதிதாகக் கல்வி கற்று வேலைக்குப் போகும் ஆண்களும் பெண்களும் சமயச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். மின்னணு இயல் பரவிப் படர்வதால் சமயத்துறை நிகழ்ச்சிகளுக்கு பேருக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒலி பெருக்கிக் கருவிகளும், இசைத் தட்டுகளும், நாடாச் சுருள் ஒலிப்பதிவுகளும் (Cassette) வழிபாட்டு இடங்களில் படையெடுத்துவிட்டன. வீட்டிலோ தொழிலிலோ எந்த முக்கியமான நிகழ்ச்சியாயிருந்தாலும் பஞ்சாங்கத்தைப் பார்த்து நல்ல நேரத்தைக் கணிக்கிறார்கள். ராசி பலன் பற்றிய செய்திகளைத் தாங்கி இதழ்கள் வருகின்றன.

வழிவழியாக வந்த தமிழர் பண்பாடு ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கே உரியது என்பது பொருந்துமா? இலக்கியத்திலாகட்டும், இசை அல்லது தத்துவத்திலாகட்டும், ஆதிக்கக் குழுவின் சிந்தனையே புலனாகிறது என்பது சரியா? சங்க இலக்கியத்தில் சாதி வேற்றுமைகள் குறிப்பிடப்பெறவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் பெரும்பாலான மக்களுக்கு, வளமாக வளர்த்த கலைகளும் சமய வழிச் சிறந்த கருத்தாக்கங்களும் எட்டாக்கனியாகவே இருந்தன. நாடு விடுதலை அடைத்ததின் விளைவாக சமுதாய சமத்துவ உணர்வு பெருகிக் கூர்மையடைந்து, பெரும்பாலான மக்கள் தமது கருத்தைப் புலப்படுத்துவதற்கு உரிய வாய்ப்பினைப் பெற்றார்கள். விரைவான பொருளாதாரத்தொழில் நுட்ப முன்னேற்றத்தாலும், நகரச் சமூகங்களுடைய பண்புகளை ஏற்பதாலும் உள் நாட்டுப் பண்பாடு படிப்படியாக அழியக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது வழிவழியாக ஏற்ற மாற்றத்தோடு நின்று நிலைத்த வாழ்வியல் நெறிகளும், கலைகளும் மறையாது பேணி தமிழ்ப் பண்பாட்டின் உண்மையான சாரத்தைப் பராமரிப்பது முக்கியமான பணி ஆகும்.

(பதினோராம் பக்கத் தொடர்ச்சி)

போது பழக்கத்தில் வருகிறது. குழந்தைகளைப் பெற்றோர்கள் கவனித்துப் பள்ளிக்கு அனுப்பிவைப்பது கிராமத்தில் பெரும்பாலும் இல்லை. குழந்தைகள் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாகரிகத்தின் மாற்றங்கள் கிராமங்களிலும் வந்துகொண்ருக்கின்றன. நிலையிலா திரையரங்குகள் இப்போது வழக்கமாகிவிட்டன. மின்சாரம் கிராமத்தை ஒலிப்படுத்தி விட்டது. அதனால் ஒலி பெருக்கிகளும் கத்த ஆரம்பித்துவிட்டன. எளிய அலங்கார சாதனங்களும் புதுவகை ஆடைகளும் கிராம வாழ்வில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்களது வாழ்வும் சாரவில்லை என்றாலும்கூட சினிமாவும், அரசியலும் அவர்களது மனங்களைக் கவ்விக் கொண்டிருக்கின்றன. பெட்டிக் கடை முன்னால், சிகை அலங்கார கடை பெஞ்சுகளில், மரத்தடிகளில் சினிமாவையும், அரசியலையும் கூடிக் கலந்து பேசுகிறார்கள்.

கிராமத்தில் பழைய வாழ்க்கை முறைகள் முற்றாக மாறிவிட்டன என்று சொல்வதற்கில்லை. ஊர்ந்து கொண்டிருந்த காலம் இப்போது நடக்க ஆரம்பித்திருக்கிறது. தலைதெறிக்க இன்னும் ஓட ஆரம்பிக்கவில்லை. வீட்டுத் திண்ணைகளில் சாவகாசமான பேச்சுக்களை இப்போதும் கேட்கலாம். ஆறுகளிலும், குளங்களிலும் பெண்கள் ஆற அமரக் குளிக்கிறார்கள். இடுப்புக் குடங்களில் பெண்கள் வரிசையாக குடிநீர் கொண்டு போகிறார்கள். உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் முற்காலத்தில் ஏற்பட்ட பரிவுணர்வு இன்றும் கிராமங்களில் தொடர்கிறது. பசுக்கள், எருமைகள், ஆடுகள், கோழிகள், நாய்கள் வளர்க்கப்படுகின்றன. வீடுகளில் இன்றும் திருகல் சுற்றுகிறது. அம்மிகளில் பொருட்கள் அரைக்கப்படுகின்றன. ஆட்டுக்கல் சுழல்கிறது. உடல் நலமிக்கப் பெண்கள் உலக்கையைத் தூக்கிப் போட்டு நெல் குத்துகிறார்கள். அவித்த நெல்லை தெரு வாசலில் பரப்புகிறார்கள்.

குழந்தைகளின் தொடுவுணர்வு போன்ற மலைக் காற்றை இன்றும் கிராமங்களில் அனுபவிக்க முடிகிறது.

(முப்பத்திமூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

தையை நாடிச் செல்கின்றான். அவன் மீண்டும் தலைவியிடம் திரும்புங்கால், இருவருக்குமிடையே ஊடல் நிகழ்கிறது அளவோடு அமைந்த ஊடல் காதலரின் கூடல் இன்பத்தை மிகுவிக்கும் எனக் குறள் (1302) கூறுகின்றது.

''உப்பமைந்தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்''

இந்த ஊடலை சங்கப் புலவர்கள் நிறையப் பாடியிருக்கிறார்கள். ஆலங்குடி வங்கனார் பாடிய குறுந்தொகைப் பாடல் (8) இதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

''கழனி மாஅத்து விளைந்து உகு தீம் பழம்
பழன வாளைகதூ உம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறித் தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல
மேவன செய்யும் தன்புதல்வன் தாய்க்கே''

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியதாக அமைந்த இப்பாடலில், பரத்தையின் பொறாமையுணர்வு வெளிப்படுகிறது. நிகழ்ச்சியின் இயற்கைச் சூழல் இதில் கவினுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவன் 'ஊரன்' எனப்படுகின்றான்; கழனி, பழமை, வாளை என்பன நீர் வளம்மிக்க வயல்களைக் குறிக்கின்றன. 'மாஅத்து விளைந்து உகு தீம்பழம்' என்பதால், மாம்பழம் நன்கு விளைந்து பழுத்திருக்கும் கோடைகாலம் உணர்த்தப்படுகிறது, இதில், தலைவன் தானாகவே தன்னிடம் மயங்கியதாகப் பரத்தை கூறுகின்றாள். 'தலைவன் என்னிடம் தான் வீறாப்புப் பேசுகின்றான்; தன் இல்லத்தில், கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல மனைவியின் சொல்லுக்கு ஆடுபவன் என்று எள்ளி நகையாடுகிறாள்.

நெய்தல் நிலம் பற்றிய வருணனை, இயற்கையை வழுவாமல் உள்ளபடியே சித்தரிக்கும் சங்கப்பாடல்களின் சீர்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. நெய்தலுக்குரிய பிரிதல் ஒழுக்கத்தை மையமாகக் கொண்டு, அந்நிலத்தில் வாழும் மீனவ மக்களின் வாழ்க்கை முறை சொல்லோவியமாகத் தீட்டப்படுகின்றது. கடலும் கடல் சார்ந்த இடமுமே நெய்தல். அங்கு கடற்கரையில் மீன் வலைகள் உலர்த்தப்பட்டன; படகுகள் கரையில் இழுத்துவிடப்பட்டிருக்கின்றன; நண்டுகள் ஓடித் திரிகின்றன; வண்டியின் சக்கரம் மணலில் புதையுண்டு கிடக்கிறது; மீன்களைத் துண்டங்களாக வெட்டி கருவாடாக்க உலர்த்தும் நாற்றம் எங்கும் நிறைந்திருக்கிறது. கருவாட்டைக் கொத்திச் செல்ல பறவைகள் வட்டமிடுகின்றன. அழகிய நங்கையர் புதர்களின் மறைவிலிருந்து விருப்புடன் அவற்றைக் காவல் காக்கின்றனர். தாறுமாறாகக் கட்டப்பட்டுள்ள வைக்கோற் குடிசைகளின் வெடிப்புகளினூடே இரவு நேரத்தில் காற்று நுழைந்து சீழ்க்கையொலி எழுப்புகின்றது.

சங்கப்பாடல்கள் நம்முடன் நேரடியாக உரையாடுவது போல் தோன்றுகின்றன. இலக்கியக் கொள்கைகள் இயற்காட்சி வழுவிய மரபுகளை உயர்வு நவிற்சியாய் உயர்த்திக்காட்டும் அதே சமயத்தில், சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் இயல்பு நவிற்சியைச் சித்தரிக்கின்றன. இப்பாடல்களில் சொல்லழகும் அணியழகும் நிரல்பட விரவி இருக்கின்றன. இறைச்சி, உள்ளுறை உவமம் என்னும் அணியிலக்கண உத்திகள் வாயிலாக, இயற்கை வருணனை மூலமாகவே சில நிகழ்ச்சிகளின் உட்பொருள்கள் குறிப்பால் உணர்த்தப் பெறுகின்றன.

மொத்தமான உவமைகளும், அவற்றின் உட்பொருள்களும், அவை உணர்த்தும் மரபுகளும், கூற வந்த கருத்துகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கத் துணைபுரிகின்றன. நீண்ட கொள்கை விளக்கங்களுக்கு மாறாக, இப்பாடல்கள் சொற்செட்டும் பொருட்செறிவும் கொண்டு, உட்பொருளையும் புலனெறி வழக்குடன் உவமைகள் வாயிலாக இணைத்துக்கூறி, நூல்நயம் உணரும் திறனுடையோரின் நுண்மான் நுழைபுலனுக்கு உரைகல்லாக மிளிர்கின்றன. சங்கப் பாடல்கள் நெடுங்கால வாய்மொழி மரபின் மாபெரும் சாதனை என்று கூறுவர். எனினும், காலத்தை வென்று இன்றுவரை வாழும் இச் சங்கப் பாடல்கள், சீரிளமைத் திறன் குன்றாமல் என்றும் உயிர் வாழும் ஏட்டுக் கவிதை இலக்கியங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழில்: இரா. நடராசன்

தமிழரின் மலர்ப் பண்பாடு

பண்டைத் தமிழர் வாழ்வில் அணிகலனாகவும், காதலிலும் போரிலும், வழிபாட்டிலும் அழகியல் மற்றும் குறியீட்டுச் சின்னங்களாகவும் மலர்களும் இலைகளும் விலங்கின. ஆடவரும் பெண்டிரும் பல்வேறு தருணங்களில் மலர்மாலைகளை அணிந்தனர். கோவை, (மாலை) அணிந்தமையால் பெண் 'கோதை' என்றே அழைக்கப்பெற்றாள். தமிழ் ஆடவர்கள் தலைமாலைகளைச் சூடினர். பண்டையக் கிரீசிலும் ரோமிலுங்கூட இப்பழக்கம் இருந்தது. காதலொழுக்கத்தின் போது காதலிக்குக் காதலன் தனது சொந்தப் பூஞ்சோலையில் பூத்த மலர்களையும் இலைகளையும் மாலையாகத் தொடுத்துப் பரிசளித்தான். பண்டையமகளிர் அணிந்த அணிகலன்கள் இயற்கை மலர்களும், இலைகளும், கொடிகளும், பிற்காலத்தில் பொன் வெள்ளியில் செய்த நகைகளும் பூக்கள், இலைகளின் வடிவிலேயே அமைந்தன. மலர்கள் இலைகளின் பெயர்களையே இந்நகைகள் ஏற்றன.

காதலில் மட்டுமின்றிப் போரிலும் மலர்களைப் பயன்படுத்தினர். போர் மறவர்கள் பல்வேறு மலர்களைச் சூடிப் பல்வேறு போர்ச் செயல்களில் ஈடுபட்டனர் என்று தொகை நூல்கள் கூறுகின்றன. மலரின் தன்மையும், நிறமும் போர்ச்செயலின் தன்மையை எடுத்துக் காட்டின. பகை மேற்செல்லும் படைவீரர் பகை அரசனின் ஆநிரை கவர்வதற்காகச் செந்நிற வெட்சிப் பூவினைச் சூடிச் சென்றார்கள். இவர்கள் அணிந்திருந்த வெட்சி மாலைகள் செவ்வானம் போல் சிவந்திருந்ததாக ஒரு புலவர் பாடுகின்றார். முற்றுகையிலிருந்து கோட்டையை மீட்கும் வீரர்கள் காஞ்சிப் பூவினை அணிந்திருந்தனர். வெற்றி பெற்ற வீரர்கள் வாகை சூடினர். போர்க் கலையில் பத்து வகைச் சூழ்ச்சி முறைகள் இருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனி மலர் சூடுவது மரபாக இருந்தது. கிரேக்க-ரோமன் உலகிலும் புன்னை மலர் வெற்றிச் சின்னமாகக் கருதப் பெற்றது.

பண்டைத் தமிழக மூவேந்தர்கள் தனித்தனி அடையாளப் பூக்களைக் கொண்டிருந்தனர். பாண்டியர்க்கு வேப்பம் பூவும், சோழர்க்கு 'ஆர்' என்னும் அத்திப்பூவும், சேரர்க்குப் போந்தையும் (பனம் பூ) அடையாளப் பூக்களாகும்.

—தனிநாயக அடிகள்

(முப்பத்தைந்தாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒருவர். மௌனியின் உலகம் அகமுக நோக்குடையது. அவருடைய கதைகளில் புலனாகும் உணர்ச்சிச் செறிவை வேறெங்கும் காணமுடியாது. ஆண்-பெண் உறவுகளையும் சாவையும் கருப் பொருளாகக் கொண்ட கதைகளில் இந்த உணர்ச்சிச் செறிவைப் படைக்க அவரால் முடிந்தது. எளிய உரைநடையென மயங்கச் செய்யும் ஆற்றல்மிக்க நடையால் இதனைச் சாதிக்கின்றார் மௌனி.

பலவகைப் பண்புகள் நிறைந்த தி. ஜானகிராமன் செல்வாக்குமிக்க இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர். அவரிடம் மரபின் செல்வாக்கும், தாம் சித்தரிக்கும் வாழ்வுக்கு கனவுலகு இயல்பை அளிக்கும் திறனும் இணைந்திருக்கும் விந்தையைக் காண்கிறோம். ஆண்-பெண் உறவு அவரையும் கவர்ந்தது. ஆனால் அந்த உறவின் புதிர்களைப் பாமரர் சுவைக்கேற்ப எழுதும் எழுத்தாளன் போல மட்டுமீறிய அளவுக்கு எளிமைப் படுத்தும் போக்கையும், மௌனியின் உட் சிக்கலையும் நயமாகச் சமநிலைப் படுத்துவார் ஜானகிராமன். தஞ்சை மாவட்டக் கிராமத்தில் பிறந்த அவர், தஞ்சைக் கிராம வாழ்வின் கவர்ச்சியான பண்புகளை அதன் வேளாண்மைப் பின்புலம், கோயிற் பண்பாடு, இசை முதலியவற்றை—சித்திரிப்பதால் அவரது எழுத்தின் கவர்ச்சி கூடுகிறது.

ஆயினும், சிறுகதைகளே அவருக்கு மிகப்பெரிய இலக்கிய வெற்றியைப் பெற்றுத் தந்தன. இந்த மரபில் படைப்பாற்றல் மிகுந்த சில எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: அசோகமித்திரன் வண்ண நிலவன், வண்ணதாசன், சா. கந்தசாமி, ராஜநாராயணன் ஆகியோர். இவர்கள் புதுமைப் பித்தனுக்கும், இடதுசாரி எழுத்தாளர்களுக்கும் இடைப்பட்ட நிலையினர். அசோகமித்திரனும் கந்தசாமியும் தமது குறைத்துக் கூறும் நடையின் மூலம் நடுத்தர வர்க்கத்து அன்றாட வாழ்வின் கவர்ச்சியையும் பிடிபடா இயல்பினையும் வெளிப்படுத்துகின்றனர். மட்டுமீறிய சலனங்களுக்கு அவர்கள் இடம் தருவதில்லை; நடையின் வீச்சும் குறுகியதே. எனினும் அவர்களது உணர்ச்சிச்செறிவு அனுபவத்தின் நேர்மையான பிரதிபலிப்பாகும்.

வண்ணதாசனும், வண்ணநிலவனும் பல ஒற்றுமைகளை உடையவர்கள். இருவருமே 1950-க்குப் பின் எழுதத் தொடங்கியவர்கள். இருவருடைய பின்புலங்களும் ஒப்புமை உடையவை. இவர்கள் தம்மைச் சுற்றியுள்ள வாழ்வின் நடப்பைச் செவ்வையாக உணரும் தன்மையர். மக்களின் எளிய இன்பங்களும், இழப்புக்களும் இருவருக்கும் முக்கியமானவை; ஆனால் வண்ணதாசன் அவற்றுக்கு வியப்பாவேசத் தன்மை தருவார். எளிய மாந்தர்களின் நிரந்தரமான நல்லியல்புகளையும், ஈர்ப்புத்தன்மையையும் அவர் சித்தரிப்பதில், மனக்கோட்டை கட்டும் பாங்கு சற்றுப் புலனாகிறது. வண்ணநிலவனின் களம் கூடுதலான விரிவுடையது. மனித உறவுகள் பொருளாதார நிலைமைகள், பயபக்தியோடு உலகை நோக்குவதால் உண்டாகும் சூழல்கள் ஆகியவற்றின் உளவியல் பாதிப்புகளில் அக்கறை உடையவர் வண்ணநிலவன்.

'வாசகர் எண்ணங்கள்'

புதிய பகுதி

அறிவிப்பு

'யுனெஸ்கோ கூரியர்' வாசகர்களுக்கு ஒரு இனிப்பான செய்தி. அடுத்துவரும் ஒவ்வொரு கூரியர் இதழிலும் 'வாசகர் எண்ணங்கள்' என்ற புதிய பகுதி இடம் பெறவிருக்கிறது. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பகுதியில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' இதழ்களைப் பற்றி வாசகர்கள் தங்கள் கருத்துக்களை விமர்சன வடிவில் கடிதமாக எழுதலாம். ஏற்புடைய கடிதங்கள் இப்பகுதியில் இடம்பெறும்.

— நிர்வாக ஆசிரியர்



'நியூ ட்ரெண்ட்ஸ் இன் ஸ்கூல் சைன்ஸ் எக்குவிப்மெண்ட்'' உலக முழுவதும் அறிவியல் கருவிகள் பயன்படும் புதிய போக்குகளைக் காட்டுகிறது. அறிவியல் கல்வி எல்லாச் சிறுவருக்கும் நடைமுறைப் பயனளிக்க வேண்டுமெனும் தேவையை உணர்த்துகிறது.

ஆய்வுக்கூட வேலையும் நடைமுறை நடவடிக்கைகளும்; பள்ளி அறிவியல், தொழில்நுட்பக் கருவிகளின் உற்பத்தி; ஆசிரியருக்கும் தொழில்நுட்ப வல்லுநருக்கும் பயிற்சி; தகவலும் செய்தித்தொடர்பும் ஆகிய 4 பகுதிகள் உள்ளன.

பதிப்பாசிரியர் நார்மன் கே. லோ

161 பக்கங்கள் **50 ஃபிரெஞ்சு ஃபிராங்க்**

கிடைக்குமிடம்:

''1983 கேட்டலாக் ஆஃப் யுனெஸ்கோ பப்ளிக்கேஷன்ஸ்' கீழ்க்கண்ட எல்லாப் பொருள்கள் பற்றிய யுனெஸ்கோ நூல்கள், இதழ்கள் ஆகியவற்றின் பட்டியலைத் தருகின்றது; பொதுப் பார்வை நூல்கள்: கல்வி, அறிவியல், சமூக இயவ், பண்பாடு செய்தித் தொடர்பு, ஆவணத் தொகுப்பு, நூலகங்கள், ஆவணக் கூட்டங்கள், அரசாங்க வெளியீடுகள். யுனெஸ்கோ வெளியீடுகளின் கீழ்க்கண்ட விற்பனையாளரிடம் இந் நூல் கிடைக்கும்.

'யுனெஸ்கோ கூரியர்'

'தமிழ்ப் பண்பாடு' சிறப்பிதழ்

உலகின் 27 முக்கிய மொழிகளில் வெளிவருகிறது

உலக கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை விளக்கும் சிறப்பு மலராக தனது சர்வதேச மாத இதழாகிய 'யுனெஸ்கோ கூரியர்' இதழைத் தமிழ்ப் புத்தாண்டு அன்று வெளியிடுகிறது.

உலகத்தின் மிக மூத்த பண்பாடுகளில் ஒன்றாக உலக ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்படும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை உலக மக்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்களோடு படவிளக்கங்களுடன் வெளியிடவிருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற தொல்பொருளாய்வாளர்களும் தமிழறிஞர்களும் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் தமிழரின் பெருமையை, தமிழ்மொழியின் சிறப்பை, தமிழ்ப் பண்பாடு, கலை, இலக்கியத் தனித்தன்மைகளை, உலக நாகரிக வளர்ச்சியில் தமிழரின் பங்கு பணிகளை ஆதாரபூர்வமாக உலகம் முழுமையும் அறிந்து கொள்ள 'யுனெஸ்கோ கூரியர்' அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்டுச் சந்தா தனிப்பட்டவர்களுக்கு	ரூ. 21/-
கல்வி நிலையங்கள், பொது நூலகங்களுக்குச் சலுகைச் சந்தா	ரூ. 19/-

சந்தாதாரராக விரும்புவோர் தொடர்பு கொள்க:

'யுனெஸ்கோ கூரியர்'

தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்,

18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை, சென்னை-600 031.



நிழற்படம் © பாஸ்கரன் சென்னை

ஒவ்வொரு ஊரிலும் கோயில்களும், கிராம வீரரையும் பாதுகாக்கும் தெய்வங்களையும் குறிக்கும் வண்ணச் சிலை-
களும் இருப்பது தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவின் பிறபகுதிகளிலும் கிராம வாழ்க்கையில் காணப்படும் சிற-
ப்பியல்பாகும். மேலே: குதிரையிலேயமர்ந்த கிராமத் தெய்வத்தின் உருவச்சிலை நெற்கதிரடிக்கும் கிராமவாசிகளி-
நடுவே உயர்ந்து விளங்குகின்றது.